கல்கி



KALKI அக்டோபர் 2, 1955 4 அணா



நாளுக்கு நாள் அதிக மிருது
வான எழிலோங்கும்
சருமம் . . .
கேடில்* கலந்த
ரெக்ஸோனா
மறைந்திருக்கும்
உங்கள் அழகை
வெளிப்படுத்தட்டும்
ரெக்ஸோனாவின் கேடில் கலந்த நுரையை உங்கள் சருமத்தில் மெதுவாகத் தேய்த்து பிறகு கழுவுங்கள். உங்கள் சருமம் நாளுக்கு நாள் அதிக மழுமழுப்பாகவும், மிருதுவாக வளர்வதையும் காண்பீர்கள். அதனால் புதுப் பொலிவுடன் விளங்குவீர்கள்.
சருமத்திற்கு ஊட்டமளித்து மிருதுவாக்கும் எண்ணெய்களின் பிரத்தியேகக் கலவையின் ரெஜிஸ்டர் செய்யப்பட்ட பெயர்.
பெரிய சைஸிலும் கிடைக்கிறது
Rexona
ரெக்ஸோனா
கேடில் கலந்த சோப் இது ஒன்றே
RP. 131-50 TM

கல்கி

மலர் 15
இதழ் 9

மன்மத
புரட். 16


பொருளடக்கம்

1955 அக்டோபர் 2

வளர் மொழி வாழியவே!	(தலையங்கம்)	...	3
மாணிக்கமே வருக! வருக!	...	...	4
ஐ.நா. சபையில் அமெரிக்காவின் பிடிவாதம்	...	...	4
ஐந்தாண்டுத் திட்டம் (கார்ட்டூன்)	சாமா	...	5
காந்தி ஜயந்தி	ராஜாஜி	...	6
என்ன சேதி?	...	...	9
சக்கரவர்த்தித் திருமகன்	ராஜாஜி	...	12
வட இந்திய யாத்திரை—10	பகீரதன்	...	18
கவலை தீர்ந்தது	கே. ஜயலக்ஷ்மி	...	26
சிவன் கீர்த்தனைகள்	செம்மங்குடி ஸ்ரீனிவாச ஐயர்	...	30
விளையாட்டு அரங்கம்	பந்து	...	32
ஆற்றங்கரையினிலே	பேராசிரியர் ரா. பி. சேதுப்பிள்ளை	...	35
கல்கியின் அமரதாரா	ஆனந்தி	...	39
சுயம்வர சுந்தரி	க. பஞ்சாபகேசன்	...	51
தெய்வ சக்தி	மீனாகுமாரி	...	62
பர்மா ரமணி (பாப்பா மலர்)	அழ. வள்ளியப்பா	...	67
டி. கே. சி.யின் கடிதங்கள்	...	...	71
ரவி சந்திரிகா	சோமு	...	73

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; சம்பவங்களும் கற்பனையே.

இந்தியன் பாங்க், லிமிடெட்

(ஸ்தாபிதம் :  1907)

தலைமை ஆபீஸ் : "இந்தியன் பாங்க் பில்டிங்ஸ்", வடக்கு பீச் ரோடு, மதராஸ்-1

தென் இந்தியாவில் எல்லா முக்கிய இடங்களிலும், பம்பாய், கல்கத்தா, புது டில்லி முதலிய இடங்களிலும் சப் ஆபீஸ்கள், கிளைகள் இருக்கின்றன.

மூலதனம்

அங்கீகரிக்கப்பட்டது	...	ரூ.	1,00,00,000
வழங்கப்பட்டது	...	ரூ.	72,00,000
செலுத்தப்பட்டது	...	ரூ.	57,80,000
ரிசர்வ் & இதர நிதிகள்	...	ரூ.	76,50,000
டெபாஸிட்டுகள் (31-12-54-ல்)	...	ரூ.	24·85 கோடிகள்

எல்லாவிதமான பாங்கிங் அலுவல்களும் செய்யப்படும்

என். கோபால அய்யர், செக்ரடரி

ஜம்மியின் லிவர்க்யூர்

குழந்தைகளின் ஈரல், குலைக்கட்டிகளுக்கு



நோயாளிகளின் சௌகரியத்தை முன்னிட்டு எமது டாக்டர் கீழ்க்குறித்த ஊர்களுக்கு அதனதன் எதிரே குறித்த தேதிகளில் பிரதி மாதமும் விஜயம் செய்வதால் அவரிடம் ஆலோசனை பெறலாம்.

ஆலோசனைநேரம் : காலை 9-லிருந்து 11 மணி வரை : மாலை 3-லிருந்து 5 மணி வரை

இடம்	தேதி		இடம்	தேதி	
கரூர்	1	காலை 10 - 12 மணி	திருநெல்வேலி ஜங்ஷன்	10	காலை & மாலை
சேலம்	2	காலை & மாலை	திருநெல்வேலி ஜங்ஷன்	11	காலை
ஈரோடு	3	காலை 10 - 12 மணி	ஸ்ரீவைகுண்டம்	11	மாலை
திருப்பூர்	3	மாலை	அம்பாசமுத்திரம்	12	காலை
கோயமுத்தூர்	4	காலை & மாலை	தென்காசி	12	மாலை
பாலக்காடு	5	காலை	திருவனந்தபுரம்	13	காலை & மாலை
திண்டுக்கல்	6	காலை	ராஜபாளையம்	14	காலை
பெரிய குளம்	6	மாலை	சிவகங்கை	14	மாலை 4-5 மணி
மதுரை	7 & 8	காலை & மாலை	காரைக்குடி	15	காலை & மாலை
கோவில்பட்டி	9	காலை 10 - 12 மணி	தேவகோட்டை	16	காலை
தூத்துக்குடி	9	மாலை	புதுக்கோட்டை	16	மாலை

ஜம்மி வெங்கடரமணய்யா & சன்ஸ்

சென்னை-4 ★ (தெப்பக்குளம்) திருச்சிராப்பள்ளி ★ (பெரிய தெரு) கும்பகோணம்



மலர் 15
இதழ் 9

தமிழ்த்திரு நாடு தன்னைப் - பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார்

மன்மத ௵
புரட்டாசி 16

வளர் மொழி வாழியவே!

இலங்கை இந்தியர்கள் சம்பந்தப்பட்ட வரையில், இரண்டு விஷயங்கள் வெகுகாலமாய்த் தீராத பிரச்னைகளாக இருந்து வந்துள்ளன.

ஒன்று, இலங்கை இந்தியர்களின் அரசியல் உரிமை.

இவ் விஷயத்தை ஒட்டிச் சுமுகமான முடிவு காண்பதற்காக இது வரையில் எத்தனையோ பேச்சு வார்த்தைகள் நடந்தன; எத்தனையோ கடிதங்களும் பறந்தன; எத்தனையோ உடன்பாடுகளும் ஒப்பந்தங்களும் ஏற்பட்டன.

ஆனால், இன்னும் அவ் விஷயமாக யாதொரு திருப்திகரமான முடிவும் உண்டாகவில்லை.

அதற்கு மாறாக, இன்று பாரத நாடு சமாளிக்க வேண்டிய பெரும் பிரச்னைகளில் இலங்கை இந்தியர் அரசியல் உரிமையும் ஒன்றாகக் கருதப்படுகிறது.

இலங்கை இந்தியர்களுக்குக் கலக்கத்தைக் கொடுத்து வந்த மற்றொரு விஷயம் அரசாங்க மொழி சம்பந்தப்பட்டது.

இலங்கையில் உள்ள மொத்த ஜனத்தொகையில் ஐந்தில் ஒரு மடங்குக்கு மேற்பட்ட மக்கள் தமிழைத் தாய்மொழியாகக் கொண்டிருக்கிறார்கள்.

அந்த நாட்டில் பல நூற்றாண்டுகளாகச் சிங்கள பாஷையைப் போல் தமிழும் லட்சக் கணக்கான ஜனங்கள் பேசும் முக்கிய பாஷையாக இருந்து வந்திருக்கிறது.

எனவே, சிங்களம், தமிழ் இரண்டுமே இலங்கையின் அரசாங்க பாஷைகளாக இருக்க வேண்டும் என்ற கிளர்ச்சி அங்கு ஏற்பட்டதைக் குறித்து ஆச்சரியப் படுவதற்கில்லை.

ஏன், அது மிகவும் தர்ம நியாயமான கிளர்ச்சி என்றே சொல்ல வேண்டும்.

அப்படியிருந்தும், இலங்கை சர்க்கார் தமிழைப் புறக்கணித்து விட்டு, சிங்கள பாஷை ஒன்றையே அரசாங்க பாஷையாக்க உத்தேசித்திருந்தார்கள் என்ற வதந்தி அடிக்கடி தலைகாட்டி வந்தது.

சர்க்கார் செய்து வந்த சில காரியங்களும் அவ் வதந்திக்கு ஆக்கம் அளிப்பதாக இருந்து வந்தன.

சமீப காலமாக, இதன் சம்பந்தமான வாதப் பிரதிவாதங்கள் உச்ச நிலையை அடைந்தன. அதன் விளைவாக, இலங்கை அரசியல் பிரச்னையைப் போல் அரசாங்க மொழிப் பிரச்னையும், தலைமுறை தலைமுறையாக இலங்கையைத் தாயகமாகக் கொண்டுள்ள தமிழ் மக்களிடையே மிகுந்த மனக் கொதிப்பை உண்டு பண்ணியது.

அரசியல் உரிமை விவகாரத்தைப் போல் மொழி உரிமை விவகாரமும் எங்கு பெரிய நெருக்கடியில் வந்து முடியுமோ என்ற பீதியும் ஏற்பட்டது.

நல்ல வேளையாகச் சென்ற வாரம் பிரதமர் சர் ஜான் கோத்தலாவலை இலங்கைப் பார்லிமெண்டில் விடுத்த அறிக்கை அவ் விஷயமாகத் தமிழ் மக்களின் பீதியை அகற்றுவதாக இருப்பதைக் குறித்து மகிழ்ச்சி யடைகிறோம்.

இலங்கைப் பார்லிமெண்டில் தமிழ் அங்கத்தினர் கேட்ட கேள்விக்கு இலங்கைப் பிரதமர் பதிலளிக்கையில், "தமிழ், சிங்களம் இரண்டையும் அரசாங்க பாஷைகளாக நிர்ணயிப்பதே இலங்கை சர்க்காரின் கொள்கை" என்று பிரகடனம் செய்துள்ளார்.

எனவே, இனி இலங்கையில் மொழி விஷயமாகத் தமிழ் மகா ஜனங்களுக்கு இருந்த சந்தேகம் அகன்றுவிடும் என்றும் விரைவில் இலங்கைப் பிரதமரின் வாக் குறுதி ஊர்ஜிதம் ஆகும் என்றும் எதிர்பார்க்கிறோம்.

"ஏழ் கடல் வைப்பினுந் தன் மணம் வீசி
இசை கொண்டு வாழிய வே!"

மாணிக்கமே வருக! வருக!

பாரத குல மாணிக்கம் பண்டித ஜவாஹர்லால் நேரு தமிழ் நாட்டுக்கு விஜயம் செய்கிறார். அவருக்கு 'வருக வருக' என்று தமிழ் மக்கள் சார்பிலே நல்வரவு கூறுகிறோம்.

தமிழகத்தினுள் சென்று அவர் சுற்றுப் பிரயாணம் செய்து பல்லாண்டுகள் ஆகிவிட்டன. சரித்திர காலத்திலே சிங்களம், சாவகம், கடாரம் கொண்ட ராஜ ராஜ சோழனைப் போல், சீனம், ரஷ்யா, யூகோஸ்லாவியா முதலிய நாடுகளில் எல்லாம் தமது அன்பால் மக்கள் மனத்தை வென்ற நமது அருமைத் தலைவர் நேருஜி இங்கே வருகிறார். அவருக்குத் தமிழ் மக்கள் தங்கள் பண்பாட்டுக்கு ஒத்த வகையில் சென்ற விடமெல்லாம் குதூகலமாக வரவேற்பளிப்பார்கள் என்பதில் சந்தேகமில்லை.

இப்பொழுது நேருஜி சென்னைக்கு வருவதன் முக்கிய நோக்கம் காந்தி ஜயந்தி அன்று சென்னைப் பிரம்பூரில் நிர்மாணிக்கப்பட்டுள்ள அற்புத ரயில் பெட்டி செய்யும் பிரம்மாண்டமான தொழிற்கூடத்தைத் திறந்து வைப்பது தான். இந்தத் தொழிற்சாலையைப் பற்றி ஏற்கனவே நமது நேயர்கள் 'தொழில் பெருகுது' என்ற கட்டுரையின் மூலம் அறிவார்கள். ஏழரைக் கோடி ரூபாய் செலவிட்டுச் சென்ற மூன்றரை வருட காலத்தில் நிர்மாணிக்கப் பட்டுள்ள இத்தொழிற் கூடம் கிழக்குலகத்துக்கு ஒரு புதுமை. அகில இந்தியாவுக்கும் நல்ல இரும்பு உருக்கில் செய்யப்பட்ட 'நவீன மோஸ்தர்' ரயில் பெட்டிகள் இங்கிருந்து போகும். நாலாயிரம் தொழிலாளர்கள் நாளடைவில் இத்தொழிற் கூடத்தில் வேலை செய்வார்கள். தமிழகம் யந்திரத் தொழில் துறையில் அமோகமாக முன்னேறி வருகிறது என்பதற்கு இது ஒரு அத்தாட்சி.

இவ்வளவு பெரிய தொழிற்சாலையை வெகு துரிதமான காலத்திலேயே கட்டி முடித்திருக்கிறார்கள். இந்தப் பெருமை தமிழக என்ஜினீயர்களையும், இத்தொழிற் கூடத்தின் பிரதம நிர்வாக அதிகாரி ஸ்ரீ கே. சடகோபன் அவர்களையுமே சாரும். ஸ்விஸ் என்ஜினீயர்களும் நமக்கு இத்தொழிற்சாலையில் பலவிதங்களிலும் உதவியிருக்கிறார்கள். உதவவும் போகிறார்கள். அவர்களும் பாராட்டப்பட வேண்டியவர்கள்.

தமிழகத்துக்குச் சிறப்பாக விளங்கப்போகும் இத் தொழிற் கூடத்தை உலகத்துக்கு ஒரு மனிதராக விளங்கும் நேருஜி திறந்து வைக்கிறார் என்பதில் தமிழர் ஒவ்வொருவரின் உள்ளமும் பெருமிதத்தில் பூரிப்பு அடைகிறது.

ஐ.நா. சபையில் அமெரிக்காவின் பிடிவாதம்

சென்ற சில மாதங்களாக சர்வ தேசநிலைமையில் மிகவும் அபிவிருத்தி ஏற்பட்டு வருவதை உலக மக்களும் உலக ராஜதந்திரிகளும் ஒப்புக் கொண்டுள்ளனர். சில மாதங்களுக்கு முன் ஜினிவாவில் ஒன்றுக்கொன்று நேர் மாறான அரசியல் அமைப்புக் கொள்கையுடைய அமெரிக்கா, ருஷ்யா முதலிய வல்லரசுகள் ஒன்று கூடி அளவளாவின. அமெரிக்கத் தலைவர்களும், ருஷ்ய, சீனத் தலைவர்களும் பரஸ்பரம் தாக்கிப் பேசுவதை நிறுத்திக் கொண்டுள்ளனர். சீனாவில் கைது செய்யப்பட்ட அமெரிக்கர்களைச் சீன சர்க்கார் விடுதலை செய்ததன் மூலம், சர்வ தேச நெருக்கடி தீர்ந்து, வல்லரசுகளுக்குள் விரோத பாவம் குறைவதற்கு வழி பிறந்தது.

திருப்திகரமான இந்தச் சூழ்நிலையில் சென்ற வாரம் நடந்த ஐக்கிய நாடுகள் சபைக் கூட்டத்தின் மூலம் சர்வ தேச நிலைமையில் மேற்கொண்டு அபிவிருத்தி ஏற்பட வழி உண்டாகலாம் என்று உலகம் எதிர்பார்த்தது. ஆனால், அந்த நம்பிக்கை சென்ற வாரம் நடந்த ஐ. நா. சபைக் கூட்டத்தில் நிறைவேறவில்லை.

அதாவது குடியரசுச் சீனாவுக்கு அச்சபையில் ஸ்தானம் அளிக்க வேண்டும் என்ற விஷயத்தை விவாதித்து முடிவு செய்யாமல் ஒத்தி வைத்து விட்டனர். அவ்விதம் ஒத்தி வைப்பதை ஆதரித்து அமெரிக்கா, பிரிட்டன் உள்பட நாற்பத்திரண்டு நாடுகள் வாக்குக் கொடுத்தன; எதிர்த்து இந்தியா முதலிய பன்னிரண்டு நாடுகள் வாக்குக் கொடுத்தன.

சீனக் குடியரசு சர்க்காரை அங்கீகரித்துள்ள நாடுகளில் பிரிட்டனும் ஒன்று. பிரிட்டன் சீனாவுடன் வர்த்தக உறவு வைத்துக் கொள்ளவும் பெரு முயற்சி செய்து வருகிறது. அப்படியிருந்தும் கூட அமெரிக்காவின் இஷ்டத்துக்கு விரோதமாக வாக்குக் கொடுக்க பிரிட்டன் துணியவில்லை. பிரிட்டனே துணியவில்லையெனில் மற்றச் சிறிய நாடுகளைப் பற்றிக் கேட்கவே வேண்டாம்!

சீனாவின் உண்மையான சர்க்காருக்கு ஐ. நா. சபையில் ஸ்தானம் அளிக்க வேண்டும் என்ற விஷயத்தை அமெரிக்கர் இம்முறையாவது ஆதரித்திருந்தால், சர்வதேச நிலைமையில் மகத்தான அபிவிருத்தி ஏற்படுவதுடன், உலக அமைதிக்கு இன்றியமையாத நல்ல சூழ்நிலையும் உண்டாகியிருக்கும்.

இச்சந்தர்ப்பத்தில், ஐ. நா. பாதுகாப்பு சபையில் இந்தியாவுக்கு நிரந்தர ஸ்தானம் அளிக்க அமெரிக்கா விரும்பியதாகவும், ஆனால் அந்த விருப்பத்துக்கு இணங்க இந்தியா மறுத்து விட்டதாயும் செய்திகள் கூறுகின்றன. சீனாவுக்கு உரிய ஸ்தானம் அளிக்க மறுக்கும் ஐ. நா. சபையில், சீனாவுடன் நட்பும் நல்லெண்ணமும் நெருங்கிய உறவும் கொண்டுள்ள இந்தியா பொறுப்பை ஏற்றுக் கொள்ள மறுப்பது பெருந்தன்மையே ஆகும். நட்புக்குச் சான்று தியாகம் என்னும் அறநெறியைக் கண்ட பாரத நாட்டின் பண்பாட்டுக்கு உகந்த செயல் இது.

குடியரசு சீனாவுக்கு ஐ. நா. சபையில் உரிய ஸ்தானம் அளிக்கும் விஷயமாக அமெரிக்காவின் பிடிவாதம் அபிவிருத்தியடைந்து வந்த சர்வதேச நிலைமைக்கு, குந்தகம் விளைவிப்பதாக இருக்கிறது. இது தீரும் நாள் விரைவில் வர வேண்டும் என்று விரும்புகிறோம்.

ஐந்தாண்டுத் திட்டம்



'சுயதேவைப் பூர்த்தி' என்பதை நிதி மந்திரி நடத்திக் காட்டுவாரா?

காந்தி ஜயந்தி

சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார்

உலகத்தில் பலர் பல பெரிய காரியங்களைச் செய்திருக்கிறார்கள். ஆனால் காந்தி மகானைப் போல், அவர் செய்த அளவில், பிறருடைய நன்மைக்கான காரியங்களைத் தீர்மானித்து, அவற்றைத் தருமத்துக்கு மாறான முறைகளைக் கையாளாமல் அற வழியிலேயே நிறைவேற்றியவர் இந்த யுகத்தில் வேறு யாரும் இல்லை. இன்று அவருடைய ஜன்ம தினம்.

உலகத்துக்குப் பணி செய்த காந்தி மகான், நம்முடைய நாட்டில் பிறந்தவர் என்று நாம் அனைவரும் பெருமை கொண்டாடலாம். என்னுடைய இனத்தைச் சேர்ந்தவர் அவர் என்று சொல்லிக் கொள்ளும் உரிமை பாரத நாட்டில் ஒவ்வொரு தனி மனிதனுக்கும் உண்டு. இப்படி உலகம் முழுதும் வியக்கும் மகத்தான காரியங்களை நிறைவேற்றியவர், நம்முடைய குழந்தைகள் நம்முடைய வீட்டில் பிறப்பது போல இதே அக்டோபர் இரண்டாம் தேதி போர்பந்தரில் ஒரு சிறு வீட்டில் பிறந்தார். இன்று நாம் அவரைத் தியானித்து வழிபட வேண்டிய நாள். அவருடைய மன உறுதியும் சத்திய சங்கல்பமும் தீரமும் நாம் ஒவ்வொருவரும் நம்முடைய காரியங்களில் அடைவோமாக!

எந்த விஷயத்தில் உண்மையைக் காண வேண்டுமானாலும், ஆராயாமலே முன்கூட்டி ஒரு அபிப்பிராயத்தை மனத்தில் பதிய வைத்துக் கொண்டு சிக்கல் படுத்திக் கொள்ளாமல், பளிங்கு போன்ற சுத்த மேதையை வைத்து விஷயங்களைச் சோதித்து உண்மையை நாடுவார் அவர். திரைகளும் தடங்கல்களும் உண்டாக்கிக் கொள்ளாமல் உண்மையை நேராகப் பார்ப்பார். இது அவருடைய தனிச் சிறப்பு. இப்படித் தேடி உண்மையைக் கண்டபின் அந்த உண்மையை ஒட்டி, காரியாம்சத்தில் என்ன செய்து முடிக்க வேண்டும் என்பதைத் தீர்மானிப்பார். தீர்மானத்தை நிறைவேற்றுவதற்குத் தடைகளும் தடங்கல்களும் பல இருக்கும். அவற்றைத் தாண்டுவதில் துன்பங்களும் கஷ்டங்களும் ஏற்படும். அதற்காகப் பயப்படாமல் கஷ்டங்களைப் பொறுத்துக் கொள்வதே வெற்றிக்கு வழி என்று உணர்ந்து, மகிழ்ச்சியுடன் துன்பத்தில் இன்பமும் வெற்றியும் காண்பார். இந்த முறையைப் பிறருக்கும் உபதேசித்தார். முறையில் வெற்றி நிச்சயம் என்பதையும் நிரூபித்தார்.

மொழி பேதங்களையும் மத பேதங்களையும் கண்டு கவலைப்பட்டுப் பயந்து பாரத நாட்டுக்கு உய்வில்லை என்று கருதி வந்தோம். பேதங்களைக் கண்டு கலங்க வேண்டியதில்லை, எல்லா மொழிகளுக்கும் எல்லாச் சமயங்களுக்கும் சம கௌரவம் உண்டு, பிற மொழியை மதித்தே தன்னுடைய மொழிக்கு பக்தி செலுத்தலாம், சமயங்கள் எல்லாம் ஒரே தெய்வத்தை அடையும் வழிகளாகும், மற்ற மார்க்கங்களும் நாம் வழிபடும் தெய்வத்தினிடமே போய்ச் சேரும், என்ற மகத்தான உண்மையைப் போதித்து, தம் வாழ்க்கையில் அந்த விசாலமான கருத்தையே செலுத்தி வாழ்ந்து காட்டினார். அதன் பயனாகப் பாரத நாடு விடுதலை பெற்றது.

ஒரு மதத்தில் பிறந்து வாழ்ந்து பழக்கப் பட்டவர், வேறு மதத்தில் சேருவதும் அப்படிச் சேர்க்கப் பிறர் விரும்புவதும் மடமை, தருமத்துக்குக் குந்தகமாகும், அவனவன் தன் தன் மதத்தில் தரும வாழ்க்கை நடத்தும்படி நாம் உதவ வேண்டும் அல்லாமல், அவனை அவனுடைய குடும்பத்தினின்றும் உறவினர்களிடமிருந்தும் பிரித்துக் குழப்பம் உண்டாக்கலாகாது என்று போதித்துப் பிரசாரம் செய்து, மதமாற்றுதலில் தீவிர வேலை செய்து வந்தவர்களுக்கு நற்புத்தி புகட்டினார். வெற்றிகரமாகவே இதைச் சாதித்தார். மதமாற்றப் பிரசாரங்கள் அவர் காலத்துக்குப் பிறகு மிகவும் குறைந்து போயின. தேசத்தில் சாந்தி ஏற்பட்டது.

'நான் சீர்திருத்தக்காரன். ஆனால் எந்த ஒரு தனி சம்பிரதாயத்தையும் தோற்றுவிக்க நான் விரும்பவில்லை' என்று விளக்கமாகவும் ஊர்ஜிதமாகவும் கூறி வந்தார். ஹிந்து சம்பிரதாயம் மிக விசாலமானது. அதில் நாம் எல்லாத் திருத்தங்களையும் செய்து கொண்டு சுகமாக இருக்கலாம். அதற்காகப் புது மார்க்கமாவது மதமாவது

சம்பிரதாயமாவது நாம் உண்டாக்கிக் கொள்ள வேண்டியதில்லை என்று ஆயுள் முழுதும் தம்முடைய சமய விளக்கத்தைச் செய்து வந்தார். மற்றச் சீர்திருத்தக்காரர்களுக்கும் காந்தி மகானுக்கும் இது ஒரு பெரிய வித்தியாசம். ஆயினும் 'காந்தீயம்' என்று ஒரு சொல் பிரயோகத்தில் வந்து விட்டது. அந்தச் சொல்லின் பொருள் மேற்கண்டதைத் தவிர வேறல்ல. அன்பும் சத்தியமும் அகிம்சையும் ஹிந்து மதத்துக்குப் புதிதல்ல. இவற்றை காந்திமகான் அடிக்கோடு இட்டு அழுத்தம் கொடுத்தார். அதைத்தான் காந்தீயம் என்று சொல்லி வருகிறார்கள். 'காந்தீயம்' என்பது ஒரு புதிய சம்பிரதாயம் அல்ல. "செய்ய வேண்டிய காரியங்களைச் செய்; பசை கொள்ளாமல் செய். இதுவே சந்யாஸம்" என்பது கண்ணன் போதித்த சாஸ்திரம். காந்திமகான் உபதேசித்த காந்தீயமும் இதுவே. இதை சாஸ்திரம் படித்தோர் கர்மயோகம் என்பார்கள். ஆயினும் காந்திஜியினுடைய மார்க்கம் பக்தி மார்க்கமே. ஞானத்தையாவது யோகத்தையாவது கடைப் பிடித்துத் தன் சக்தியையே நம்பி, சரணாகதி முறையை விட்டாரில்லை. அனைத்தும் உன்னுடையது என்று ஆண்டவனுக்குப் பணியையும் தன்னையும் அர்ப்பணம் செய்வதே பக்தி மார்க்கம். இதைத்தான் காந்திமகான் தானும் கடைப்பிடித்து மற்றவர்களுக்கும் போதித்தார்.

தம்முடைய உபதேசங்களிலும் தம் செய்கைகளில் காட்டிய நிதரிசனத்திலும், அறம் வேறு உலக வியாபாரம் வேறு என்கிற மோசமான லோகாயதக் கருத்தை அகற்றித் தள்ளினார். அரசியல், தொழில், வியாபாரம் எல்லாமே தருமத்தோடு கலந்த விஷயங்கள், அனைத்துக்கும் தருமத்தை உரை கல்லாக வைத்துக் கொள்ள வேண்டும். கடவுள் பக்தியைப் பூஜைப் பண்டமாகத் தனித்து வைத்து அரசியல், வியாபாரம், தினசரி வாழ்க்கை அவைகளை லோகாயத முறையில் நடத்துவதில் பயனில்லை. இந்த உண்மை முன்னோர் சொன்னதே யாயினும், வழங்கி வந்த பொய்க் கருத்தை காந்தி மகான் ஐயமறக் கண்டித்துப் பொருளும் இன்பமும் அறத்தோடே கலந்ததாக இருக்க வேண்டும் என்பதை வற்புறுத்திப் போதித்தார். ஓரளவு ஜனங்கள் இதை உணர்ந்திருக்கிறார்கள்.

இதனுடன் இன்னொரு பழம் பொய்யையும் பொய்யென்று விளக்கி அகற்றினார். நல்லதென்று கருதிய ஒரு பயனை அடைவதற்காக அறம் வழுவிய முறைகளையும் கையாளலாம், குற்றமில்லை என்று உபதேசிக்கப்பட்டு வந்த கருத்து மிகவும் தீங்கு விளைக்கும் என்று விளக்கினார். முறை வேறு, பயன் வேறு அல்ல. இரண்டுமே தருமத்துக்கு விருத்தமாக இருக்கக் கூடாது. ஒவ்வொரு காரியமும் அறமா அறம் வழுவியதா என்று விவேகத்துடன் பகுத்தறிந்து அறம் வழுவாத முறைகளையே கையாள வேண்டும். பயன் மட்டும் நல்லதாக வைத்துக் கொண்டு அதை அடைவதற்காக நாம் உபயோகப்படுத்தும் கரணங்களும் செய்யும் செயல்களும் எவ்வகையாயும் இருக்கலாம் என்று வெகு நாளாக ஒரு தவறான கொள்கையைப் பலர் அங்கீகரித்து வந்தார்கள். இது முற்றிலும் தவறு என்பதை வற்புறுத்தி சித்தாந்தம் செய்தார்.

அரசியல் துறையில் மகத்தான ஒரு புது நிலைமையை உலகத்துக்கே உண்டாக்கி நிலைபெறச் செய்து விட்டார். எந்த தேசத்தையும், எந்த ஜன சமூகத்தையும், அன்னிய நாட்டார் அடக்கி ஆளமுடியாத நிலைமையை உண்டாக்கி விட்டார். பாரத நாட்டில் மட்டிலுமல்ல, பாரத நாட்டில் நடந்த புரட்சியின் பலனாக உலகத்தில் எந்த ஜன சமுதாயத்தையும் அன்னியர் வந்து இனி அடக்கி ஆள முயற்சி செய்வதில் பயனில்லை என்று வல்லரசுகள் அனைத்தும் உணரும்படியான நிலைமையை ஏற்படுத்தி விட்டார். அடக்கி ஆளப்பட்ட பிரதேசங்கள் ஒன்றன் பின் ஒன்றாக விடுதலை அடைந்து வருகின்றன. அடக்கி ஆண்ட அன்னியர்கள் இனி வேண்டாம் என்று சந்தோஷமாகவே திரும்பிப் போகும் முறை ஏற்பட்டு விட்டது. இதற்கெல்லாம் காரணம்: எந்த ஜன சமூகமும் தன் சம்மதத்தைக் கொடுத்துத்தான் உண்மையில் அன்னிய ஆட்சிக்கு உட்பட்டு வருகிறது. சம்மதத்தை மறுத்து விட்டால் அன்னிய ஆட்சி முடியாத காரியம். சம்மதத்தை மறுப்பதற்கு ஆயுதங்கள் வேண்டியதில்லை. இணங்காமல் இருப்பதே மறுப்பாகும். ஆனால் அப்படி மறுப்பதில் துன்பங்களைத் தாங்க வேண்டியது அவசியமாகும். துன்பத்தைத் தாங்கும் சக்தியும் பொறுமையும் திரட்டிக் கொள்ள வேண்டும். அடிமையைத் தீர்க்கும் யுத்தம் இதுவே. இந்த யுத்தத்தில் ஏற்படும் கஷ்டங்களையும் நஷ்டங்களையும் பொறுத்துக் கொள்வதே வெற்றிக்கு வழி. கஷ்டங்களைப் பொறுத்துக் கொண்ட ஒவ்வொரு கட்டமும் மேலேறுவதற்கு ஒரு படியாகும். ஏறின ஒவ்வொரு படியும்

சிரமம் தந்ததாயினும் கொடுமுடியை நெருங்கினோமே என்கிற இன்பத்துடன் நம்பிக்கையும் தரும். இந்தியாவில் இதை நிரூபித்தாய் விட்டது. மற்ற நாடுகளில் இந்த உண்மையை ஆளப் பட்டவர்களும் ஆளும் அன்னிய சர்க்காரும் இரு பட்சத்தாருமே உணர்ந்து கொண்டு யுத்தம் இல்லாமலே சுதந்திர நிலைமை தோன்றி வருகிறது. இனி, ஒரு நாட்டார் இன்னொரு நாட்டாரை ஆளமுடியாது என்கிற நியதி ஊர்ஜிதமாய் விட்டது. உலக சரித்திரத்தில் இது ஒரு புதிய அத்தியாயம். புது யுகதர்மம் என்றே சொல்லலாம். இந்த அத்தியாயத்துக்குக் காரண கர்த்தா நம்முடைய காந்தி யாவார். காந்தி மகானை எதிர்த்த பிரிட்டிஷாரும் இந்தப் புது அத்தியாயத்துக்கு, வேறு ஒரு பொருளில், காரண கர்த்தா ஆவார்கள். உலகத்துக்கு அவர்களும் சரியான வழியைக் காட்டி விட்டார்கள் அல்லவா?

பெருமைப்படக் கூடிய விஷயங்கள் சொல்லி ஆயிற்று. எச்சரிக்கையும் வேண்டு மல்லவா? ஒரு அவதார புருஷன் வந்து நாம் அழிந்து போகாமல் கை கொடுத்துத் தூக்கினான். பாதாளத்தில் அழுந்திய பூமியை மகாவிஷ்ணு வராகரூப வந்து தோண்டித் தூக்கி நிறுத்தினதைப் போல் என்றால் மிகையாகாது. ஆனால் அந்த அவதார புருஷன் உபதேசித்த உண்மைகளை மறந்தோ அல்லது கட்டி வைத்துப் புறக்கணித்தோ நடந்தோமானால், அடைந்த சுதந்திரம் பிருடைச் சுரையாகப் போகும். பொருளும் சுகமும் மற்ற சுதந்திரமாகும். சுதந்திரமும் வெறும் தந்திரமாகப் போகும். இப்படி முடிந்து விடாமலிருக்க ஆண்டவன் அருளவேண்டும். அந்த அருள் இருந்தால் காந்தி மகான் உபதேசித்த தருமங்களைப் பத்திரமாகக் காத்து அவற்றைக் கொண்டு வாழ்க்கையை நடத்துவோம்.

என்ன சேதி?

கைத்தொழில் வாரம்

நமது கிராமங்களில் நுட்பமான கலைத் திறமை கொண்ட கைத்தொழில்கள் இன்னும் குற்றுயிரும் குறையுயிருமாக இருந்து வருகின்றன. இத்தொழில்களுக்குப் புத்துயிரும் புது வாழ்வும் அளித்துப் போற்ற வேண்டியது சுதந்திரம் பெற்ற பாரத சர்க்காரின் கடமையாகும். காந்தி மகானின் ஆதரவின்மீது நமது கைத்தறியும் சர்க்காவும் உயிர் பெற்றன. லங்காஷயர் மில் துணிகளுடன் போட்டி போட முடியாது நசித்துக் கொண்டிருந்த நமது கைத்தறிகள் இன்று புத்துயிர் பெற்றுவிட்டன. இன்று நம் மில் துணிகளை அந்த லங்காஷயருக்கே அனுப்பி வருகிறோம். நமது கைத்தறித் துணிகள் மற்ற நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. அமெரிக்கா கூட விரும்புகிறது.

அம்மாதிரியே நமது கிராமங்களில் செய்யப்படும் பொம்மைகள், விக்கிரகங்கள், மரச் சாமான்கள், பாய்கள், கூடைகள் ஆகியவற்றுக்கு நல்ல மதிப்பு மேல்நாடுகளில் ஏற்பட்டிருக்கிறது. அமெரிக்காவில் சில இந்திய மாதர்கள் ஆண்டுக்கு ரூபாய் 1,50,000 பெறுமானமுள்ள இந்தியக் கைத்தொழில் பொருள்களை விற்று நமக்குப் பணம் அனுப்புகிறார்களாம். இச் சங்கத்தை 1927லேயே ஸ்ரீமதி ஜெர்ட்ரூட் விட்டிங் என்ற அமெரிக்க மாதரசி தொடங்கினார் என்று அறிகிறோம். இப்படி மேல்நாடுகளிலுள்ள உணர்ச்சி நம் நாட்டிலும் ஏற்பட வேண்டும். அப்பொழுதுதான் நமது கைத்தொழில்கள் முன்னேறும்.

இதை உத்தேசித்துச் சென்ற வாரம் சென்னை சர்க்காரின் ஆதரவில், சென்னை மௌண்ட் ரோடில் கைத்தொழிற் கண்காட்சி நடைபெற்றது. இக் கண்காட்சியின் நோக்கத்தைக் குறித்துத் திரு மணியன் நடேசன் விளக்கினார். கவர்னர் ஸ்ரீ பிரகாசா திறப்பு விழா நிகழ்த்தினார். இவ் விழாவை இவ்வளவு சிறப்பாக நடத்த ஏற்பாடு செய்த கமிட்டியாரை எவ்வளவு பாராட்டினாலும் தகும்.



திரு கே. கே. நம்பியார்

ஆசிரியர் சங்கம்

'ஐக்கியமே பலம்' என்று மாணவர்களுக்குப் பாடம் சொல்லிக் கொடுப்பது மட்டுமின்றித் தாங்களே வாழ்க்கையில் அனுஷ்டித்துக் காரிய சித்தி அடையக் கூடிய திறமை பெற்றவர்கள் தென்னிந்திய ஆசிரியர்கள் என்பதைச் சென்ற வாரம் நிரூபித்துக் காட்டினார்கள்.


தென்னிந்திய ஆசிரியர்கள் தங்கள் பாதுகாப்பு நிதியென்று ஒரு இன்ஷ்யூரன்ஸ் திட்டத்தை நடத்தி வருகிறார்கள். அதில் வைத்திய பரிசோதனையின்றி மாதம் ஒரு ரூபாய் செலுத்தி எந்த ஆசிரியரும் பாலிஸிதாரராகச் சேரலாம். இவ்வகையில் சுமார் 6000 பாலிஸிதாரர்கள் இப்பொழுது இச் சங்கத்தில் இருக்கிறார்கள்.

இச்சங்கத்தின் அலுவல்கள் நாளுக்கு நாள் ஓங்கி வளர்வதற்கு, சொந்தக் கட்டடம் அவசியமாகிச் சென்னை மயிலாப்பூருக்கு அடுத்துள்ள ராஜா அண்ணாமலைபுரத்தில் சொந்தக் கட்டடம் எழுப்பியிருக்கிறார்கள். இந்தக் கட்டடத் திறப்பு விழாவுக்குச் சென்னைக் கவர்னர் ஸ்ரீ ஸ்ரீபிரகாசா தலைமை வகித்தார். இவ்வைபவத்தில் சென்னை முதன் மந்திரி ஸ்ரீ காமராஜரும், சென்னை சர்வகலாசாலைத் தலைவர் திரு லட்சுமண சாமி முதலியாரும் ரெவரெண்டு தம்புசாமி அவர்களும் பங்கு பற்றிப் பேசினர்.

இச்சங்கம் இன்று இவ்வளவு முன்னணிக்கு வந்திருப்பதற்குக் காரணம் ஆதி நாளில் இச்சங்கத்துக்காகப் பாடுபட்டவர்களான காலஞ் சென்ற எஸ். கே. எக்ஞநாராயணய்யர் அவர்களும், ஸ்ரீ எம். எஸ். சபேசன் அவர்களுமேயாவர். இவர்கள் இருவர் பெயரில் ஒரு புத்தக சாலையும், ஒரு ஹாலும் திறந்து வைக்கப்பட்டன.

இது தவிர இச்சங்கத்தின் ஆதரவில் ஆசிரியர்கள் தாங்கள் சொந்தமாக வீடு கட்டிக்கொள்ளவும் கடன் நிதி உதவ ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

'சுயதேவைப் பூர்த்தி' என்ற ஒரு பிரயோகம் எங்கு பார்த்தாலும் அடிபடுகிற காலம் இது. இந்தச் சொல்லின் உண்மையான பொருளை உணர்ந்து காரியம் செய்வோர் மிகச் சிலர். இவ்வகையில் நமது சென்னை ராஜ்ய ஆசிரியர்கள் இப்படி



செப்டம்பர் 18-க் தேதி முதல் 20-க் தேதி வரை மூன்று தினங்களும் திருச்சி அகில இந்திய ரேடியோ நிலையத்தார் நடத்திய கிராமத் திருவிழா கோலாகலமாக நடந்தேறியது. ஒவ்வொரு நாளும் பதினாயிரக் கணக்கான மக்கள் கிராமங்களில் இருந்தெல்லாம் உற்சாகத்துடன் வந்து விழாவில் கலந்து கொண்டு மகிழ்ந்தனர். விழாவைத் தொடங்கி வைத்த கனம் பக்தவத்சலம் "திருச்சி அகில இந்திய வானொலி நிலையத்தினர் இன்று ஏற்பாடு செய்திருக்கின்ற இந்தத் திருவிழாவைப் போல் வேறு எந்தத் திருவிழாவையும் நம்முடைய கிராமங்களில் இதுவரையில் கொண்டாடி இருக்க மாட்டோம்" என்று உத்சாகத்தோடு பேசினார். 1. திரு தட்சிணாமூர்த்தி குழுவினரின் கரக ஆட்டம் நடக்கிறது. 2. பிரசித்தி பெற்ற எம். எஸ். மணி குழுவினரின் பொய்க்கால் குதிரை ஆட்டம் 3. முதல் நாள் விழாவில் கலந்து கொண்டிருந்த ஜனக் கூட்டத்தில் ஒரு சிறுபகுதி. முன்வரிசையில் கனம் பக்தவத்சலம் அவர்களுக்கு அருகில் அமர்ந்திருப்பவர் திருச்சி அகில இந்திய ரேடியோ நிலைய டைரக்டர் திரு பி. வி. ஈஸ்வரதாஸ் 4. விழாவில் கடைசி நாளன்று சென்னை ராஜ்ய முதன் மந்திரி கனம் காமராஜ் நாடார் கலந்து கொண்டு இந்தக் காட்சி நல்ல முறையில் சர்க்காரின் வேலைத் திட்டங்களை விளக்கிக் காட்டுவதாக அமைந்திருக்கிறது என்று பாராட்டிப் பேசினார்.

ஒரு திட்டம் வகுத்து வேலை செய்வதைக் கண்டு பெருமிதம் அடைகிறோம்.

"அண்ணா"வுக்கு அறுபது வயது

சென்ற 25-ஞாயிற்றுக் கிழமை மாலை சென்னை தியாகராயநகர் ராமகிருஷ்ணா உயர்நிலைப் பள்ளியின் வாசலில் ஏராளமான கார்கள் நின்றிருந்தன. ஏராளமான மக்கள் வேகமாக உள்ளே நுழைந்து கொண்டிருந்தார்கள். என்ன விஷயம் என்று விசாரித்த போது அப் பள்ளியின் தலைமை ஆசிரியரான 'அண்ணா' வுக்கு அறுபதாம் ஆண்டு நிறைவு விழா நடைபெறுகிறது என்ற நம்ப முடியாத விஷயம் தெரிய வந்தது.

விழா நடக்கிறது என்பதில் நம்பிக்கை இல்லாமலில்லை. ஆனால் அண்ணாவுக்கு அறுபதாண்டு நிறைந்து விட்டது, என்றால் யாரால் நம்ப முடியும்! அவரது நிமிர்ந்த நடையும், இளமை தவழும் முகமும், சுறுசுறுப்பான காரியங்களையும் பார்த்தவர்கள் இவருக்கு அறுபதாண்டு ஆகி விட்டது என்பதை ஒப்புக் கொள்ள மாட்டார்கள்.

அடுத்தாற் போல் 'அண்ணா' என்கிறீர்களே, அது என்ன என்று கேட்பீர்கள்.

ஸ்ரீமான் சுப்பிரமணிய அய்யரவர்கள் தமது வாழ்க்கையின் ஆரம்ப நாட்களில் ராமகிருஷ்ணா ஹோமில் ஆசிரியராக இருந்தார். அந்நாட்களில் மாணவர்கள் தம்மை 'ஸார்' என்று வேற்று மொழியால் விளிப்பதை விரும்பாத அவர் தம்மை 'அண்ணா' என்று அழைக்க மாணவர்களை அனுமதித்தார். வகுப்பில் 'அட்டென்டென்ஸ்'

எடுக்கும் போது, 'பிரஸன்ட் ஸார்' என்றோ, 'எஸ் ஸார்' என்றோ கூறுவதை விடுத்து 'இதோ, அண்ணா' என்று சொல்லும்படி செய்தார்.

சென்ற ஞாயிற்றுக் கிழமை அவரது சேவையைப் பாராட்டி மகிழ்ந்தார்கள். ராமகிருஷ்ண மடத்தின் தலைவரான கைலாசானந்தா தலைமை வகித்தார். ஸ்ரீ கே. பாலசுப்பிரமணிய அய்யர், டாக்டர் டி. எம். பி. மகாதேவன், திரு கி. வா. ஜகந்நாதன், முதலியோர் அண்ணாவின் சேவையைப் பாராட்டிப் பேசினார்கள். சுமார் ரூ. 3500 கொண்ட ஒரு பண முடிப்பும் அவருக்கு வழங்கப்பட்டது. அண்ணாவின் தொண்டு சிறப்பதாக! வாழ்நாள் வளர்வதாக!

பிரதம இன்ஜினியரின் பயணம்

தென்னிந்தியாவில் சிறந்த பாதைகள் அமைந்திருப்பதால், மோட்டார் வண்டிகள் ஓட்டுவதற்கு மற்ற மாகாணங்களை விடக் குறைந்த செலவே ஆகிறது. மற்ற மாகாணங்களும் பாதைகள் அமைப்பதில் சென்னை சர்க்காரைப் பின்பற்ற வேண்டும் என்று மத்திய சர்க்கார் ரயில்வே மந்திரி பாராட்டிக் கூறி யிருக்கிறார். சென்னை ராஜ்யத்தில் பாதைகள் அமைக்கும் பணியில் அருந் தொண்டாற்றி வரும் 'ஹைவேஸ்' இலாகா பிரதம என்ஜினியர் ஸ்ரீ கே. கே. நம்பியார் இப் பாராட்டுதலுக்குரியவர்.


இத்தகைய சிறந்த என்ஜினியர் ஸ்ரீ நம்பியார் இஸ்தாம்பூலில் நடைபெறப் போகும் இன்டர் நாஷனல் ரோடு காங்கிரஸுக்கு இந்தியப் பிரதிநிதியாகச் சென்றிருக்கிறார். அவருடைய பயணம் நம் மாகாணத்திலுள்ள சாலைகளின் அபிவிருத்திக்குப் பயன் அளிக்கும் என்று எதிர்பார்க்கிறோம்.

செல்லம்மாள் பாரதி

கடையத்தில் பாரதியாரின் மனைவி செல்லம்மாள் பாரதி அவர்கள் அதிக நோயுற்றிருப்பதாக இந்த இதழ் அச்சேறும் சமயம் செய்தி வந்திருக்கிறது. தற்போது நினைவு இல்லாமல் இருக்கிறார்கள். புதல்விகள் தங்கம்மாள் அவர்களும் சகுந்தலா அவர்களும் பக்கத்தில் இருக்கிறார்கள்.

தமிழ் நாட்டில் எந்த பாக்யவதிக்கு இத்தனை புகழ்பெற்ற ஒருவர் புருஷனாக வாய்த்திருக்க முடியும்!

தூங்கிக் கிடந்த மக்களைத் தமிழ் நாதத்தைக் கொண்டு தட்டி எழுப்பி மகான் காந்தியின் யுகத்துக்கு ஆயத்தம் ஆக்கினார். ஒரு சித்தருக்கு மனைவியாக அமைந்து அவருடைய வாழ்க்கைத் துணைவியாகவே பணி செய்த புண்ணியவதிக்காகத் தமிழ் நாட்டுப் பெண்மணிகள் அனைவரும் பிரார்த்தனை செய்வார்களாக!



48. கும்பகர்ணன் எழுந்தான்

யுத்த பூமியில் ராவணன் கிரீடம் உடைந்து அவமானப்பட்டுக் கோட்டைக்குத் திரும்பிப் போவதைக் கண்ட தேவர்கள் சந்தோஷமடைந்து ஆரவாரம் செய்தார்கள். 'நம்முடைய கஷ்டங்கள் தீரும் காலம் சமீபித்தது' என்று ஆனந்தமடைந்தார்கள்.

ராவணனோ மானபங்கமடைந்து மிகக் கவலை கொண்டவனாகக் கோட்டைக்குள் புகுந்தான். ஆலோசித்து மனத்தை ஸ்திரப்படுத்திக் கொண்டு தம்பி கும்பகர்ணனை எழுப்பச் சொல்லி உத்தரவிட்டான்.

கும்பகர்ணன் தான் அடைந்த சாபத்தால் மாதக் கணக்காகத் தூங்கிப் போவான். ராவணன் அவமானப்பட்டுத் திரும்பிய போது கும்பகர்ணன் படுக்கப் போய்ச் சில நாட்களே ஆனபடியால், அந்த இளந் தூக்கத்திலிருந்து அவனைச் சுலபமாக எழுப்பக் கூடும் என்று ராவணன் தீர்மானித்து, "எப்படியாவது தம்பியைத் தூக்கத்தினின்று எழுப்பி யுத்தத்துக்குத் தயாராகும்படி செய்யுங்கள்" என்று தன் மந்திரிகளுக்கு உத்தரவிட்டான்.

"என் தவங்களெல்லாம் வீணாயிற்று. ரிஷிகள் சொன்னது உண்மையாகும்போலிருக்கிறது. கோட்டையை எல்லா பாகங்களிலும் வீரர்கள் கவனமாகக் காவலிருந்து பார்த்துக் கொள்ளச் சொல்வீர்களாக. தம்பி சுகமாகத் தூங்குகிறான். அவன் தூக்கம் மாதங்கள் கணக்காக இருக்குமே. அவன் படுத்து இன்று ஒன்பது தினங்கள் தானாயின. அவனை உடனே எழுப்பி விடுங்கள். அவன் யுத்தத்துக்குச் சென்றால் இந்த எதிரிகள் சிதறி ஓடுவார்கள். கும்பகர்ணனுக்கு எதிரில் யார் நிற்க முடியும்? அவன் எழுந்து போருக்கு நின்று விட்டால் எனக்கு ஒரு பயமுமில்லை. நான் கவலைப்படுகிறேன் என்பது அவன் அறியவில்லை, தூங்குகிறான்."

இப்படி ராவணன் சொன்னதும் ஆட்கள் கும்பகர்ணனுடைய அரமனைக்குச் சென்றார்கள். அவன் எழுந்ததும் அவனுக்கு அடங்காத பசியாக இருக்கும் என்று ஆகாரம் தயாரித்து மலையாகக் குவித்து வைத்தார்கள். பிறகு அவனை எழுப்புவதற்காக அநேக பேரிகை, சங்குகள் முதலியவைகளைக் கொண்டு பெரிய சத்தம் போட்டார்கள். பல அரக்கர்கள் கூடி அவனைத் தட்டிக் குத்தித் தள்ளினார்கள். அவர்கள் போட்ட இரைச்சலும் பேரிகை, சங்கம் முதலிய கோஷங்களும் ஆகாயமளாவிச் சென்றன. பறவைகளும் மிருகங்களும் பயந்து கத்தின.

கும்பகர்ணனுடைய சாப நித்திரை இதையெல்லாம் கேட்கவில்லை. தூங்கினவன் தூங்கிக் கொண்டேயிருந்தான். பல ராக்ஷசர்கள் கூடித் தூக்கத்தில் கிடந்தவனை மிக உபத்திர

வப்படுத்தினார்கள். அவன் மேல் யானைகளை நடக்கச் செய்தார்கள். கம்புகள் எடுத்து அடித்தார்கள். இப்படி உபத்திரவம் செய்த பின், கும்பகர்ணன் கண்ணைத் திறந்து, தூக்கத்திலிருந்தவன் கொசுக்கடிக்காகக் கையால் தட்டுவதுபோல் அனைவரையும் தட்டித் துரத்திவிட்டுக் கொட்டாவி விட்டான்.

பிறகு என்ன காரணம் தன் தூக்கத்தை இவ்வாறு கெடுத்தது என்று பெருங்கோபங் கொண்டான். விஷயம் தெரியாமலேயே தாங்காத பசிமேவிட்டு மலைக் குவியல்களாகக் கிடந்த மாமிசமும் மற்ற ஆகாரப் பண்டங்களையும் எடுத்து விழுங்கி, பானைகளில் வைக்கப் பட்டிருந்த ரத்தத்தையும் மது வகைகளையும் குடித்துத் தாகம் தீர்த்துக் கொண்டான். அதன்மேல் அவன் கோபம் கொஞ்சம் தணிந்த தென்று அரக்கர்கள் அவனை யண்டி விஷயத்தைச் சொன்னார்கள்.

இராவணனுடைய மந்திரி யூபாக்ஷன் பேசினான்: "சுவாமி, யுத்தத்தில் அடிபட்டு நாம் அபாயத்திலிருக்கிறோம். சீதையின்காரணம் வந்த யுத்தம். வானரர்களும் ரகு குமாரர்களும் இதுவரையில் நாம் கண்டிராத முறையில் நம்முடைய சேனையையும் வீரர்களையும் மாய்த்து வருகிறார்கள். லங்கா நகரத்தைச் சுற்றிக் கடல் போன்ற வானரக் கூட்டம் நிற்கிறது. ராவணேசுவரரே, யுத்தத்தில் அடிபட்டு, கிரீடம் உடைந்து, அவமானப் பட்டுத் திரும்பி விட்டார். அவர் உயிருடன் தப்பியதே நம்முடைய அதிர்ஷ்டம்" என்றான்.

இதைக் கேட்டதும் கும்பகர்ணன் அடக்க முடியாத கோபாவேசமானான். "இந்தக் கணம் எதிரிகளை நிர்மூலம் செய்வேன். வானர சேனையைக் கொன்று ராம லக்ஷ்மணர்களுடைய ரத்தத்தைக் குடிக்கப் போகிறேன். காரியத்தை முடித்து விட்டு ராவணனைப் போய்ப் பார்ப்பேன்."

இவ்வாறு ரோஷத்தோடு பேசியதைக் கேட்ட மந்திரிகள் மகிழ்ச்சியடைந்து, "முதலில் அரசனைக் கண்டு ஆலோசித்து அதற்கு மேல் தக்கது செய்யுங்கள்" என்று கும்பகர்ணனிடம் விண்ணப்பம் செய்தார்கள்.

கும்பகர்ணன் "சரி, அப்படியே" என்று சொல்லி, முகம் கழுவிக் கொண்டு, தன் பலத்தை விருத்தி செய்து கொண்டு, யமனைப் போல் பூமி அதிர லங்கேசன் அமர்ந்திருக்கும் மண்டபத்துக்குச் சென்றான். கும்பகர்ணன் போகும் பொழுது ராஜ மார்க்கத்தில் நின்று கொண்டிருந்த அரக்கர்கள் தைரியமும் மகிழ்ச்சியும் அடைந்து கைகூப்பி வணங்கினார்கள். அவன் மேல் புஷ்பமாரி பெய்தார்கள்.

அரமனைக்குள் பிரவேசித்து ராவணன் சந்நிதியில் நின்றான். ராவணனும் தன்னுடைய நிகரற்ற தம்பி எழுந்து வந்து விட்டான் என்று அடங்காத மகிழ்ச்சியுடன் எழுந்து ஆசனத்திலிருந்து இறங்கி, அவனைத் தழுவி வரவேற்றான்.

"என்ன செய்ய வேண்டியது, அண்ணா?" என்றான் கும்பகர்ணன். "ஏன் என்னை எழுப்பச் சொன்னீர்? உமக்கு என்ன பயம் ஏற்பட்டிருக்கிறது? யார் பிரேதமாய் விழுந்து போகக் காத்திருக்கிறார்கள், சொல்லுவீர்!" என்றான்.

"தம்பி! உனக்குத் தெரியவில்லை. நீ உன்னுடைய தூக்கத்தில் ஆழ்ந்து கிடந்தாய். எனக்கு ராமனால் ஏற்பட்டிருக்கும் பயம் பெரிதாகி விட்டது. கடலைப் போல் வானர சேனை லங்கையைச் சூழ்ந்து கொண்டிருக்கிறது. நம்முடைய வீரர்கள் அவர்களை எதிர்த்துத் தோல்வியடைந்து மடிந்து விட்டார்கள். பெருஞ் சேனையுடன் ராமன் சமுத்திரத்தில் சேது ஒன்று கட்டி நம்முடைய குலத்தை வேரோடு அழிக்க வந்திருக்கிறான். என் செல்வம், என் சேனை எல்லாம் தீர்ந்து போயிற்று. நீ தான் நம்முடைய குலத்தைக் காப்பாற்ற வேண்டும். உன்னை நம்பியிருக்கிறேன். நீ தேவர்களை எல்லாம் யுத்தத்தில் சிதற அடித்திருக்கிறாய். என்னிடம் உனக்கு உள்ள பிரியத்தை நான் அறிவேன். யுத்தத்தில் உனக்கு உள்ள பிரியமும் உன் வீரமும் அறிவேன். உடனே சென்று இந்தச் சத்துருக்களை வதம் செய்து என்னையும் லங்கையையும் காப்பாற்றுவாய்" என்றான் ராவணன்.

இதைக் கேட்ட கும்பகர்ணன் சிரித்தான். ராவணன் கவலைப்பட்டும், துக்

கப்பட்டும் பிரலாபித்துப் பேசினதைக் கேட்டதும் முதலில் தனக்கு இயற்கை பாசத்தால் உண்டான கோபத்தின் வேகம் மறைந்து போய், விஷயங்கள் நினைவுக்கு வந்து விவேகம் மேலிட்டு அண்ணன் செய்த தவறுகளை எண்ணிச் சிரித்து விட்டுப் பேசலானான் :

"மன்னிக்க வேண்டும், அண்ணா! முன் நீர் மந்திராலோசனை செய்த சமயத்தில் நாங்கள் என்ன எச்சரித்தோமோ அது இப்போது நடந்திருக்கிறது. நாங்கள் உம்முடைய நன்மைக்கென்று சொன்னதை அப்போது நீர் உதறித் தள்ளினீர். சீதையை அபகரித்த பாப காரியத்தின் பயனை இப்போது அனுபவிக்கிறீர். ஆசையால் தூண்டப்பட்டுக் காரியத்திலுள்ள தோஷத்தை ஆராயாமல் ஒருவன் புகுந்தால் கஷ்டத்தை அனுபவிக்க வேண்டியதுதானே! முந்தி யோசனை செய்து பிறகு காரியத்தில் பிரவேசிப்பதற்குப் பதிலாக, காரியத்தில் பிரவேசித்து விட்டு, பிறகு யோசிப்பது அறிவீனம். ராஜநீதிக்கு விரோதம். இதை நான் எடுத்துக் காட்டினேன். சீதையை அபகரிக்கப் பிரியப்பட்டாலும் விரோதிகளான ராமலக்ஷ்மணர் வதம் செய்துவிட்டுப் பிறகு அல்லவோ சீதையை அபகரித்திருக்க வேண்டும்? தலைகீழாக வேலையைச் செய்துவிட்டீர். நன்மை தீமைகளை யோசித்துச் சொல்லக் கூடிய மந்திரிகள், மித்திரர்கள், பந்துக்கள் இவர்களோடு கலந்து ஆராயாமல் அல்லது அவர்கள் சொன்னதைப் புறக்கணித்து விட்டு, செய்யப் படும் காரியங்கள் அபாயத்திலும் நஷ்டத்திலும் கொண்டுபோய் விடும். இது நீர் அறிந்திருக்கவில்லையா? யார் சரியான யோசனை சொல்லுகிறவர்கள், யார் அல்ல என்பதை அரசன் அறிந்து கொள்ள வேண்டும்."

இவ்வாறு கும்பகர்ணன் செய்த தர்மோபதேசமும் நீதி சாஸ்திர விளக்கமும் ராவணனுக்குப் பிடிக்கவில்லை. ராவணனுடைய முகத்தில் கோபக் குறிகள் உண்டாயின. ஆயினும் அபாய நிலையிலிருந்த படியினால் கோபத்தை ஒருவாறு அடக்கிக் கொண்டு ராவணன் பேசினான் :

"தம்பி! இப்போது இந்த ஆராய்ச்சியில் ஒரு பிரயோஜனமும் இல்லை. காலம் தாண்டி விட்டது. இப்போது நான் கோருவது உன்னுடைய பராக்கிரமத்தின் வேகத்தை. நியாயமாகவோ, அநியாயமாகவோ, விவேகமாகவோ, அவிவேகமாகவோ, கர்வத்தாலோ, அறிவீனத்தாலோ ஒரு காரியம் நடந்து விட்டால், அதைப் பற்றிக் காலம் கடந்த பின் யோசித்துக் கொண்டோ பேசிக்கொண்டோ இருப்பதில் பயன் என்ன? நடந்தது நடந்து விட்டது. இப்போது இந்தச் சங்கடத்தில் என்ன செய்வது என்பதுதான் கேள்வி. நடந்து போன தவறுகளால் நேர்ந்திருக்கும் கெடுதியை உன் வீரத்தாலும் சாமர்த்தியத்தாலும் தீர்ப்பது உன் கடமை. தவறுகள் செய்து விட்டபடி



யால் அபாயத்திலும் கஷ்டத்தி லும் சிக்கினவனுக்கு உதவி செய்கிற வனே மித்திரன். அவனே பந்து. என் பேரில் உனக்குப் பிரியம் இருப்பது உண்மையாயின் இப்போது எனக்கு நீ உதவுவாய். உன் சாமர்த்தியமும் பலமும் தெரிந்துதான் இப்படிப் பேசு கிறேன். கவலைப்பட்டுக் கொண்டிருக் கும் எனக்குத் தைரியம் சொல்லி என்னைக் கைவிடாமல் சூரனாக நடந்து கொள்வாய்'' என்றான்.

கும்பகர்ணன் சொன்னான்: ''நீர் கவலைப் பட்டது போதும். உமக்கு பயம் உண்டாகி யிருக்கும் சத்துருக் களை இப்போதே வதம் செய்வேன். நான் உம்முடைய தம்பி. ஒரு போதும் உம்மைக் கைவிட மாட்டேன். ராம லக்ஷ்மணர்கள் மாண்டார்கள் என்று நிச்சயமாக இருப்பீராக. இந்த வானர சேனையைச் சின்னாபின்னமாக அடித்து வதம் செய்வேன். சந்தேகப்பட வேண் டாம். ராமனுடைய தலையை உமக்கு எதிரில் கொண்டுவந்து போடப் போகிறேன். பயப்படாதீர். சுக்ரீவனுடைய **ரத்தம்** அருவி போல் பாய்வதைக் காண்**பீர்**. என்னைக் கொன்றுவிட்டுப் பிறகு அல் லவா ராமன் உம்மிடம் வரவேண்டும். என்னை யாரும் வென்று கொல்ல முடி யாது என்பது உமக்குத் தெரியும்.''

இப்படிப் பேச ஆரம்பித்ததும் கும்பகர்ணனுடைய அகம்பாவம் பொங்கிக் கிளம்பிற்று. ''எந்தச் சத் துருவாயினும் அழிப்பேன். யமனே வரட்டும். சூரியனே வந்து எதிர்க்கட் டும். அக்கினியே யாயினும் சரி, வரட் டும். அனைவரையும் கடித்துத் தின்று விழுங்கி விடுவேன்'' என்று பலவா றாகப் பேசி அண்ணனுக்குத் தைரியம் உண்டாக்கிப் போர்க்களத்து குப் போகக் கிளம்பிவிட்டான்

* * *

முதலில் பெருந் தூக்கத்தி லிருந்து எழுந்ததும் இயற்கை வேகத்தில் பேசினான். பிறகு



பசி ஓரளவு தீர்ந்ததும் சுபாவத்தில் நீதி உணர்ச்சி கொண்டவ னனபடியால் ராவணனிடம் விஷயங்களை ஆராய்ந்து ஹிதத்தை எடுத்து உரைத்தான். அதன் பின் ராவணனுடைய தற்கால கஷ்ட நிலையைக் கண்டு உருகி, அன்பு மேலிட்டு மற்றதை யெல்லாம் மறந்தொழிந்தான்.

"உன்னைப் போன்ற வீரன், உன்னைப் போன்ற தம்பி, ஆபத்தில் உதவும் மித்திரன் வேறு யார், கும்பகர்ண!" என்று ராவணன் மகிழ்ச்சி பரவசமாகப் பேசித் தம்பியை யுத்தத்துக்கு அனுப்பினன். தம்பி கட்டாயமாக ஜெயிப்பான் என்று ராவணன் எண்ணினன். செத்துப் பிழைத்த மாதிரி மகிழ்ச்சி அடைந்தான்.

கும்பகர்ணன் சூலத்தை எடுத்துக் கொண்டு ஒருவனுகவே போகப் புறப்பட்டான். அப்போது ராவணன் அவனைத் தடுத்து, "இப்படிச் செய்யலாகாது. சேனையைக் கூட்டிக் கொண்டு போ" என்று சொல்லி, தம்பியின் பெரிய தேகத்துக்கு ஆபரணங்கள் புனைந்தும் மாலை போட்டும் அலங்கரித்து, ஆசிர்வதித்து, "போ, வீரனே! சத்ருக்களை நிர்மூலம் செய்து விட்டு ஜெயகோஷத்துடன் திரும்பி வா" என்றான்.

கும்பகர்ணனும் திவ்ய ஆபரணங்களால் அலங்கரிக்கப்பட்டு திரிவிக்ரமனைப் போலவே ஜொலித்தான்.

அண்ணனை வலம் செய்து வணங்கி, நீண்ட சூலத்தை எடுத்துக் கொண்டு சென்றான். பெருஞ் சேனை அவனைப் பின் தொடர்ந்து சென்றது. கும்பகர்ணன் நடந்து சென்ற போது லங்கையில் உள்ள ராக்ஷசர்கள் அவன் மேல் மலர்கள் தூவினர்கள். எரிமலையைப் போல் ஜொலித்துக் கொண்டு சென்றான்.

அவன் மதில் சுவர்களைக் காலாலே தாண்டி காலாந்தக யமனைப் போல் வந்ததைக் கண்ட வானரர்கள் பலர் பயந்து இங்குமங்கும் ஓட ஆரம்பித்தார்கள். வானரத் தலைவர்கள் படைக்குத் தைரியம் சொல்லி மிகக் கஷ்டப்பட்டுச் சேனையைக் காத்து வந்தார்கள்.

மும்மூர்த்திகள் ஞாபகச் சின்னம்

மும்மூர்த்திகள் என்ற பெயரிலேயே ஏதோ மந்திர சக்தி இருக்க வேண்டும் என்று தோன்றுகிறது.

சங்கீத மும்மூர்த்திகளுக்கு ஞாபகச் சின்னம் அமைக்கும் திருப்பணிக்கு மேலும் மேலும் ஆதரவு பெருகி வருகிறது. புகழ்பெற்ற சென்னை மயிலாப்பூர் சங்கீத வித்வத் சபையின் தலைவர் திரு கே. வி. கிருஷ்ணசாமி ஐயர் அவர்கள் மிகுந்த உத்ஸாகத்துடன் ஒரு வேண்டுகோள் விட்டிருக்கிறார். அவர் வேண்டுகோள் வருமாறு:-

சங்கீத மும்மூர்த்திகளின் ஞாபகார்த்த நிதிக் கமிட்டியார் விடுத்த அறிக்கையை, சென்னை மியூஸிக் அகாடமியின் சார்பில் நான் மனமார வரவேற்கிறேன். சங்கீதக் கலை வளர்ச்சியில் ஈடுபட்டுள்ள ஸ்தாபனங்களில் முன்னணி ஸ்தாபனம் என்ற முறையில் மியூஸிக் அகாடமியார் சங்கீத மும்மூர்த்திகளின் ஞாபகார்த்த நிதிக் கமிட்டியுடன் சேர்ந்து கொள்வதில் பெருமிதம் அடைகிறார்கள். கர்னடக சங்கீத மும்மூர்த்திகள் தோன்றிய திருவாரூரில், அவர்கள் பிறந்த இடங்களில் தக்க ஞாபகச் சின்னங்கள் எப்பொழுதோ ஏற்படுத்தியிருக்க வேண்டியது.

திருவாரூர் தியாகராஜர் சந்நிதி இம் மும்மூர்த்திகளின் அற்புதமான சங்கீதக் கலையிலீடுபட்ட அத்தனை பெருக்கும் புனித க்ஷேத்திரமாகும்.

சங்கீத மும்மூர்த்திகள் ஒரே காலத்தவர், ஒரே ஊரில் பிறந்தவர்கள் என்பதில் தனி விசேஷமும் மகத்துவமும் இருப்பதை சங்கீத ரஸிகர்களும் பொதுமக்களும் காண்பார்கள்.

நானும் அகாடமி அங்கத்தினர்களும் சங்கீத மும்மூர்த்திகளின் ஞாபகார்த்தக் கமிட்டியாரின் வேண்டுகோளை முழு மனத்தோடு வரவேற்கிறோம். பொது மக்கள் சங்கீத மும்மும்மூர்த்திகளின் ஞாபகார்த்த நிதிக்குத் தாராளமாக நன்கொடைகள் வழங்குவார்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

கே. வி. கே. அய்யர்
(தலைவர், மியூஸிக் அகாடமி)

வித்வத் சபைத் தலைவரின் இந்த வேண்டுகோளே நமது விருப்பமும் ஆகும். விரைவில் சங்கீத மும்மூர்த்திகளுக்கு ஞாபகச் சின்னம் எழுப்புவதற்குச் சங்கீத ரஸிகர்களும், சங்கீத வளர்ச்சியில் ஆர்வமுள்ளவர்கள் எல்லாரும் உதவி புரிவார்கள் என்று எதிர்பார்க்கிறோம்.

ஆஹா! எவ்வளவு பெரியது...



எப்படிப்பட்ட லோலக்குகள் பார்!

'பினகா குடும்ப சைஸ்' அதாவது பினகாவின் பெரிய அண்ணனுக்குக் கருதக் கூடிய புதிய, பெரிய சைஸ் பற்பசையை சிபா உங்களுக்கு அளிப்பதைப் பெருமையுடன் அறிவிக்கின்றனர். மேற் கொண்டு இம்மாதிரி டியூப் ஒவ்வொன்றுடனும் என்றும் பிரகாசமயமிருக்கும் நாகக்கல லோலக் அளிக்கப்படும்.

உங்களுடைய பற்களின் பரிசுத்தமான பாதுகாப்பிற்கு இன்றியமையாத இப்பற் பசையின், பிரம்மாண்டமான டியூப் உங்களால் தாராளமாக இரண்டரை மாத காலத்திற்கு உபயோகிக்கவல்ல பேஸ்ட் அடங்கியதாகும்.

பழங்கள் மணம் கமழும் சுத்தமான பினகா உங்கள் வாயை இனிமையாகவும் பரிசுத்தமாயும் வைக்கிறது. மென்மையான ஈறுகளுக்கு இது சாலச் சிறந்தது.

ஆகையால் தாராளமான
'பினகா் குடும்ப சைஸ்' வாங்கலாமே.



'ஸிபா'வின் விசேஷ குணம் பொருந்தியுள்ள பற்பசை

வட இந்திய யாத்திரை 10

தேசப் படங்கள்

சுமார் நாற்பத்தைந்து வருஷங்களுக்குமுன்னால் நடந்தது இச் சம்பவம்.

தமிழ் நாட்டில் உள்ள பள்ளிக்கூடம் ஒன்றில் பயங்கரக் கூக்குரல் கேட்டது. அதைத் தொடர்ந்து "இந்தியா தேசத்துக்கு ஆபத்து" "இந்தியா கிணற்றில் விழுந்து விட்டது!" என்ற பரிதாபமான குரல் ஒலிகளும் கேட்டன.

ஆசிரியர்கள் மாணவர்கள் எல்லாரும் ஓடிப் போய்ப் பார்த்தார்கள். என்ன ஆச்சரியம்! கிணற்றில் இந்தியா தேசம் விழுந்துதான் கிடந்தது. இந்த நிலைமைக்கு ஒரு மாணவனின் அஜாக்கிரதைதான் காரணம் என்றும் தெரிந்தது. ஆனால் இந்த நெருக்கடியான நிலைமையில் என்ன செய்வது என்று தெரியாமல் எல்லாரும் விழித்துக் கொண்டிருந்தார்கள்.

ஒரு மாணவன் மட்டும் ஏதோ சிந்தனை செய்து கொண்டிருந்தான். அவன் காதுகளில் அந்த நாளில் கேட்ட தேசியப் பிரசங்கங்களின் வாசகங்கள் வந்து விழுந்து கொண்டிருந்தன. "இந்தியா தேசத்துக்காக நீங்கள் ஒரு துரும்பை யாவது எடுத்துப் போட்டதுண்டா!" என்று தலைவர்கள் அலறியது அந்த மாணவனின் காதில் 'கணீர்' என்று விழுந்து கொண்டே இருந்தது. உடனே அந்த மாணவனின் சிந்தனை செயல்பட ஆரம்பித்தது. "இந்தியாவுக்காகத் துரும்பை எடுத்துப் போடுவது என்ன! ஒரு கல்லையே தூக்கிப் போடலாம்!" என்று முடிவு செய்து அதை நிறைவேற்றி வைத்தான்.

கிணற்றில் விழுந்து தத்தளித்துக் கொண்டிருந்த இந்தியாவின் மேல் பக்தியோடு ஒரு கல்லைத் தூக்கிப் போட்டான். இந்தியா தேசம் 'கிரீச்' என்று கத்திக் கொண்டு மெதுவாகத் தண்ணீரில் மூழ்கிக் கடைசியில் மறைந்து போய் விட்டது!

இவ்வாறு தேச சேவை செய்ததினால் அந்த மாணவன் அடைந்த கஷ்ட நஷ்டங்களைக் கூற முடியாது. அன்று முழுவதும் வாத்தியாரின் கட்டளைப்படி பெஞ்சி மீது ஏறி நின்றான். அத்துடன் ஒரு புது இந்திய தேசப் படத்தையும் வாங்கிக் கொண்டு வந்து கொடுத்தான். அதனால் அவன் அடைந்த நஷ்டம் எவ்வளவு தெரியுமா! மூன்றரை ரூபாய்.

இவ்வாறு மாணவனாக இருக்கும்போது தேச சேவை செய்த அந்தப் பெரியார் யார் என்று நேயர்கள் இதற்குள் ஊகித்திருப்பார்கள். வேறு யார்! தமிழ் நாட்டைத் தேச சேவை செய்யத் தட்டி எழுப்பிய பேராசிரியர் கல்கி திரு ரா. கிருஷ்ணமூர்த்தி அவர்கள்தான்.

திரு கல்கி அவர்கள் இந்தச் சம்பவத்தைப் பல முறை சொல்லக் கேட்டதிலிருந்து எனக்குத் தேசப் படங்கள் தயாராகும் இடத்தைப் பார்க்க வேண்டும் என்ற ஆசை ஏற்பட்டுக் கொண்டிருந்தது.

வட இந்திய யாத்திரை தொடங்கியதில் இருந்து அந்த ஆசை அதிகமாயிற்று. வட இந்திய யாத்திரையில் டேராடூனுக்குச் செல்லப்போகிறோம், அங்கு தேசப் படம் தயாரிக்கும் ஸ்தாபனத்துக்குப் போய் வர ஏற்பாடு செய்திருக்கிறார்கள் என்பதைத் தெரிந்து கொண்டதும் சந்தோஷப் பட்டேன். அப்படிச் செய்திராவிட்டால் திரு கல்கி அவர்களுக்குத் தேச சேவை செய்யும் வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுத்த அந்த அதிசய ஸ்தாபனத்தைப் பார்க்க வேண்டும் என்ற என் நீண்ட நெடுநாளைய எண்ணம் எப்படி நிறைவேற முடியும்!

சமுத்திர மட்டத்திலிருந்து இரண்டாயிரம் அடி உயரம் உள்ள டேராடூன் ஜில்லாவின் தலைநகரான டேராடூன் நகரத்துக்குச் சென்றோம். நாங்கள் அங்கு செல்லும்போது நடுநிசி யாகிவிட்டது. ஹரித்வாரத்திலிருந்து டேராடூன் அப்படி ஒன்றும் அதிக தூரமில்லை. ஆனாலும் அந்தப் பக்கத்து ரயில்கள் குறித்த நேரத்தில் கிளம்பி, குறித்த நேரத்தில் குறிப்பிட்ட இடத்துக்குப் போய்ச் சேரும் வழக்கத்தை வைத்துக் கொள்வதில்லை. அதனால் நடு இரவில் டேராடூன் செல்லும்படி ஆயிற்று.

ரயில் காலதாமதம் ஆனால் என்ன! சில மணி நேரம் தாமதம் ஆனாலும் குறிப்பிட்ட இடத்துக்குப் போய்ச் சேர்ந்து விடலாம் அல்லவா என்று நினைக்கத் தோன்றும்.





அது என்னமோ உண்மைதான். ஆனால் என்னைப் போல உடன்வந்த எல்லா பத்திரிகை நிருபர்களும் பசியைப் பொறுத்துக் கொள்ளக் கூடியவர்களாக இல்லை. இதனால் பலபேருக்கு டேராடூனில் உள்ள தேசப் படம் தயாரிக்கும் ஸ்தாபனத்தைப் போய்ப் பார்க்கும் ஆசையும் குறைந்து போய் விட்டது.

"தேசப் படம் தயாரிப்பது என்ன ஒரு அதிசயமா!" என்றார் ஒருவர்.

"சித்திரக்காரர்கள் உட்கார்ந்து சித்திரம் போடுவார்கள். பிறகு அதை பிளாக் செய்வார்கள், அச்சு இயந்திரம் அவைகளைப் பல வர்ணங்களில் அச்சடிக்கும். அவ்வளவுதான்" என்றார் இன்னொருவர்.

எனக்கென்னவோ அவர்கள் கூறியதெல்லாம் ஒன்றும் காதில் விழவில்லை. திருகல்கி அவர்களுக்குத் தேச சேவை செய்யும் ஒரு பெரிய வாய்ப்பைக் கொடுத்த தேசப்படம் தயாரிக்கும் ஸ்தாபனத்தைப் பார்க்கப் போவதில் ஒரே ஆனந்தம்.

டேராடூன் நகரம்

டேராடூன் நகரம் எத்தனையோ துறைகளில் பெயர் பெற்ற நகரம். இங்கு பிரசித்தி பெற்ற ராணுவப் பயிற்சிக் கழகம் ஒன்று இருக்கிறது. இன்னும் பலப்பல அதிசயமான ஆராய்ச்சிக் கழகங்கள் இருக்கின்றன. சுருக்கமாகச் சொன்னால் இந்தியாவின் முக்கியமான ஆராய்ச்சிச் செல்வங்கள் எல்லாம் இங்கு இருக்கின்றன என்று சொல்ல வேண்டும்.

இந்த நகரத்துக்கு இரவு பன்னிரண்டு மணிக்கு வந்தோம். ஆனால் நாங்கள் எதிர்பார்த்ததற்கு மேலாக எல்லாம் நடந்தது என்பதைச் சொல்ல வேண்டியிருக்கிறது. அதாவது டேராடூனில் உள்ள வன ஆராய்ச்சிக் கழகக் கல்லூரியில் எங்களுக்குச் சாப்பாடு ஏற்பாடு செய்திருந்தார்கள். அவரவர்கள் இஷ்டப்படி அவரவர்களுக்குச் சாப்பாடு தயாரித்திருந்தார்கள். அதனால் நிருபர்களுக்கெல்லாம் பரம திருப்தி. எங்களை இரவு எட்டு மணிக்கு எதிர்பார்த்து ஏழு மணிக்கே ஆகாரங்கள் தயார் செய்து வைத்து விட்டார்கள். எங்களுக்காக நாலு மணி நேரம் காத்துக் கொண்டிருந்த ஆகாரங்களின் ஆத்மா பிரிந்து போய் விட்டது. அதாவது ஆகாரங்கள் ஆறிப் போனது டன் ஜில்லிட்டும் போய் விட்டன. அதனால் நிருபர்கள் அவரவர்களுக்குப் பிடித்தமான குளிர்ந்த நீரை வேண்டிய அளவு சாப்பிட்டு மகிழ்ந்தார்கள்.



சாப்பாடு முடிந்த பிறகு வன ஆராய்ச்சிக் கழக விருந்தினர் விடுதியின் வரவேற்புக்கூடத்தில் உட்கார்ந்தோம். அந்தக் கூடத்தின் சுவர்களில் பல படங்கள் மாட்டப்பட்டிருந்தன. நடுநாயகமாக நமது தலைவர் ராஜாஜி அவர்களின் படத்தை மாட்டியிருந்தார்கள். அதைப் பார்த்தவுடன் மிகுந்த திருப்தியோடும் பெருமையோடும் நிமிர்ந்து உட்கார்ந்தேன்.

வடநாட்டுத் தலைவர்களைத் தமிழ் நாட்டில் கொண்டாடுவது போலத் தமிழ் நாட்டுத் தலைவர்களை வட நாட்டில் அவ்வளவாகக் கொண்டாடுவதில்லை. நான் வட நாட்டில் சுற்றிப்பார்த்த இடங்களில் எல்லாம் நம் தமிழ் நாட்டுத் தலைவர்களின் படங்களையே காணவில்லை. அதைப்பற்றி மனத்துக்குள்ளாகவே வருத்தப் பட்டுக் கொண்டிருந்தேன். சிலரிடம் வாய்விட்டும் சொல்லிக் கொண்டு வந்தேன். இந்த சமயத்தில் வன ஆராய்ச்சிக் கழக விருந்தினர் வரவேற்புக் கூடத்தில் ராஜாஜி அவர்களின் படத்தைப் பார்த்ததும் எனக்கு ஏற்பட்ட பெருமை சொல்லி முடியாது.

எல்லாப் பத்திரிகை நிருபர்களுமே நான் சொல்லுவதை அப்படியே ஏற்றுக் கொண்டார்கள். "நீர் சொல்லுவது ரொம்ப சரி. இந்தப் பக்கத்தில் தென்னாட்டுத் தலைவர்களை யாரும்

தயாராகின்றன!

பகீரதன்

நல்ல முறையில் கௌரவப்படுத்த வில்லை தான்" என்று சொன்னார்கள்.

ராஜாஜி அவர்கள் படம் அங்கு மாட்டியிருக்கும் மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டிருந்தபோது ஒரு உண்மை தெரிந்தது. வன ஆராய்ச்சிக் கழகத்தில் இருந்த ஒரு தமிழ் நாட்டு அதிகாரியின் முயற்சியால் ராஜாஜி அவர்கள் திரு உருவப் படம் அங்கு மாட்டப் பட்டிருப்பதை அறிந்து அவருக்கு மனத்துக் குள் நன்றி தெரிவித்துக் கொண்டேன்.

காலையில் தேசப் படங்கள் தயாரிக்கும் ஸ்தாபனத்துக்குக் கிளம்பினோம். ரொம்ப தூரத்துக்கு அப்பாலேயே கம்பீரமான அதன் பெரிய கட்டடங்கள் தெரிந்தன. "அதுதான் தேசப் படங்கள் தயாரிக்கும் காரியாலயம்" என்று காட்டினார் எங்களுடன் வந்த சர்க்கார் அதிகாரி. பிரசித்தி பெற்ற தேசப் படத் தயாரிப்பு ஸ்தாபனத்துக்குள் இப்போது செல்வோம். போகும்போதே தேசப் படம் தோன்றிய அதிசயமான வரலாற்றைச் சிறிது ஞாபகப்படுத்திக் கொள்வோம்.

தேசப் படம் தோன்றிய கதை

இரண்டாவது நூற்றாண்டில் எகிப்து நாட்டைச் சேர்ந்த அலக்ஸாந்திரியாவில் தேசப் படத்தைக் கண்டு பிடித்த அந்த மகான் தோன்றினார். க்ளாடியஸ் டாலெமி என்ற அந்த பூகோள ஆராய்ச்சி நிபுணர் தம் வாழ்நாளெல்லாம் பாடுபட்டுத் தேசப் படங்கள் வரைவதின் அவசியத்தைப் பற்றியும், எப்படி வரைவது என்பதைப் பற்றியும் எட்டு நூல்கள் எழுதினார். அப்பொழுது அந்த நூல்கள் அவ்வளவாக வரவேற்கப் படவில்லை. ஆனாலும் அவர் முயற்சி உலகில் ஒரு புதிய புரட்சியை உண்டாக்கி யிருந்தது. அந்த நூலைப் பலர் படித்து ஆராய்ச்சி புரிய ஆரம்பித்தார்கள். அது காரணமாக 1351-ம் ஆண்டு தேசப் படங்கள் வரைந்து புத்தகமாக வெளியிட ஆரம்பித்தார்கள்.

வட இத்தாலியில் பெரிய கடலில் செல்லும் மாலுமிகளுக்கு உதவுவதற்காகத் தேசப் படங்களைத் தயாரித்துப் பிரசுரித்தனர். ஆனாலும் அஸல் உலக தேசப் படம் 1375-ல் பிரான்ஸ் தேசத்தில் பிரசுரமானது. இது அந்தக் காலத்தில் பூகோள சம்பந்தமான ஆராய்ச்சியாளர்களுக்குப் பெரிய உதவியாக இருந்தது.

பதினைந்து, பதினாறாவது நூற்றாண்டில்தான் பூகோள ஆராய்ச்சி நிபுணர் டாலெமி கண்ட பூகோளப் பட ஆராய்ச்சிக்கு ஒரு பெரிய முன்னேற்றம் ஏற்பட்டது. டாலெமியின் சேவை மக்களுக்கு நேர் முகமாகப் பயன்பட ஆரம்பித்து விட்டது. கொலம்பஸ் புது உலகைக் கண்டு பிடிப்பதற்கு அஸ்திவாரமாக அமைந்து அவருக்கு உணர்ச்சியும் ஊக்கமும் அளித்தது, டாலெமியின் பூகோளப் பட ஆராய்ச்சிப் புத்தகம்தான். டாலெமியின் பூகோள ஆராய்ச்சிக் குறிப்புகளும் அவர் வரைந்திருந்த பூகோளப் படங்களும்தான் கொலம்பஸுக்குப் புது உலகைக் கண்டு பிடிக்கப் பேருதவி புரிந்தன.

இருபதாம் நூற்றாண்டில் தேசப் படங்கள் பிரபலமாகி விட்டன. முதல், இரண்டாவது யுத்தங்கள் வந்த பிறகு வீட்டுக்கு வீடு தேசப் படங்கள் தேவைப்பட ஆரம்பித்து விட்டன! எல்லாரும் தேசப் படங்களின் மூலம் சண்டையில் யார் யார் எந்த எந்த நாட்டை எவ்வளவு தூரம் கபளீகரம் செய்து வருகின்றனர் என்பதைத் தெரிந்துகொள்ள ஆரம்பித்து விட்டனர்.

மகா யுத்தத்துக்குப் பிறகு நவீன யந்திர உலகில் போக்குவரத்துச் சாதனங்கள் வெகு வேகமாகப் பெருக ஆரம்பித்தன. ரயில், மோட்டார், கப்பல், விமானம் முதலிய வாகனங்கள் முன்னேற முன்னேற அதன் போக்குவரத்துக் கான வழிகள் வளர ஆரம்பித்தன. அப்படிச் சாலைகளும், ரயில் பாதைகளும், கடல் மார்க்கங்களும், விமானப் பாதைகளும் பெருகப் பெருக அது அதற்கென்று தனித்தனியே பூகோளப் படங்கள் தயாரிக்க ஆரம்பித்தனர். பல லட்சக்கணக்கான மைல்களுக்கு அப்பால் உள்ள நாடுகளைப் பற்றி நாம் புரிந்து கொள்ளும்படி தேசப் படங்கள் வளர்ச்சி பெற்று விட்டன.

தேசப்படங்களில் தான் எத்தனை வகை! பல தேசங்களின் உருவ அமைப்பு, அதில் உள்ள பருவ காலங்கள், தாவர வர்க்கங்கள், பொருளாதாரச் செல்வங்கள், மலை வளங்கள், நதி வளங்கள், ஜனத் தொகை, அந்தந்த நாட்டில் அதனதன் அரசியல் அமைப்புக்கு ஏற்றவாறு பிரித்து வைத்திருக்கும் முறை எல்லாவற்றையும் தெளிவாகத் தெரிந்து கொள்ளும் முறையில் அற்புதமான வகையில் அமைந்து விட்டன இன்றைய தேசப் படங்கள்.

** ** **

அத்தகைய அதிசயமான தேசப் படங்கள் தயாராகும் இடம்தான் நாம் இப்பொழுது நிற்கும் காரியாலயம். இந்திய சர்க்காரின் நேர் மேற்பார்வையில் நடக்கும் தேசப் படம் தயாரிக்கும் ஸ்தாபனம் இது. இதைச் சர்க்கார் மிகுந்த ஜாக்கிரதையுடன் கவனித்து வளர்த்து வருகின்றனர். இந்த ஸ்தாபனத்தின் தலைமை அதிகாரி இன்னமும் ஒரு ஆங்கிலேயர்தான். இந்தக் காரியாலயத்தைச் சேர்ந்த பிரிகேடியர் ஜெனரலைச் சந்தித்தோம். அவர் நிருபர்களை முகம் மலர வரவேற்று உபசரித்தார். அவர்கள் கேட்ட கேள்விகளுக்கெல்லாம் முகம் கோணாமல் விளக்கமாகப் பதில் கூறினார்.

சுதந்திர சர்க்கார் தங்கள் நாட்டின் படங்களையும், நாட்டிலுள்ள எல்லாச் செல்வங்களையும் மக்களுக்குத் தெரியும்படி தேசப் படம் தயாரித்துக் கொடுப்பது மிகவும் முக்கியம். நம் நாட்டைப் பாதுகாத்துக் கொள்வதற்கு நம் நாட்டின் இயற்கை அமைப்புகளை நாம் நன்றாகத் தெரிந்து கொண்டிருக்க வேண்டும். நாட்டின் ஒவ்வொரு அங்குலப் பகுதியையும், அதன் அமைப்பையும் தெரிந்து கொண்டால் தான் நாட்டைத் தக்க முறையில் காப்பாற்ற முடியும். அதனால்தான் இந்தக் காரியம் ராணுவத்தின் நேரான மேற்பார்வையில் நடைபெற்று வருகிறது. இங்குள்ள சிப்பந்திகளில் பாதிப் பேர் ராணுவ அதிகாரிகள்; பாதிப்பேர் சாதாரண அதிகாரிகள்.

இந்த ஸ்தாபனம் ராணுவத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு மட்டும்தான் இப்பொழுது உபயோகமாகி வருகிறது. நமக்கு வேண்டிய அளவு தேவையைப் பூர்த்தி செய்யும் அளவுக்கு இன்னும் பெருக வில்லை. இந்தத் துறையில் நாம் இன்னும் அதிக


Dralle
TALC
Powder
Finest
Musk
Soap
MADE IN INDIA BY
Dralle
பிரபல நடிகை ஸ்ரீமதி ராஜசுலோசனாவின்
அனுபவத்தை நீங்களும் காணலாமே!
"டிராலி மஸ்க் சோப்பில் பரிமள மிகுந்த வாசனை
யும், மிருதுவான சுத்திகரிப்பு தன்மையும் காண்கிறேன்.
டிராலி டால்கம் பவுடரில் புது மணமும்
புத்துணர்ச்சியும் காண்கிறேன்."

கவனம் செலுத்தி இந்த ஸ்தாபனத்தை வளர்க்க வேண்டும். சுதந்திர சர்க்கார் செய்து வரும் சாதனைகளை யெல்லாம் தேசப் படங்கள் மூலம் தெளிவாக எடுத்துக் காட்ட வேண்டும். அப்பொழுது தான் பழைய அடிமை நாட்டுக்கும் புதிய வளர்ச்சி பெற்ற சுதந்திர நாட்டுக்கும் உள்ள வித்தியாசங்களைத் தெரிந்து கொள்ளலாம். வளர்ச்சி அடையாத பகுதிகளை வளர்ச்சி செய்வதற்கு வழி செய்யலாம். இது எல்லாவற்றையும் விட மிக முக்கியமானது இந்த நாட்டின் பாதுகாப்பு. அதற்கு இந்தஸ்தாபனம் மிக அவசியமானது என்ற விவரங்களை யெல்லாம் கேட்டுத் தெரிந்து கொண்டோம்.



வரிசை வரிசையாக அமர்ந்து தேசப்படங்கள் வரைகின்றனர் தேசப் படக்கலை ஓவிய நிபுணர்கள்.

அந்தப் பிரம்மாண்டமான கட்டடத்தையும் அதற்கு உள்ளே நடக்கும் விஷயங்களையும் பற்றிச் சாதாரணமாகக் கேட்டுத் தெரிந்து கொள்ளவே முடியாது. நேரில் பார்த்துத்தான் புரிந்து கொள்ள வேண்டும். எத்தனை எத்தனையோ பிரிவுகள் கொண்ட காரியாலயம் அது. தேசப் படங்கள் தயாரிக்க யோசனை கூறும் இலாகா, அதன் உருவம் அமைக்கும் இலாகா, அதில் உள்ள நீர்வளம், மலைவளம், பருவகால நிலைமை முதலியவைகளை அமைக்கும் இலாகா, சாலைகள், ரயில் பாதைகள், கப்பல், விமான மார்க்கங்கள் அமைக்கும் இலாகா, அரசியல் அமைப்பை நிர்ணயித்துக் கூறும் இலாகா, இவைகளைச் சரிபார்க்கும் இன்ஜினியரிங் அதிகாரிகள் இலாகா எல்லாம் தனித் தனிப் பிரிவுகளாக இருக்கின்றன. இவைகள் இல்லாமல் தேசப் படங்களைச் சேகரித்து வைத்து விநியோகம் செய்யும் இலாகா ஒன்றும் தனியாக இருக்கிறது. ஒவ்வொரு பிரிவும் ஒரு அதிசயம்தான்.

இருந்தாலும் முக்கியமாகப் பார்க்க வேண்டிய இடம் படங்கள் வரையும் இடமும், அதைப் பிளாக் செய்யும் முறையும், பிறகு அச்சடிக்கும் விதமும் தான் என்பதைத் தெரிந்து கொண்டு முதலில் படங்கள் வரையும் இடத்துக்குச் சென்றோம். அந்தச் சித்திரக் கூடத்துக்குள் சென்றதுதான் தாமதம், அப்படியே அசந்துபோய் விட்டோம். அப்பேர்ப்பட்ட வியப்பைக் கொடுக்கும் காட்சி எதிரில் தென்பட்டது.

வரிசை வரிசையாகச் சித்திரக்காரர்கள் உட்கார்ந்து கொண்டிருந்தார்கள். அவர்கள் கையில் விதம் விதமான நவீன சித்திரங்கள் எழுதும் கருவிகளை வைத்துக் கொண்டு வெகு ஜாக்கிரதையாகப் படங்கள் வரைந்து கொண்டிருந்தார்கள். ஒரு புள்ளி வைப்பதென்றால் கூட அதற்கு ஒரு அளவு. ஒரு கோடு இழுப்பது என்றால் அதற்கு ஒரு கணக்கு. இப்படி எல்லாம் கணக்கு வைத்துக் கொண்டு படங்கள் வரைந்து கொண்டிருந்தார்கள். வர்ணங்கள் வைக்கும் போது தான் எத்தனை ஜாக்கிரதையாக வைக்கிறார்கள், தெரியுமா மலைக்கு ஒரு வர்ணம், நதிக்கு ஒரு வர்ணம், மரங்களுக்கு ஒரு வர்ணம், மேட்டுக்கு ஒரு வர்ணம், பள்ளத்துக்கு ஒரு வர்ணம், கடலுக்கு ஒரு வர்ணம். இன்னும் அரசியல் பிரிவுகளைக் காட்டுவதற்கு ஒரு வர்ணம். இவ்விதம் ஒவ்வொரு சித்திரக்காரரும் ஒவ்வொரு வேலையைத் தனித் தனி விதங்களாகச் செய்து தேசப் படங்களைக் கவனத்துடன் தயாரிக்கிறார்கள்.

வெள்ளைக் கடுதாசியிலே உலகத்தில் உள்ள ஒவ்வொரு தேசத்தையும் அதன் அமைப்பு கெடாமல் உருவாக்குகிறார்கள். மணிக் கணக்காக, நாள் கணக்காக, மாதக் கணக்காக நூற்றுக் கணக்கான சித்திரக்காரர்கள்,—இன்ஜினியரிங் நுணுக்கங்களும், பூகோள ஆராய்ச்சியும், சித்திரக் கலையின் ஞானமும் நிறைந்த சித்திரக்காரர்கள் உழைத்துத் தேசப் படத்தை உருவாக்குகிறார்கள். யுத்த காலங்களில் ராணுவம் எதிரியின் நாட்டைப் பிடிக்கச் செல்கிறது. எவ்வளவோ லட்சக் கணக்கான ரூபாய்களைச் செலவழித்து ஆயிரக்கணக்கான போர் வீரர்களுடன் அங்கு எதைக் கொண்டு செல்கிறார்கள் தெரியுமா! தேசப் படத்தின் துணை கொண்டுதான் செல்கிறார்கள். அதில் உள்ள அளவைக் கொண்டுதான் ராணுவ நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. ஆகவே தேசப் படங்கள் தயாரிப்பது எவ்வளவு நுணுக்கம் நிறைந்த முக்கியமான வேலை என்பதைத் தெரிந்து கொள்ள முடிகிறதல்லவா! தேசப் படம் தயாரிப்பவர்கள் ஏதாவது சிறு தவறு செய்து விட்டால், போதும். அவ்வளவுதான்; எல்லாமே நாசம் தான்! பட்டணம் இருக்கிறது என்று எண்ணிப் பட்டாளம் அங்கு செல்லும்போது அங்கே பட்டணம் இல்லாமல் படுபாதாளக் குழியாக இருந்தால் என்ன ஆவது! எதிரிகளிடம் ராணுவம் சிக்கிவிடும். ராணுவம் சிதைந்து போன பிறகு நாடு அகப்பட்டு அடிமையாக வேண்டியதுதான்.

அப்படி அடிமையாக விட முடியுமா! அதனால் தேசப்படம் வரைபவர்கள் எவ்வளவு முன்

ஜாக்கிரதையாகத் தேசப் படங்கள் தயாரிக்க வேண்டும் என்பதைச் சிந்தித்துப் பாருங்கள்.

பிளாக் செய்யும் விந்தைகள்

பலப் பல வர்ணங்களைக் கொண்டு எத்தனையோ நூற்றுக் கணக்கான ஆராய்ச்சி நிபுணர்கள் வரைந்த அருமையான தேசப் படத்தை அப்படியே பிளாக் செய்து அச்சடிக்க வேண்டுமே, அதுதானே முக்கியம். பிளாக் செய்யும்போது எவ்வளவோ ஜாக்கிரதையாகச் செய்ய வேண்டும். கொஞ்சம் அஜாக்கிரதையாக இருந்தாலும், வர்ணத்தில் சிறு மாறுதல்கள் ஏற்பட்டாலும், கோடுகளின் அளவுகள் சற்று மாறினாலும் தேசப் படத்தின் ஜீவனே போய் விடுமல்லவா!

அதற்காக அதிசயமான படம் எடுக்கும் காமிரா ஒன்று இங்கு இருக்கிறது. ஆசியாவில் உள்ள மிகப் பெரிய காமிரா இது. சுமார் இரண்டு லட்ச ரூபாய் விலையுள்ள இந்தக் காமிராவின் 'லென்ஸ்', அதாவது படமெடுக்கும் கண்ணாடி, ஒரு சிறு அறையின் கதவுபோல் இருக்கிறது என்றால் காமிரா எவ்வளவு பெரிதாக இருக்க வேண்டும் என்பதைக் கற்பனை செய்து கொள்ளுங்கள்.

இவ்வளவு பெரிய காமிராவைச் சாதாரண காமிராவைப் போல் கையாள முடியுமா! அதற்காக அதில் பல விசேஷ சௌகரியங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. காமிராவை மின்சார சக்தியைக் கொண்டுதான் இயக்குகிறார்கள். தேசப் படத்தை பிரேமில் வைப்பது, அதை வேண்டிய அளவுக்குப் படம் எடுப்பது, எடுத்த படத்தை அலம்பி, துத்தநாகத் தகட்டிலோ, செப்புத் தகட்டிலோ பதிவு செய்வது எல்லாமே மின்சார சக்தியின் மூலமாகத்தான் நடைபெறுகின்றன. காமிராவை இயக்கும் மனிதன் ஒரு இடத்தில் இருந்து கொண்டு அந்த அந்தப் பித்தானை அழுத்த வேண்டியது. அவ்வளவுதான்; எல்லாம் ஏதோ மந்திர சக்தியில் காரியங்கள் நடப்பது போல் நடக்கின்றன. கண் மூடிக் கண் திறக்கும் நேரத்துக்குள் காரியங்கள் நடந்து விடுகின்றன.

ஆம், ஒரு பிழை கூட இல்லாமல் அந்தக் காமிரா அற்புதமாக வேலை செய்கிறது. சித்திரத்தில் ஒரு பிசகு நேர்ந்துவிட்டால் அதை அழித்து எழுதிவிடலாம். ஆனால் தேசப் படங்களின் ஏழெட்டு வர்ணங்கள் கொண்ட பிளாக்குகளில் ஏதாவது ஒரு பிளாக்கில் பிசகு நேர்ந்து விட்டால் அதை அப்படியே தள்ளி விட்டு வேறு பிளாக் செய்ய வேண்டியதுதான்.

அப்படி ஒரு பிழையும் இன்றி ஏழு வர்ண பிளாக்குகளில் ஒரு தேசப் படம் அச்சடிப்பதற்கு வசதியாக ஏழு வர்ணங்களைத் தனித் தனியே பிரித்துத் தனித் தனி பிளாக் செய்வதற்கு அந்தக் காமிராவில் வேண்டிய வசதிகள் இருக்கின்றன. அதைக் கொண்டுதான் தேசப் படங்கள் தயாரிக்க முடிகின்றது. பிறகு அந்தப் பிளாக்குகளைக் கொண்டு ஆயிரக் கணக்கான தேசப் படங்களை அச்சடித்து விடலாம்.

காமிராவுக்கு உயிரும் உணர்வும் ஊட்டிச் சித்திரங்களைக் கெடுக்காமல் பிரதி செய்யவும், செய்த சித்திரங்களை நாம் தத்ரூபமாகப் பார்த்து அனுபவிக்கும்படியும் செய்திருக்கும் அதிசயத்தைப் பார்த்து வியந்தோம்.

அச்சடிக்கும் அதிசயம்

அடுத்தாற்போல் அச்சுக் கூடத்துக்குள் செல்வோம். அங்கு பிளாக்குகள் ஒவ்வொன்றுக்கும் 'புரூப்' போடுகிறார்கள். ஒவ்வொரு வர்ணத்துக்கும் தனித்தனியே 'புரூப்' போடுகிறார்கள். ஒவ்வொரு 'புரூப்'பும் சரியாக இருக்கிறதா என்று பூகோளப் பட நிபுணர்கள் சரிபார்க்கிறார்கள். இவ்வாறு சரிபார்த்தவுடன் அதற்கான பெரிய, சிறிய இயந்திரங்களில் அச்சடிக்க ஆரம்பித்து விடுகிறார்கள்.

இந்த அச்சுக்கூடத்துக்குள் இருந்து விட்டால் போதும், நாம் உலகில் வேறு இடங்களுக்குப் போக வேண்டியதில்லை. நாம் பார்க்க வேண்டிய இடமே இவ்வுலகில் ஒன்றும் இராதென்று சொல்லி விடலாம். உலகில் எந்தெந்த நாடுகளில் என்னென்ன வளங்கள் இருக்கின்றனவோ அவைகள் எல்லாவற்றையும் விளக்கிக் கூறும் தேசப் படங்கள் இங்கே அச்சாகின்றன. நாங்கள் அங்கு சென்றிருந்த போது கேரள நாட்டுத் தேசப் படங்கள் அச்சாகிக் கொண்டிருந்தன. அவைகளைப் பார்த்ததும் எங்களுடன் வந்திருந்த கேரள நண்பர் புளகாங்கிதம் அடைந்து போனார். ஒவ்வொரு படத்தையும் தொட்டுத் தொட்டுப் பார்த்து அனுபவித்தார். "கேரள நாட்டில் இதுதான் என்னுடைய ஊர். இங்குதான் என்னுடைய பத்திரிகைக் காரியாலயம் இருக்கிறது. அடேயப்பா, எங்கிருந்து எங்கு வந்திருக்கிறோம்!" என்று சொல்லிக் குதூகலப் பட்டார்.

அந்த அச்சுக்கூடத்தில் பல மாதிரி அச்சு இயந்திரங்கள் இருக்கின்றன. தேசப் படங்களைக் கெடாமல் ஒரே சமயத்தில் வெகு வேகமாக இரண்டு வர்ணங்களில் அச்சடிக்கும் 'ரோட்டரி' என்னும் இயந்திரம் இருக்கிறது. 'ஆப்செட்' என்னும் முறையில் அபாரமான விதத்தில் அச்சடிக்கும் இயந்திரங்கள் இருக்கின்றன. ஆசியாவிலேயே வேறெங்குமில்லாத அதிசய இயந்திரங்கள் இருக்கின்றன. இது இல்லாமல் இன்னும் எத்தனையோ அச்சு இயந்திரங்கள் ஓயாமல் வேலை செய்து கொண்டிருக்கின்றன. ஒவ்வொரு இயந்திரத்திலும் ஒவ்வொரு வர்ணம் அச்சாகிக் கொண்டிருந்தது.

இந்த அச்சுக்கூடத்துக்குள் இருக்கும் போது நமக்கு முக்கியமாகத் தோன்றும் எண்ணம் என்னவென்றால் நமது தேசத்துக்குத் தேசப்படம் தயாரிக்க இந்த ஒரு அச்சுக் கூடம் போதவே போதாது. இதை இன்னும் பல மடங்கு பெரிதாக மாற்ற வேண்டும். இந்தியாவில் உள்ள எல்லா மொழிகளிலும் தேசப் படங்கள் அச்சாகி வெளிவர வேண்டும். அப்படிச் செய்தால் தான் நமது நாட்டு மக்கள் நமது நாட்டைப் பார்த்து, அதன் வளர்ச்சியைக் கண்டு மகிழ்வார்கள்.

தேசப் படங்கள் தயாரிக்கும் இந்த நிலையத்தை ஒட்டினாற்போல இன்னொரு அதிசயமான ஆராய்ச்சி நிலையம் இருக்கிறது. அந்த நிலையத்துக்கும் இந்த நிலையத்துக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. தேசப் படங்கள் தயாரிப்பதற்கான பூமி ஆராய்ச்சியின் நுணுக்கமான அளவுகள் அந்த நிலையத்தில்தான் நடைபெறுகின்றன. அந்த விசித்திரமான பூமி ஆராய்ச்சி நிலையத்துக்குப் போவோம். (தொடரும்)



நீங்களே நியாயம் சொல்லுங்கள்!


அறிவாளிக்குகந்த ப்ளேடு எதுவென்று

ப்ளேடுகளிலிருந்து நீங்கள் எதிர்பார்ப்பது என்ன? நெடு நாட்கள் மழுங்காமல் உழைக்கும் கூர்மை. பல நாட்களுக்கு மழுமழுப்பான சுக க்ஷவரம்.

நீங்கள் ஸெவன் ஓ'க்ளாக் ப்ளேடுகளை உபயோகிக்காவிடில் இவைகளை எங்ஙனம் அடைவீர்கள்? அனேகமாக முடியாது.

நீங்களே நியாயம் சொல்லுங்கள். ஸெவன் ஓ'க்ளாக் ப்ளேடுகளை ஏது தயாரிப்பான வேறெந்த ப்ளேடுகளுடன் ஒப்பிட்டுப் பாருங்கள். மற்றெந்த ப்ளேடுகளினாலும் இத்தகைய மிருதுவான சுக க்ஷவரம் பெற முடியாது. மற்ற ப்ளேடுகள் அனேக நாட்களுக்கு கூர்மையாக இருந்து உழைக்காது.

உங்கள் பணத்திற்குப் பெறுமானம் கொடுப்பது ஸெவன் ஓ'க்ளாக் ப்ளேடுகளே. மட்ட ரக க்ஷவரம் பெற வேண்டிய அவசியமும் இல்லை. ஸெவன் ஓ'க்ளாக் ப்ளேடுகளே வேண்டுமெனக் கேட்டு வாங்குங்கள்.



7 o'clock BLADES

ஸெவன் ஓ'க்ளாக் ப்ளேடுகள்



கவலை தீர்ந்தது

கே. ஜயலக்ஷ்மி

"சீக்கிரமாக வந்து விட்டீர்களே! எங்கேயாவது போகப் போகிறீர்களா?"

"ஆமாம், தங்கம்! இன்று இரவு மெயிலில் பெங்களூர் போகவேண்டியிருக்கிறது. சமையல் ஆகிவிட்டதா?"

"அதற்கென்ன இதோ ஐந்து நிமிஷத்தில் செய்து விடுகிறேன். வருவதற்கு ரொம்ப நாளாகுமா?"

"ஒரு வாரம் ஆகும் என்று நினைக்கிறேன்...அது சரி...நேற்று பக்கத்துவீட்டு மாமி யாரோ ஒருத்தியை விசாரித்துச் சொல்வதாகச் சொன்னாரே. அது விஷயம் என்னவாயிற்று?"

"அதெல்லாம் நம்ப நிலைமைக்குச் சரிப்பட்டுவராது. நீங்கள் பேசாமல் இருங்கோ!" சலிப்பு நிறைந்த குரலில் கூறினாள் தங்கம்.

"ஏன் வராது?" என்று விடாப்பிடியாகக் கேட்டான் விசுவம்.

"பக்கத்து வீட்டு மாமியோடு வந்தவள் முப்பது ரூபாய்க்குக் குறைந்தால் எனக்குக் கட்டி வராது என்று கண்டிப்பாகக் கூறிவிட்டாள். அப்படியானால் எனக்கு வேண்டியதில்லை என்று நானும் வெட்டிப் பேசி அனுப்பி விட்டேன். முப்பது ரூபாய் கொடுக்க நமக்கு முடியுமா என்ன?" என்று கேட்டாள் தங்கம்.

"இதோ பார், தங்கம்! நானோ அடிக்கடி வெளியூர் போக வேண்டியிருக்கிறது. மூன்று குழந்தைகளை வைத்துக் கொண்டு நீ துணைக்கும் ஆளில்லாமல் அவதிப்பட வேண்டியிருக்கிறது. ஐந்தோ, பத்தோ, தொலையட்டும் என்று யாரையாவது ஒருவரை அமர்த்திக் கொள். அப்படியென்ன நமக்கு இப்போது இல்லாமை ஏற்பட்டு விட்டது? எதற்காக நாம் இப்படிக் கஷ்டப்பட வேண்டும்?" என்று அன்பும் ஆதரமும் கலந்த குரலில் வினவினான் விசுவம்.

கணவனின் வார்த்தைகளில் தொனித்த பாசத்தையும், அவனுடைய விழிகளில் மிதந்த அன்பையும் கண்ட தங்கம் உள்ளூறப் பெருமிதம் கொண்டாள். உள்ளத்தின் மகிழ்ச்சி உதடுகளில் புன்முறுவலாக இழைந்து நெளிந்தது. "அடுத்த தடவை நீங்கள் வெளியூர் போவதற்குள் நான் ஏதாவது ஒரு ஏற்பாடு செய்து விடுகிறேன்!" என்று கூறியபடி சமையலறைப் பக்கம் சென்றாள் தங்கம்.

"இப்படிச் சொல்லியே நீயும் மூன்று வருஷங்களைத் தள்ளிவிட்டாய்...ஹூம்..." என்று கூறியபடி தன்னறையை அடைந்த விசுவம், அங்கு இருந்த சாய்வு நாற்காலியில் சாய்ந்து கொண்டான்.

அவனுக்குச் சற்றுத் தூரத்தில் ஒரு மூலையில் அவனுடைய அருமைச் செல்வங்களான மோகனும் சுதாவும் விளையாடிக் கொண்டிருந்தார்கள். அவர்களுடன் பக்கத்து வீட்டுக் குழந்தைகளான ராமுவும் மணியும்கூட விளையாடிக் கொண்டிருந்தார்கள். இந்த நால்வரும் போடும் இரைச்சலைச் சட்டை பண்ணாமல் கடைக்குட்டி ரகு தொட்டிலில் ஆனந்தமாகத் தூங்கிக் கொண்டிருந்தான். அவனைப் போல் நாமும் கொஞ்சம் கண்ணயர்ந்தால் என்ன என்று எண்ணியபடி மெதுவாகக் கண்களை மூடிக் கொண்டான் விசுவம். உடலின் அசதி அவன் கண்களைக் கொக்கி போட்டு இழுத்தது. ஐந்து நிமிஷம் சென்றிருக்கும். அவன் தன்னை மறந்து நித்திரையின் வசமானான்.

அச்சமயம், "ராமு! மணி! ஊரிலேயிருந்து பாட்டி வந்திருக்காள்! உங்களைப் பார்க்கணுமாம். ஓடி வாங்கோ" என்ற வெண்கலக் குரலொலியைக் கேட்டுத் திடுக்கிட்டுக் கண் விழித்தான் விசுவம். வாசற்படியின் அருகில் பக்கத்து வீட்டுப் பத்மா நின்று கொண்டிருந்தாள்.

விடுவிடு வென்று தகப்பனாரின் அருகில் வேகமாக வந்தான் மோகன். "அப்பா!" என்றான். அதற்குள் அவனுக்கு அழுகையே வந்து விட்டது.

"வந்து...வந்து...எங்களுக்கு..." வாய் குழறியது மோகனுக்கு.

"ராமு, மணி, இரண்டு பேருக்கும் ஊரிலிருந்து அவா பாட்டி வந்திருக்காளாம். ஏன் அப்பா! எங்களுக்கு மட்டும் ஊரிலேயிருந்து பாட்டி வரவே மாட்டேன் என்கிறான்?" என்று கேட்டுக் கொண்டே சுதாவும் அப்பாவிடம் வந்தாள்.

இதற்குள் தன்னைச் சுதாரித்துக்கொண்டு விட்ட மோகன், "பைத்தியமே! நமக்கு ஏதுமா பாட்டி? பாட்டி இருந்தால்தானே ஊரிலேயிருந்து வருவாள்! நமக்குத்தான் பாட்டியே கிடையாதே!" என்றான்.

"சரி, வாடா நாம் விளையாடலாம்" என்று கூறிச் சகோதரனின் கைகளை அன்புடன் பற்றி அழைத்துக் கொண்டு போனாள் சுதா.

குழந்தைகள் இருவரும் அப்பால் சென்றதும் விசுவம் "ஹும்..." என்று தன்னையும் மீறிய ஒரு நீண்ட பெருமூச்சு விட்டான். தனக்குச் சிரமம் கொடுக்காமல் குழந்தைகள் தாங்களாகவே சமாதானம் ஆகிவிட்டதில் அவனுக்கு ஒரு திருப்தி. ஆயினும், அவன் மனம் அவர்கள் சொன்னதையே சுற்றிச் சுற்றி வட்ட மிட்டது.

இரண்டு பூர்த்தியடைவதற்கு முன்பாகவே அன்புருவமான அன்னையை இழந்து விட்டு மாற்றாந்தாயின் கொடுமைக்காளான துர்ப்பாக்கியவான் விசுவம். போதாக் குறைக்கு அவனது சிற்றன்னை ஒரு மகனைப் பெற்றாள். புலிக்குப் பிறந்தது பூனையாகுமா? தாயார் ஆறடி பாய்ந்தால் பிள்ளை பசுபதி பதினாறடி பாய்வான்! பிறகு கேட்க வேண்டுமா?

சொல்லொணாத் துன்பங்களுக்கிடையில் ஒரு மாதிரியாக விசுவம் எஸ். எஸ். எல். சி. தேறினான். பிறகு வேலைக்கு வேட்டையாடத் தொடங்கினான். வருடங்கள் இரண்டு நகர்ந்தும் அவனுக்குப் பலன் பூஜ்யமாகத் தான் இருந்தது.

இதற்கிடையில் தம்பி பசுபதியும் எஸ். எஸ். எல். சி. பாஸ் செய்து விட்டு வேலை தேடத் தொடங்கினான். வேலைக்கு மனு எழுதி எழுதி இருவருக்கும் கை சளைத்தது தான் மிச்சமாகியிருந்தது.

இந்தச் சமயம் விசுவத்தின் தகப்பனார் பஞ்சுவய்யர் ஒரு நாள் திடீரென்று மாரடைப்பால் கண்ணை மூடி விட்டார். விசுவம் இடிந்து போனான்.

"இன்னும் ஒரு வாரத்துக்குள் நீ ஏதாவது ஒரு வேலை சம்பாதித்துக் கொண்டு வந்தாக வேண்டும். இல்லாவிட்டால் நீ இந்த வீட்டுக் குத்துச் செங்கலைக் கூட மிதிக்கக் கூடாது" என்று சித்தி கண்டிப்பாகக் கூறி விட்டாள்.

அது முதல் ஒரு வாரம் வரையில் விடாப்பிடியாக அலைந்தான். கடைசியில் ஒரு இடத்தில் வேலை கிடைக்கும் போலிருந்தது. இருநூறு ரூபாய் 'டிபாஸிட்' கட்டித்தான் அந்த வேலையை அவன் பெற்றுக் கொள்ள வேண்டும். இருநூறு ரூபாய்க்கு அவன் எங்கே போவான்? சித்தியிடம் எல்லாவற்றையும் விரிவாக எடுத்துரைத்தான்.

"பணமா? இருநூறு ரூபாயா? நான் எங்கே போவேன்? என்னிடம் என்ன கொட்டியா வைத்திருக்கிறது, நீ கேட்டவுடன் எடுத்துக் கொடுக்க?" என்று கூறிக் கொண்டே தன் இருக்கையை விட்டுச் சித்தி எழுந்திருந்தபோது அவளுடைய கழுத்தில் மின்னிக் கொண்டிருந்த மூன்று பவுன் சங்கிலியைப் பார்த்து வேதனைப் பட்டான் விசுவம். அந்தச் சங்கிலி அவன் தாயார் பங்கஜத்தினுடையது தான் என்பதை அறிந்திருந்தும், அவன் மனநிலையைக் கூறத் தைரியமில்லை.

இரண்டு நாட்கள் பணத்துக்காக எங்கெங்கேயோ அலைந்து திரிந்தான் விசுவம். கடைசியில் அவன் மீது அனுதாபம் கொண்ட அவன் நண்பனொருவன் மூலம் பணம் கிடைத்தது. ஓடோடியும் சென்றான், அந்தக் கம்பெனியை நோக்கி.

அந்தக் கம்பெனி மானேஜரின் பக்கத்து நாற்காலியில் அமர்ந்து வேலை செய்து



மதுரை ஜி. என். சக்ரபாணி செட்டி & சன்ஸ் லிமிடெட்டின் டைரக்டர் - இன் - சார்ஜ் ஸ்ரீ ஜி. ராமஸ்வாமி அவர்கள் குமாரி சௌபாக்யவதி சசிரேகாவுக்கும், பறங்கிப்பேட்டை எஸ். வி: ஓ. ஸி. ஏஜண்டும், ஜெனரல் மெர்ச்சண்டுமான ஸ்ரீ ஆர். செங்கறுதம் செட்டியார் அவர்கள் குமாரன் சிரஞ்சீவி ஏ. ஆர். ஸ்ரீநிவாசனுக்கும் சமீபத்தில் திருமணம் வெகு விமரிசையாக நடந்தேறியது.

வாழ்க, சசிரேகா – ஸ்ரீநிவாசன்

கொண்டிருந்த உருவத்தைக் கண்டதும் விசுவம் திகைத்துப் போய் விட்டான். ஆம். அந்த உருவம் அவன் தம்பிதான். விசுவத்துக்கு ரத்தம் உறைந்து விட்டது. உடலில் ஏமாற்றத்தினால் ஏற்பட்ட பதட்டம்; அவன் உள்ளத்தில் அவமானம். இரண்டுமாகச் சேர்ந்து கொண்டு அவனைச் செயலிழக்கச் செய்து விட்டன. ஒரு மாதிரியாகத் தன்னைச் சுதாரித்துக் கொண்டு, மானேஜரைப் பார்த்து, "ஸார்! நமஸ்காரம்!" என்று ஒரு கும்பிடு போட்டான்.

குரல் கேட்டு நிமிர்ந்தார் மானேஜர். "ஓ! 'நீங்களா? நேற்று காலை பதினொரு மணிக்குள் வரவேண்டும் என்று சொல்லியிருந்தேன். நீங்கள் வரத் தவறி விட்டீர்கள். இதோ இவர் வந்தார், கையில் பணத்துடன். எனக்கும் திருப்திகரமாயிருக்கவே இவரை எடுத்துக் கொண்டு விட்டேன்!"

அவர் வார்த்தையை முடிப்பதற்குள்ளாகவே, "சரி, நான் வருகிறேன்!" என்று கூறி விட்டு அவ்வறையை விட்டு வெளியேறி விட்டான் விசுவம்.

கையிலிருந்த பணத்தை கம்பனிடத்திலேயே திருப்பிக் கொடுத்து விட்டுக் கால் போன வாக்கில் நடந்து சென்றான் விசுவம். வீட்டுக்குத் திரும்பும் எண்ணத்தைக் கை விட்டு, நண்பர்கள் வீட்டில் அங்கும் இங்குமாகக் காலங் கழித்தான்.

ஆறு மாதப் பகீரத முயற்சிக்குப் பிறகு விசுவத்துக்கும் ஒரு வேலை கிடைத்தது. தொத்திக் கொண்டான். அதிர்ஷ்டம் அவன் மீது தன் கடைக்கண் பார்வையை வீசியது. படிப்படியாக உத்தியோகத்தில் உயர்வு கிடைத்தது. அவனுக்குச் சமூகத்தில் உயர்ந்த அந்தஸ்தும் கௌரவமும் ஏற்பட்டன. பிறகு கேட்பானேன்? பணமும் பதவியும் வந்தவுடனே பெண்ணைப் பெற்றவர்களும் அவனை முற்றுகையிடத் தொடங்கினார்கள். அவர்களுள் அவன் கண்டெடுத்த பெண்மணி தங்கம்தான். பெயரைப் போலவே அவள் குணமும் தங்கமாக இருந்தது. அவளை மணம் செய்து கொண்டான் விசுவம்.

"மணி ஏழு அடிக்கப் போகிறதே! சாப்பிட வரவில்லையா? ரயிலுக்கு நேரமாகி விடுமே?" என்று கேட்டுக் கொண்டே உள்ளே வந்த மனைவியின் அன்புக் குரல் கேட்டுச் சிந்தனை உலகத்திலிருந்து விழித்துக் கொண்டான் விசுவம். சாப்பிட்டு விட்டு ஊருக்குப் புறப்படத் தயாரானான்.

★

ஒரு வாரம் சென்றது. அன்று மாலை.

வாசலில் கார் வந்து நின்ற சத்தம் கேட்டு மோகனும் சுதாவும் "அப்பா! வந்துட்டானே! அப்பா வந்துட்டானே!" என்று கூக்குரலிட்டுக் கொண்டே வாசலுக்கு வேகமாக ஓடினார்கள்.

காரை விட்டு இறங்கி உள்ளே வந்த தகப்பனாரின் கைகளை மோகனும் சுதாவும் பிடித்துக் கொண்டு, "அப்பா! அப்பா! நம்பாத்துக்கு ஊரிலேயிருந்து ஒரு பாட்டி வந்திருக்காப்பா! நல்ல பாட்டி. அப்பா! நிறையக் கதையெல்லாம் சொல்றாப்பா!" என்று குதூகலமாகக் கூறிக் கொண்டே குதி நடை போட்டார்கள். ஒரு நிமிஷம் ஒன்றும் புரியாமல் தவித்த விசுவம் தன்னை நோக்கி வந்த தங்கத்திடம் "யார் அந்தப் பாட்டி?" என்று கேட்கும் பாவனையில் கண்களை விரித்தான்.

"நீங்கள்தான் ஓரே பிடிவாதமாகச் சொல்லுகிறீர்களே என்று சமையலுக்கு ஒரு அம்மாளை அமர்த்தியிருக்கிறேன். அவரைத்தான் இதுகள் 'பாட்டி பாட்டி' என்று சுற்றிக் கொண்டேயிருக்கிறதுகள். அவரும் குழந்தைகளிடம் உயிராகப் பழகுகிறார்! சுதா, போய்ப் பாட்டியை அப்பாவுக்குக் காப்பி கொண்டுவரச் சொல்லி விட்டு வா!" என்றாள் தங்கம்.

சிறிது நேரத்தில் காப்பியுடன் கூடத்துக்கு வந்த சமையற்கார அம்மாளைக் கண்ட விசுவம் "ஐயோ! சித்தி, நீயா என் வீட்டுச் சமையற்காரி!" என்று கத்திக் கொண்டே தன் இருக்கையை விட்டு எழுந்திருந்து அந்தம்மாளிடம் ஓடிவந்தான்.

"...விசுவமா! தங்கம் என் நாட்டுப் பெண்ணா? விசுவம்!...நான் காண்பது கனவல்லவே!" என்று கூவிய பாகீரதி தன் வாயிழந்து தன் கையிலிருந்த காப்பி டம்ளரைக்கூடக் கீழே நழுவ விட்டு விட்டு நின்றாள். தன் கால்களின் அருகில் விழுந்து

வணங்கிய விசுவத்தை "எழுந்திரு விசுவம்! இங்கு உன்னைப் பார்க்கப் போகிறோம் என்று நான் கனவில்கூட நினைக்கவில்லை!" என்றான் நாத்தழுதழுக்க.

"சித்தி! பசுபதி எங்கே யிருக்கிறான்? சௌக்கியமாக இருக்கிறானா? நீயேன் இப் படிப்பட்ட நிலைமைக்கு வர நேர்ந்தது?" என்று கேள்விமேல் கேள்வியாகக் கேட்ட விசுவத்தை முதல் முறையாக அன்பு ததும்பப் பார்த்தாள் பாகீரதி. அவள் கண்களில் கண்ணீர் துளித்தது.

"விசுவம்! பசுபதியைப் பற்றிய பேச்சையே என்னிடம் எடுக்காதே. அவன் என் பிள்ளையே இல்லை. அவன் என்னைத் தன் தாயாராக எண்ணவில்லை. உன் தாயாரின் சங்கிலியை விற்று உன்னிடம் பணத்தைக் கொடுக்காமல் அந்தக் கயவனிடம் கொடுத்தேன். உனக்குக் கிடைக்க இருந்த வேலையை உனக்குத் துரோகம் செய்து அவனுக்குக் கிடைக்கச் செய்தேன். அதற்கு நான் கண்ட பலன் இன்று இந்த நிலைமைக்கு வந்திருக்கிறேனே அதுதான். ஐந்தாறு மாதங்களாக எங்கெங்கேயோ அலைந்து திரிந்த எனக்கு நான்கு தினங்களுக்கு முன் உன் தங்கமான மனைவி தங்கம் எனக்குப் புகலிடம் கொடுத்தாள்" என்றாள் சித்தி.

"தங்கம்!" என்றான் விசுவம்.

வியப்பினால் திகைப்படைந்து நின்ற தங்கம் கணவனின் முகக் குறிப்பை நொடியில் புரிந்து கொண்டாள். குழந்தைகளுடன் பாகீரதியின் அருகில் வந்து கைக் குழந்தையை அவள் கையில் கொடுத்து விட்டு, "அம்மா! என்னை மன்னித்து விடுங்கள்! உங்களை இன்னாரென்று தெரிந்து கொள்ளாமல் அறியாத்தனமாய்......" என்று கூறிய தங்கம் வார்த்தையை முடிக்கத்தெரியாமல் தடுமாறினாள்.

"பரவாயில்லை, தங்கம். வீணாக மனத்தை அலட்டிக் கொள்ளாதே! உன்னால்தானே நான் விசுவத்தைச் சந்திக்க முடிந்தது? அன்று நீ என்னைக் கண்டு பரிதாபப்படவில்லையென்றால் இன்று நாங்கள் ஒன்று சேர முடியுமா?" என்றாள் பாகீரதி நன்றிப் பெருக்குடன்.

குழந்தைகள் மூவரும், "பாட்டி! பாட்டி!" என்று கும்மாளமாகக் குதித்துக் கொண்டே பாகீரதியைச் சுற்றிச் சுற்றி வந்தார்கள். பாகீரதி இனந் தெரியாத மகிழ்ச்சியினால் பூரித்துப் போனாள். இந்தக் காட்சியை மனம் நிறைந்த மகிழ்வோடு பார்த்து ரசித்துக் கொண்டு நின்று கொண்டிருந்த விசுவத்தின் வாயினின்றும் "என் குழந்தைகளுக்குப் பாட்டி கிடைத்து விட்டாள்!" என்ற வார்த்தை மெல்லிய குரலில் வெளி வந்தது. "பாட்டி" என்ற அந்தச் சொல்லில் தொனித்த குழைவு அவன் உள்ளத்தைப் புல்லரிக்கச் செய்தது. மெல்ல அவன் சிரித்துக் கொண்டான்.



''ஹிந்து'' பத்திரிகையின் நிருபர் திரு ஆர். வி. ஸவ்னியின் சகோதரரும், ஹைகோர்ட் அட்வகேட்டுமான திரு விட்டல் வி. ஸவ்னிக்கும், அய்யம்பேட்டை திரு பி. ச. சுந்தரராஜன் அவர்களின் புதல்வி செள விஜயலக்ஷ்மிக்கும் சமீபத்தில் வெகு சிறப்பாகத் திருமணம் நடந்தேறியது. மணமக்களுக்கு ஏராளமான ஆசிச் செய்திகள் வந்திருந்தன. வாழ்க, மணமக்கள்!

சிவன் கீர்த்தனைகள்

ஸ்வர அமைப்பு:- செம்மங்குடி சீனிவாச ஐயர்

கிர்த்தனம் 3. ராகம்: கல்யாணி ஆதி தாளம்

பல்லவி

ஸௌந்தரேச்வரனே கபகர(னே)க்கு
பாகடாக்ஷம் வைத்தெம்மை ஆண்டருள் (ஸௌந்தரேச்வரனே)

அநுபல்லவி

சந்த்ரசேகர(னே) சங்கரா திரு
ஆலவாயமர் ஸ்ரீ மீனாக்ஷி (ஸௌந்த)

சரணம்

பண்சுமந்த பாணர்போல் விறகுடன்
மண் சுமந்த திரு முடியழகா
பெண்செய் பிட்டு விரும்பி மாறன்பிரம்படி
புண் சுமந்த மேனியனே மாமதுரை (ஸௌந்த)

கல்யாணி ராகம் 65 மேளகர்த்தாவாகிய மேசகல்யாணி என்பது.
ராகாங்க ராகம், ஸம்பூர்ண ராகம்.

கல்யாணி — ஆதி — 1 களை

பல்லவி

1 ஸ்ா ; ; ஸ்நி தபபா ; பகமா | பா ; ; பக | மா பா தா நீ ||
ஸௌ ந் . த - ரே - - ச்வ - ர | னே க - | ப க ர னே

2 ஸ்ா ; க்ரி ஸ்நி தபபா ; பக மா | பா ; ; ஸ்ா | ஸ் நி பா தா நீ ||
ஸௌ ந் - - த - ரே - - ச்வ - ர | னே க | ப . க ர க்கு

ஸ்ா ; ; பா தா ; நீ ஸ்ா | க்ரி ஸ் நி தா பா | ; ம பா த நீ ||
பா க டா க்ஷம் வை | - - த்தெ - - ம்மை | ஆ - ண்டருள்

3 ஸ்ரிக்ரி ஸ்ரி ஸ்நி தபபா ; பகமா | பா ; ; ஸ்ரி | ஸ்நி பா தா நீ ||
ஸௌ ந் - - - - த - ரே - - - ச்வ-ர | னே க - | ப - க ர க்கு

ஸ்ா ரிக்ரி ஸ்நி நீ நீ ஸ்ரிஸ்ா ஸ்நித | ரி ஸ் ஸ் நி நி த பா | ; ம பா த நீ ||
பா - - - - - - க டா - - - க்ஷம்.வை- | த்தெம் - - - - - மை | ஆ - ண்டருள்

|| ஸௌந்தரேச்வரனே ||

அநுபல்லவி

1 ஸ் நி தா ; நீ ஸ்ாரி க்ா ரி | ஸ்ஸ்ா, ; ; ; | நிரிஸ் நிதப த நி ||
சந் - - த்ர சே - க ர | னே - - | - - - - - - -

2 ரி ஸ் நி த தா நீ ஸ்ா ரி க்ா ரி | ; ஸ்ா ; ஸ்ரி | ஸ் நீ பா தா நீ ||
ச ந் - - - த்ர சே - க ர | சங் க - | ரா - - தி ரு

; ஸ்ா ; ஸ்ரி ஸ் நி தா பா பா | ; த ப மக மா | பா தா ; க்ரி ||
ஆ ல - வா - - ய மர் | ஸ்ரீ - - - மீ | - னா க்ஷி -

ரிஸ்ஸ்ா ; ; ஸ்நி
ஸௌ ந் - - த - ரேச்வரனே ||

சரணம்

1 பா ; தா பா ; பம கா ; | ஸ் நி தபபா ; பத | பம கா கா ரி ||
பண் சு ம ந்த - பா | ணர் போ - - ல் வி - | ற - கு டன் -

கா க த ப த ப ம கா ரி கா மா | பா ப ம ப க மா | பா ; ; ; ||
மண் - - சு - ம - - ந்த தி ரு | மு டி - ய - ழ | கா

2 ப தா நிஸ்ரீ த பபா, ப ம கா ; | ஸ் நி தபபா, ம நித | பம கா கா ரீ ‖
பண் - க - - - மங் - த - பா | ணர் - போல் - - - வி - | ற - கு டன் -

கா , ம ப த ப ம கா ரீ கா மா | பா ப ம ப க மா | பத நீஸ்நி தா பா ‖
ம ண் - க - ம - - ந்த தி ரு | மூ டி - ய - மு | கா - - - - -

1 ஸ் நி தா நீ ஸா ; ரி க்ா ரி | ஸா ஸா க்ரி ஸா | ஸ் நி பா தா நீ ‖
பெண் - செய் பி ட்டு வி ரு | ம்பி மா - - றன் | பி - ரம் ப டி

ஸா ; ஸ்ரி ஸ்நி தா ப ம பநிதா | பா மா பா ; | ; ; ; ; ‖
புண் க - ம - - ந்த - மே - - | னி ய னே

2 ஸ் நி தா நீ ரி நீ ரி க் ம் க்ா | ரி ஸ் ரி க் ரி ஸ்ரி | ஸ் நி பா தா நீ ‖
பெண் - - செய் பி - ட்டு வி - ரு | ம்பி மா - - - றன் - | பி - ரம் ப டி

த க் ரி ஸ் ரி ஸ் நி தா ப ம பநிதா | ப த ப ப பக மா | ; பா தா க் ரி ‖
புண் - க - ம - - ந்த - மே - - | வி - ய - னே - மா | ம து ரை -

ரிஸ்ஸா ; ; ஸ்நி
வாக் - - த - ரேச்வரனே ‖



சமீபத்தில், சென்னை பாரி கம்பெனியார் விளையாட்டுச் சங்கத்தின் ஆதரவில் ஒரு டேபிள் டென்னிஸ்' விழா நடந்ததைப் பற்றிப் பத்திரிகைகளில் நீங்கள் வாசித்திருப்பீர்கள். அப்போது நடந்த இரண்டு சம்பவங்களைப் பற்றிக் குறிப்பிட வேண்டியது அவசியம்.

குமாரி ராகேல் ஜான் மற்றோர் புகழ் மாலையைச் சூடிக் கொண்டார். 'டேபிள் டென்னிஸ்' ராணியாக இருந்த சையீத் சுல்தானா அவர்களை ராகேல் தோற்கடித்தார். சில மாதங்களுக்கு முன்புதான் இந்தியாவின் முதல் ஸ்தானத்தை வகித்து வரும் மீனா பராண்டேயைப் பம்பாயில் தோற்கடித்தார். ஆனால் இந்தத் தடவை ராகேல் மீனாவிடம் ஆட்டத்தை இழந்தார்.

இரண்டாவதாக, ஸ்ரீமதி வி. கே. கே. பிள்ளை (சுந்தரிபாய்) அவர்கள் மீனா பராண்டேயை ஆட்டத்தில் திகைக்க வைத்தார். முதல் இரண்டு ஆட்டங்களை அனாவசியமாக எடுத்தார். ஆனால் "காரணமில்லாமல்" இழந்தார். அவர் தோல்விக்குக் காரணம் அவருக்கே தெரியும். மிக அழகாக, விறுவிறுப்புடன் ஆடுவார். ஆனால் ஒரு கோப்பையைத் தட்ட வேண்டும் என்ற உறுதி இருந்தால், அந்த உறுதி விளையாட்டில் இருக்காது. அதாவது ஒன்று அல்லது இரண்டு சிறிய தப்புகள் செய்து விட்டால் கோப்பையைக் கைவிட்டது போல இருக்கும் அவருக்கு. எல்லாமே தப்பாகச் செய்வது போலத் தோன்றும். அன்றும் அதே மாதிரி தான். முதல் இரண்டு ஆட்டங்களை எடுத்தார். மீனாவோ மற்றொரு தோல்விக்கு இடங் கொடுக்காமலிருப்பதற்குத் தம்முடைய ஆட்டத்தின் விறுவிறுப்பைக் குறைத்தார். ஸ்ரீமதி வி. கே. கே. பிள்ளைக்கு மெள்ள ஆடப் பிடிக்காது. ஆவேசம் குறைந்தது. தப்புகள் அதிகமாயின. மீனா ஜெயித்து விட்டார்.

நடுத்தர வயதுடைய ஸ்ரீமதி வி. கே. கே. பிள்ளை இந்த ஆட்டத்தில் இவ்வளவு ஊக்கம் காண்பிக்கிறார் என்றால் அது இந்த விளையாட்டின் குறைதிசயத்தைக் குறிக்கும். சிறு பிள்ளைகள், பெண்கள் விளையாடுகிறார்கள் என்றால் அதில் விசேஷமில்லை. ஏன்! ஸ்ரீமதி பாலம்மாள் கிருஷ்ணஸ்வாமி அவர்களும் அப்படியேதான். அறுபது வயதுக்கு மேல் ஆகிறது. ஆனாலும், இப்பவும் "பாலக்கா" அவர்கள் ஒரு நாளைக்கு ஒரு ஆட்டம் விளையாடினால்தான் மனத்திருப்தி ஏற்படுகிறது என்று சொல்ல நான் கேட்டிருக்கிறேன்.

சுமார் பதினைந்து வருஷங்களுக்கு முன்; இந்த விளையாட்டில் விறுவிறுப்பு என்பதே கிடையாது. "பிங் பாங்" என்று இந்த விளையாட்டைச் சொல்லுவார்கள். ஆனால் தற்போது இந்த விளையாட்டில் எல்லோரும் சிரத்தை காண்பிக்கிறார்கள். விளையாட்டுப் பாணியும் பெரிய மாறுதல் அடைந்திருக்கிறது. 'டென்னிஸ்' மாதிரி கருவிகளும் மற்ற இதர விசேஷங்களும் அமைந்திருப்பதால் இதற்கு 'டேபிள் டென்னிஸ்' என்ற பெயர் வந்தது.

"பாலக்கா" அவர்கள் ஸ்ரீமதி வி. கே. கே. பிள்ளை அவர்களை 1940-ம் வருஷம் இந்த விளையாட்டுக்கு அறிமுகம் செய்து வைத்தார். அதற்கு முன் 'டென்னிஸ்' விளையாடிக் கொண்டிருந்த ஸ்ரீமதி பிள்ளை அவர்களுக்கு இந்த ஆட்டத்தில் உற்சாகம் ஏற்பட்டது. சென்னை ராஜதானியில் முதல் ஸ்தானம் பல வருஷங்கள் வகித்தார். எவ்வளவோ பந்தயங்களில் விளையாடி இருக்கிறார். சென்னையில் எங்கே பந்தயம் நடந்தாலும் அதில் ஸ்ரீமதி பிள்ளை கட்டாயம் ஆடித்தான் ஆக வேண்டும்! 1953-ம் வருஷம் உலகப் போட்டியில் இந்தியாவின் பிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஆனால் அவரது அன்னையின் உடல் நலம் காரணமாக லண்டனுக்குப் போக இயல வில்லை.

"இவ்வளவு திறமையுடன் நீங்கள் விளையாடுவதின் காரணம் என்ன?" என்று அவரை நான் கேட்டேன். "பயிற்சிதான் முக்கியம். ஸ்ரீ வி. என். ராஜன், ஸ்ரீ என். கிருஷ்ணமூர்த்தி இருவரும் எனக்கு நன்றாக இந்த விளையாட்டில் பயிற்சி கொடுத்தார்கள்" என்றார் சுந்தரிபாய்.


ஸ்ரீமதி வி. கே. கே. பிள்ளை

இந்தியாவில் இந்த ஆட்டம் நன்றாகப் பரவி இருக்கிறது என்பது உண்மை. ஆனால் இந்த ஆட்டத்தின் நுட்பங்களை இன்னும் நன்றாக அறிந்து, ஆராய்ந்து, தேர்ச்சி பெற வேண்டும். மேனாடுகளிலிருந்து அவ்வப்போது சில நிபுணர்கள் நம் நாட்டுக்கு அழைக்கப்படுகின்றனர். நம்மவர்கள் பயிற்சி பெறப் பல முகாம்களையும் அமைத்து வருகின்றனர்.

ஆற்றங்கரையினிலே

பேராசிரியர்: ரா.பி. சேதுப்பிள்ளை



38. திருவாரூர்

நல்லரசும் வல்லரசும் இந் நிலவுலகில் என்றும் உண்டு. நல்லரசாட்சியில் மன்னுயிர் இன்புற்று வாழும்; வல்லரசாட்சியில் துன்புற்று வாடும்; உயிர்கள் அல்லற்பட்டு ஆற்றாது அழுத கண்ணீர் அரசாங்கத்தை அறுக்கும் என்று அறநூல் கூறுகின்றது.

ஆயினும் கல்மனம் படைத்த வல்லரசாங்கம் கண்ணீரை ஒரு பொருளாகக் கருதுவதில்லை. சிறையிருந்த சீதையின் கண்ணீரால் இராவணன் மனம் இளகவில்லை; பாஞ்சாலியின் கண்ணீரால் துரியோதனன் மனம் துளங்கவில்லை; சயந்தன் பெருக்கிய கண்ணீர் சூரன் உள்ளத்தை உருக்கவில்லை. ஆனால் ஐயறிவுடைய ஒரு பசு வடித்த கண்ணீரைக் கண்டு கலங்கினான் ஒரு தமிழ் மன்னன்; வாயில்லாத அவ் வுயிரின் குறையறிந்து முறை செய்தான்.

இக் காட்சியைக் காணும் பேறு பெற்றது சோழ நாட்டில் உள்ள திருவாரூர் என்னும் திருநகரம். முன்னாளில் சோழ நாட்டின் தலைநகராய் அமைந்த அப் பதியில் நீதி நெறி தவறாத அரசர்கள் ஆட்சி புரிந்தனர். வாழையடி வாழையென வந்த வளவர் குலத்தில் தோன்றிய இளவரசன் ஒருவன் ஒருநாள் தேர் ஊர்ந்து திரு வீதியில் செல்லும்பொழுது ஓர் இளங்கன்று தாயைப்பிரிந்து பாதையினிடையே துள்ளிப் பாய்ந்தது; தேர்க்காலிற்பட்டு மாய்ந்தது. கன்றை இழந்த பசு கதறிற்று; பதறிற்று; கண்ணீர் பெருக்கிற்று. அரசிளங் குமரன் திடுக்கிட்டான்; தேரினின்று இழிந்தான். கன்றின் செந்நீரையும் பசுவின் கண்ணீரையும் கண்டு மயங்கி வீழ்ந்தான்.

கன்றை இழந்து கடுந் துயர் அடைந்த பசு, மன்னன் மாளிகையை நோக்கி நடந்தது; கொற்ற வாசலில் தூங்கிய ஆராய்ச்சி மணியைக் கொம்பால் அசைத்து அடித்தது. மணியோசை கேட்ட மன்னவன் மனம் பதைத்து விரைந்து போந்தான். பசுவின் துயர் கண்டு துடித்தான். அமைச்சர் வாயிலாக நிகழ்ந்ததை அறிந்தான். இளவரசனே குற்றவாளி என்று துணிந்தான்.

"கொலையிற் கொடியாரை
வேந்து ஒறுத்தல் பைங்கூழ்
களைகட் டதனொடு நேர்"

என்னும் முறைப்படி நீதி செலுத்தினான்.

தமிழ் நாட்டில் மன்னர்க் கொரு நீதி, மற்றவர்க் கொரு நீதி என்பது எக்காலும் இல்லை. குற்றம் செய்தவன் எக்குடிப் பிறப்பினும் யாவனேயாயினும் குற்றத்திற்குரிய தண்டனையைப் பெற்றே தீர வேண்டும் என்ற முறைப்படி மகனைத் தண்டிக்கத் தலைப்பட்டான்.

"ஒரு மைந்தன் தன்குலத்துக்
குள்ளானென் பதும்உணரான்
தருமம்தன் வழிச்செல்கை
கடன்என்று தன்மைந்தன்
மருமம்தன் தேராழி
உறஊர்ந்தான் மனுவேந்தன்
அருமந்த அரசாட்சி
அரிதோமற் றெளிதோ தான்"

(ஆழி - சக்கரம்)

என்று மகனை முறை செய்த மன்னவன் பெருமையை மனமாரப் புகழ்ந்து பாடினார் சேக்கிழார் பெருமான்.

குற்றம் புரிந்தவன் தன் மைந்தன் என்றும் எண்ணாது, தன் குலத்தை வாழ்விக்க அவன் ஒருவனே உள்ளான் என்றும் கருதாது, இளவரசன் மீது தானே தேரைச் செலுத்திய நீதி மன்னனைத் தமிழ் கூறும் நல்லுலகம் தலைக்கொண்டு புகழ்ந்தது. திருவாரூரின் பெருமை அம் மன்னன் செய்கையால் பன்மடங்கு உயர்ந்தது.

தமிழ்ப் பெருங் காவியங்களாகிய சிலப்பதிகாரமும் மணிமேகலையும் அம் மன்னன் புகழைப் பாடுகின்றன. மதுரைமா நகரில் பிழைக்க வந்த கோவலனைக் கொன்று பிழை செய்தான் பாண்டியன் நெடுஞ்செழியன். அக் கொடுமையை அறிந்தாள் அவன் மனைவியாகிய கண்ணகி; மனம் கொதித்தாள். புண்ணுற்ற கணவன் மேனியில் விழுந்து புல்லும் கல்லும் கரைந்து உருகப் புலம்பி அழுதாள். 'கரவறியாத என் கணவனைக் கள்வன் என்று பழி சுமத்திக் கொன்றானே மதுரை மன்னன்' என்று கதறினாள்.

"கள்வனோ அல்லன் கணவன்என் காற்சிலம்பு
கொள்ளும் விலைப்பொருட்டால் கொன்றாரே"

என்று மன்னன் மீது குற்றம் சாட்டினாள். தன் கணவன் குற்றவாளியல்லன் என்று நிறுவும் பொருட்டுக் காவலனது மாளிகையை நோக்கி நடந்தாள். நீதி தவறிய மன்னன் மாளிகையைக் காத்து நின்ற காவலாளரைக் கண்டாள்; கடும் சீற்றம் கொண்டாள்.

"அறிவறை போகிய பொறியறு நெஞ்சத்து
இறைமுறை பிழைத்தோன் வாயிலோயே
இணையரிச் சிலம்பொன்று ஏந்திய கையள்
கணவனை இழந்தாள் கடையகத்தாள் என்று
அறிவிப்பாயே அறிவிப்பாயே"

என்று திண்ணமாகப் பணித்தாள். மன்னன் ஆணை பெற்று மாளிகையின் உள்ளே சென்று அரியணையில் அமர்ந்திருந்த அரசன் முன்னே நின்றான். அழுது அழிந்த கண்களோடும், புழுதிபடிந்த மேனியோடும் அவிழ்ந்து சரிந்த கூந்தலோடும் எதிரே நின்ற அவலக் காட்சியைக் கண்ட அரசன் மனம் பதைத்து "மாதே! நீ யார்?" என்று வினவினான். அப்போது கண்ணகி தன் ஊரும் பேரும் உரைப்பாளாயினாள்.

" வாயிற் கடைமணி நடுநா நடுங்க
ஆவின் கடைமணி உகுநீர் நெஞ்சுசுட
தான்தன்
அரும்பெறற் புதல்வனை ஆழியின்
மடித்தோன்
பெரும்பெயர்ப் புகார் என் பதியே"

என்று அறைந்தாள். "அரசே! கன்றை இழந்த ஒரு பசுவின் கண்ணீரைக் கண்டு மனங்கலங்கி, அவ்வுயிர்க்குத் தவறிழைத்த தன் அருமைப் புதல்வனைத் தேராழியாற் கொன்று முறை செய்த நீதிமன்னற்குரிய பூம்புகார் நகரத்திற் பிறந்தவள் நான்" என்று பெருமிதமாகப் பேசினாள் கண்ணகி. மனுச் சோழன் பெற்ற பெருமை அவன் மரபினர்க் கெல்லாம் உரியதாயிற்று.

பூம்புகார் என்னும் காவிரிப்பூம்பட்டினத்தில் அரசு வீற்றிருந்தான் நெடுமுடிக் கிள்ளி என்னும் சோழ மன்னன். அவன் மைந்தன் உதயகுமரன் என்பவன் அந்நகரில் வாழ்ந்த மணிமேகலையைக் காதலித்தான். துறவுள்ளம் படைத்த அம்மங்கை இளவரசனை ஏற்றுக் கொள்ளவில்லை. அவளை எவ்வாற்றானும் கைப்பற்றக் கருதி நள்ளிரவில் அவளிருந்த இடத்துக்குச் சென்ற இளவரசனை அயலான் ஒருவன் வெட்டி வீழ்த்தினான்.

நிகழ்ந்த செயலை அறிந்தான் நெடுமுடிக் கிள்ளி. மைந்தன் இறந்தானே என்று சிறிதும் மனம் வருந்தினானில்லை.

"மாதவர் நோன்பும் மடவார் கற்பும்
காவலன் காவல் இன்றெனில் இன்றால்
மகனை முறைசெய்த மன்னன் வழிஓர்
துயர் வினையாளன் தோன்றினன் என்பது
வேந்தர் தம்செவி உறுவதன் முன்னம்
ஈங்கிவன் தன்னையும் ஈமத்து ஏற்றுக"


எனப் பணித்தான். "ஒரு பசுவிற்குத் தவறிழைத்த அருமைப் புதல்வனைத் தானே கொன்று முறை செய்தான் என் குலமுதல்வன். அந்த நீதி மன்னன் மரபில் தீயவனாகிய என் மைந்தன் தோன்றினான். மங்கையர் கற்பைக் காக்கும் கடப்பாடுடைய அரசகுமாரன் அதனை அழிக்க முயன்றான். அவன் கொலையுண்டது சரி. ஆயினும் என் கையால் ஒறுத்தற்குரிய மைந்தனை மற்றொருவன் கொன்றானே என்றுதான் என் உள்ளம் கொதிக்கின்றது. மனுவேந்தன் பெற்ற பேறு எனக்குக் கிட்டாது ஒழிந்ததே! இனி அதை நினைத்து ஆவதொன்றில்லை. அத்தீய மைந்தனது உடலை என் கண்ணிற் காட்டாமல் சுடலையிற் கொண்டு சுட்டு எரியுங்கள்" என்று கட்டளையிட்டான்.

இவ்வாறு தமிழ்நாட்டு மன்னரும் மக்களும் நீதியின் வரம்பு கண்ட மனுவேந்தனைக் குறிக்கோளாகக் கொண்டு வாழ்ந்தனர். அம் மன்னனை மனமார வாழ்த்தினர்.

"புறவுநிறை புக்குப் பொன்னுலகம் ஏத்தக்
குறைவில் உடம்பரிந்த கொற்றவன் யார்
அம்மானை
குறைவில் உடம்பரிந்த கொற்றவன் முன்
வந்த
கறவை முறைசெய்த காவலன்காண்
அம்மானை
காவலன் பூம்புகார் பாடேலோர் அம்மானை"

(புறவு - புறா : கறவை - பசு)

என்று ஆரூரில் நிகழ்ந்த செயற்கரிய செயலைச் சிலம்பு பாடிற்று. **(தொடரும்)**



இந்த நூதன டூத்பேஸ்டினால் குழந்தைகளின் பற்களை பாதுகாருங்கள்

உங்கள் குழந்தைகளின் பற்கள் அரிய மதிப்புடையவை; அவற்றிற்கு விசேஷ கவனம் செலுத்த நீங்கள் விரும்புவது சகஜமே. ஆகையால்தான் நீங்கள் ஆக்டிவ் க்ளோரோபில் சேர்ந்த 'கோலினாஸ்' உபயோகிப்பது அவசியமாகும். செழிப்பான நுரையுள்ள இந்த நூதன டூத்பேஸ்டு பல் சிதைவிற்குக் காரணமான கிருமிகளை ஒழித்து, ஈறுகளை உறுதியாகவும் ஆரோக்கியமாகவும் வைத்திருக்க உதவுகிறது.

குழந்தைகள் இதன் இனிய பெப்பர்மின்ட் சுவையையும், புதுமைப் பச்சை நிறத்தையும் விரும்புவர். தவிர, 'கோலினாஸ்' அதிக சிக்கனமுடையதென்றும் உங்களுக்குத் தெரியவரும். ஈரமில்லாத பிரஷில் அரையங்குல அளவே போதுமானது.


இன்றே ஆக்டிவ் க்ளோரோபில் சேர்ந்த பச்சை 'கோலினாஸ்' டூத்பேஸ்டை உபயோகிக்கத் தொடங்கி உங்கள் பணத்திற்கு பரிபூரண பயன் பெறுங்கள்!





'கோலினாஸ்' புன்னகையில் ஆரோக்கியம் ததும்புகிறது.

GX. 1179



அத்தியாயம் 49

பயங்கரச் செய்தி

ராஜாராம் வரும்போதே, "நான் இப்படி நடக்குமென்று எதிர்பார்க்க வில்லை, மிஸ்டர் ரங்கதுரை. ஈசுவர மூர்த்தி வந்துவிட்டுப் போனாராமே? அவர் வருவாரென்று சிறிதேனும் தோன்றியிருந்தால் இந்த இடத்தை விட்டு நான் போயிருக்கவே மாட்டேன்" என்றார்.

"நீங்கள் இருந்திருந்தால் மட்டும் என்ன ஆகியிருக்கப் போகிறது?" என்றார் ரங்கதுரை.

"நான் இருந்திருந்தால் அவரை மேலே வரவிட்டிருக்க மாட்டேன். உங்களையும் அவர் கண்களில் பட விட்டிருக்க மாட்டேன்."

"நான் ஒளிந்து கொள்ளத்தான் முதலில் நினைத்தேன். ஆனால் என் கார் வெளியில் இருந்தது. அதை ஈசுவரமூர்த்தி கவனித்திருந்தால் நான் உள்ளே இருப்பேனென்று எதிர் பார்த்திருப்பாரல்லவா? மேலும் பயந்து ஒளிந்து கொள்வதற்கு என் மனச்சாட்சி இடந் தரவில்லை."

"அது என்னவோ! இப்போது அவர் உங்களை இங்கு பார்த்ததனாலும் ஒன்றும் கெடுதல் வராதென்று சொல்ல முடியாதல்லவா? 'அஞ்சுவது அஞ்சாமை பேதமை' என்பது உங்களுக்குத் தெரியாத விஷயமா? ஈசுவர மூர்த்தி ஒரு நச்சுப் பாம்பு. எதிரில் வந்து சண்டையிடும் சிங்கத்துடன் போராடலாம். ஊர்ந்து வந்து காலைக் கடிக்கும் பாம்புடன் சண்டை போட முடியுமா? அல்லது அது கடித்த பிறகு அதைக் கொன்றுதான் பயன் உண்டா? கடிக்காமல் ஜாக்கிரதையாக இருப்பதுதான் சிறந்தது அல்லவா? ஆனால் உங்கள் பேரிலும் தவறில்லை. நான்தான் முட்டாள்தனமாக வெளியே போய் விட்டேன்."

"ஆமாம்! ஈசுவரமூர்த்தி நேரே மாடிக்கு வந்தாரே. கவுண்டர்கூட இல்லையா, ஓஹோ!" என்று கேட்டேன்.

"ரங்கதுரை வந்த உடனே அவரை மேலே அனுப்பி விட்டுக் கவுண்டரிடம், 'அவர்கள் சண்டை போட்டுக் கொண்டு எப்படியாவது சமாதானமடைந்து விடுவார்கள். வேறு யாரும் மேலே போய் அவர்கள் பேச்சில் குறுக்கிடாமல் பார்த்துக் கொள்ளுங்கள்' என்று சொல்லி விட்டு நானும் இவருடைய காரை எடுத்துக்கொண்டு

வெளியே போய் விட்டேன். கவுண்டர், வள்ளி மேலே ஓடிவந்து விடப் போகிறுளே என்று உள்ளே அவளுடன் பேசிக் கொண்டிருந்தாராம். வாசல் கதவைச் சாத்த மறந்து விட்டார் போலிருக்கிறது. ஈசுவரமூர்த்தி திரும்பிப் போகும்போதுதான் பார்த்தாராம். அவருக்குத் தூக்கிவாரிப் போட்டதாம். நானும் அநியாயமாக ஏமாந்து போய் விட்டேன்."

"என்ன ஏமாந்தீர்கள்?"

"நீங்கள் மாடிப்படி யேறி வந்த பிறகு நான் தோட்டத்தில் போய் நின்றேன். அப்போது ஒரு ஆள் வந்து 'உங்களைப் 'பகத் சிங்' அவசியம் பார்க்க வேண்டுமாம். ரொம்ப முக்கியமான விஷயம். இந்தத் தெரு முனையில் ஒரு கார் நிற்கிறது. அதை உடனே தொடர்ந்து சென்றுல் அவரைப் பார்க்கலாம்' என்றான். மேலும் என்னுல் ஆவலை அடக்க முடியவில்லை. உங்கள் காரில் எட்டிப் பார்த்தேன். சாவி இருந்தது. ஆகவே நானே ஓட்டிக் கொண்டு போனேன். தெரு முனையில் ஒரு கார் இருந்தது. அதை நெருங்கியதும் அது புறப்பட்டது. வெகு தூரம் தொடர்ந்து சென்றேன். அது திடீரென்று எங்கேயோ ஒரு சந்தில் புகுந்து மறைந்து விட்டது. சுற்றிச் சுற்றி வந்தும் ஒன்றையும் காண வில்லை. பிறகுதான் அதில் ஏதோ வஞ்சனை இருக்கிறதென்று தோன்றிற்று. உடனே திரும்பி வந்தேன். ஈசுவரமூர்த்தி மிகக் கோபமாக இறங்கிப் போனார் என்று கவுண்டர் கூறினார். அவர் இங்கு நல்ல எண்ணத்தோடு வரவே இல்லை. நீங்கள் இருந்ததால் இந்துமதி பிழைத்தாள். என்னுல் எவ்வளவு நாள் இந்துவைப் பாதுகாக்க முடியும்? நீங்கள் சீக்கிரம் அந்தப் பொறுப்பை ஏற்றுக் கொண்டு விடுங்கள்" என்று கூறி விட்டுச் சிரித்தார் ராஜாராம்.

ரங்கதுரை சிரிக்க வில்லை. "இந்த ஈசுவரமூர்த்திக்கு ஏதனுல் இப்படி யாருடைய வாழ்க்கையையாவது கெடுப்பதே தொழிலாக இருக்கிறது?" என்று வருத்தத்துடன் கூறினார்.

"இவனைப் பிடித்துச் சிறையில் தள்ள இங்கு ஒருவருக்கும் தைரியம் இல்லையே? நீங்கள்தான் நீதிபதி ஆயிற்றே. இந்தக் கொாதகனைப் பிடித்துச் சிறையில் போடுங்களேன்" என்றார் ராஜாராம்.

"சிறையில் தள்ளுவது இலேசான காரியமா? வழக்குத் தொடுக்க வேண்டாமா? சாட்சிகள் வேண்டாமா? குற்றம் ருசுவாக வேண்டாமா? இப்போது ஈசுவரமூர்த்தி இங்கு வந்தாரே. ஏதோ கெட்ட எண்ணத்துடன்தான் வந்திருக்கிறார். உங்களை இந்த இடத்தை விட்டுக் கிளப்புவதற்கு ஒரு சமாசாரம் சொல்லி அனுப்பினாரே. அவர் எவ்வளவு கெட்டிக்காரராக இருக்க வேண்டும்! ஏதாவது இதற்குச் சாட்சி சொல்ல முடியுமா? எனக்கு அவர் இந்துவை இம்சிக்கவே வந்தார் என்றும், அவர்தான் அப்படிச் செய்தி சொல்லியனுப்பினரென்றும் நன்றாகத் தெரிகிறது. ஆனால் எப்படி நிரூபிக்க முடியும்? இந்துவைப் பிடித்துக் கொண்டு போனரே, அதற்கு வழக்குப் போட முடியுமா? இந்துவைத் தவிர யார் சாட்சி சொல்ல முடியும்? அவர் மிகுந்த முன் ஜாக்கிரதையாகக் காரியங்கள் செய்வதால் ஒருவராலும் ஒன்றும் கண்டு பிடிக்க முடியவில்லை.

"அதேமாதிரி இந்துவை நிரபராதி என்று நிரூபிக்கவும் சாட்சிகள் இல்லை. இந்த உலகத்தில் சந்தேகமும் துவேஷமும் நீங்கி, அன்பும் அறமும் என்றுதான் வளரப் போகிறதோ? அப்படிப்பட்ட ஒரு காலத்தை என் கண்களால் பார்க்கவே முடியாது போலிருக்கிறது" என்றார் ரங்கதுரை.

"எனக்கும் அதுதான் புரிய வில்லை. இந்த உலகத்து மக்களை உய்விக்க எத்தனை மகான்கள் அவதரித்திருக்கிறார்கள்? புத்தரும், ஏசுநாதரும் அவதரித்து அன்பு மதத்தைப் பரப்பிய பிறகும், உலகத்தில் ஏன் யுத்தமும் கொடுமையும் நிறைந்திருக்கின்றன? இத்தனை மதங்களும் இத்தனை தத்துவங்களும் இருந்தும் ஏன் ஜனங்கள் துவேஷத்தை வளர்க்கிறார்கள்? பெரிய பெரிய பதவிகளில் அமர்ந்திருக்கும் உலக மகா பிரமுகர்களுக்கு ஏழை மக்களின் மீது இரக்கமே இல்லையா?



இப்படித்தான் அவர்கள் மீது குண்டுகளைப் பொழிந்து கொல்வார்களா? இந்தச் சாதாரண விஷயம் ஏன் அவர்களுக்குத் தெரியவில்லை?" என்று அடுக்கினேன் நான்.

"ஏதேது! இந்துமதி! யுத்தத்தைப் பற்றியும் தத்துவங்களைப் பற்றியும் பிரமாத



மாகப் பேசுகிருயே?" என்ருர் ரங்கதுரை.

"நான் விரத்தான் பட்டியில் இருந்த போதெல்லாம் தினப் பத்திரிகை படிப்பது வழக்கமாகி இருந்தது. தினந்தோறும் பத்திரிகையில் யுத்தத்தைப் பற்றிய செய்திகளைப் படிக்கும் போது என் மனம் என்னபாடு படும் தெரியுமா? 'லண்டனில் குண்டு விச்சு' என்ற தலைப்புகளைப் பார்த்தால் எனக்குத் தலை சுற்றும். ஜனங்கள் படும் கஷ்டங்களைப் பற்றியெல்லாம் தெரிந்து கொண்டேன். அந்தக் கொடூரமான அனுபவங்களைப் பற்றிப் படிக்கும்போது யாருக்குத் தான் இப்படித் தோன்ருது?"

"உண்மைதான், இந்து! நான் கூட இங்கிலாந்தில் இருந்தபோது பல தடவைகள் இப்படியெல்லாம் நினைத்திருக்கிறேன். என்னுடைய அனுபவங்களைப் பற்றிப் பத்திரிகைகளுக்கு எழுதலாமென்று கூட நினைத்ததுண்டு. எத்தனை பயங்கரங்களைக் கண்ணுல் கண்டிருக்கிறேன் தெரியுமா? இரவெல்லாம் தூக்கமேவராது. அப்போதெல்லாம், 'இந்துமதி அருகில் இருந்தால் எவ்வளவு ஆறுதலாக இருக்கும்?' என்று தோன்றும். சில சமயம், 'நான் இந்தக் குண்டு வீச்சில் இறந்து போய்விட்டால் இந்துமதிக்கு யார் விஷயத்தைச் சொல்லுவார்கள்? அவளுக்குத் தெரியாமலேயே இருந்து விட்டால்?' என்று நினைக்கும்போது ரொம்ப வேதனையாக இருக்கும். 'தெரியாமலிருப்பதும் நல்லதுதான். எங்கேயோ உயிரோடு இருக்கிருர் என்று நினைத்துக் கொண்டு வருத்தப் படாமல் இருப்பாள்' என்று நினைத்துக் கொள்வேன்."

"போதும்! போதும்! என்னுல் தாங்க முடியவில்லை" என்றேன்.

ரங்கதுரை சிரித்தார். "இந்து! இதற்கே இப்படிப் பயப்படுகிருயே, மற்ற விஷயங்களை யெல்லாம் சொன்னுல் என்ன பாடுபடுவாயோ? ஒரு விஷயம் நினைக்க நினைக்க எனக்கு வியப்பாக இருக்கிறது. நான் சிறுவனுக இருந்தபோது, — என் தாயார் உயிருடன் — இருந்தபோது, உன்னை மாதிரியே என்னையும் ஒருவர் பிடித்துக் கொண்டு போனுர். அதே மாதிரி என்னை ஒருவர் காப்பாற்றினுர். இது ஒரு அதிசயமில்லையா? இந்த இரண்டு பேரையும் பற்றி எனக்குச் சில சந்தேகங்கள் ஏற்பட்டிருக்கின்றன. ஆனுல் ஊர்ஜிதமாகவில்லை" என்ருர்.

நானும் ராஜாராமும் ஆர்வத்துடன் அவர் சொன்னதைக் கேட்டோம். ராஜாராம் விவரமாக விஷயத்தைக் கூறும்படி கேட்டார்.

ஆனுல் ரங்கதுரை, "என் சந்தேகம் நிச்சயம்தானு என்று தெரிந்து கொண்டு பிறகு அதைச் சொல்கிறேன். இப்போது என்ன அவசரம்?" என்ருர்.

"சரி! அப்படியானுல் பிறகு கேட்கிறேன். எனக்கு இப்போது ஒரே பயமாக இருக்கிறது. ஏதோ படபடப்பாகவே இருக்கிறது. என்னை விட்டு விட்டு நீங்கள் போக மாட்டீர்களே?" என்று கேட்டேன்.

"என்ன இந்து? இப்படி மனத்தை அலட்டிக் கொள்கிருய்? அமைதியாக இரு. அதுதான் ரங்கதுரை வந்து விட்டாரே. இன்னும் எதற்காக அனாவசியமாகக் கவலைப்பட்டு மனத்தை நோகச் செய்து கொள்கிருய்?" என்ருர் ராஜாராம்.

"பாவம்! இந்துவுக்கு ரொம்பச் சோதனைக்கு மேல் சோதனையாக வந்து அவளைப் பலஹீனமடையச் செய்து விட்டது. இனிமேல் ஒரு கவலையும் கிடையாது பார், இந்து! ஒரே சந்தோஷமாக இருக்கப் போகிருய்!" என்ருர் ரங்கதுரை.

"இருக்கப் போகிறோம் என்று சொல்லுங்கள்" என்ருர் ராஜாராம்.

ரங்கதுரை தமக்கே இயல்பான புன் சிரிப்புடன், "ஆமாம்! இன்னும் மூன்று மாதங்கள் இந்து பொறுத்திருக்க வேண்டும்" என்ருர்.

"ஏன்?" என்று நான் மிகுந்த கவலையுடன் கேட்டேன்.

"என்னைப் பங்களூருக்கு மாற்றியிருக்கிருர்கள். அங்கே கோர்ட்டில் நீதிபதியாக இருந்தவர் திடீரென்று இறந்துவிட்டார். நான் நாளை இரவே கட்டாயம் புறப்பட்டுப் போயாக வேண்டும். மூன்று மாதங்கள் கழித்துத்தான் லீவு எடுத்துக் கொள்ள முடியும். உடனே வந்து......"

"முடியாது! முடியாது! நீங்கள் போகக் கூடாது. இல்லாவிட்டால் என்னையும் அழைத்துக் கொண்டு போங்கள்" என்று கூறினேன்.

"அவர் சொல்வதை முதலில் கேட்டுக் கொள்ளேன், இந்து!" என்று அதட்டினார் ராஜாராம்.

"இந்து! என் மனம் உனக்குத் தெரியாதா? இன்னும் மூன்றே மாதங்கள் பொறுத்துக்கொள். உன்னைப்போல் நானும்தானே பல்லைக் கடித்துக் கொண்டிருப்பேன்? நாளை இரவு கட்டாயம் போயே ஆகவேண்டும். உத்தரவு மிகக் கண்டிப்பாய் வந்திருக்கிறது. அதற்குள் உன்னைப் பார்த்துவிட வேண்டுமென்றுதான் நான் துடித்தேன். உன்னை உடனே அழைத்துப் போவதும் சாத்தியமில்லை. என்னதான் இருந்தாலும் உன்னை நான் அழைத்துக் கொண்டு போவது முறையில்லை. மூன்று மாதத்தில் லீவு எடுத்துக் கொண்டு வந்து உன்னை மணந்துகொள்கிறேன். அதன் பிறகு ஒரு நாள் கூட உன்னைத் தனியாக விடப் போவதில்லை. அதற்குள் எனக்கும் எங்கே இருக்க வேண்டுமென்று நிச்சயமாகத் தெரிந்து விடும். அதுவரை பொறுத்துக் கொண்டிரு, அம்மா!" என்றார் ரங்கதுரை.

என்னால் கண்ணீரை அடக்க முடியவில்லை. உடம்பெல்லாம் நடுங்கிற்று.

ரங்கதுரை ராஜாராமைப் பார்த்து, "இந்துவை நீங்கள் குங்குமத்துறைக்கு அழைத்துக் கொண்டு போங்கள். அங்கே நம் வீட்டைத் திரும்ப வாங்குவதற்கு ஏற்பாடு செய்யுங்கள். இந்துவுக்கு அந்தச் சூழ்நிலை மன அமைதியை அளிக்கும். நான் லீவு கிடைத்த உடனே வந்துவிடுகிறேன். அங்கேயே கல்யாணத்தையும் வைத்துக்கொள்ளலாம். எங்கள் விவாகம் குங்குமத் துறையில் இந்துவின் அருமை அன்னையும், அவளை வளர்த்த அன்புத் தந்தையும் இருந்த வீட்டில்தான் நடைபெறவேண்டும். இதற்கெல்லாம் எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரம் ஏற்பாடு செய்து விடுங்கள்" என்று கூறினார்.

அதைக் கேட்டதும் எனக்கும் கொஞ்சம் மனத் தென்பு உண்டாயிற்று. குங்குமத் துறை வீட்டில் இருக்கலாம் என்ற எண்ணமே சற்று மகிழ்ச்சியை உண்டாக்கியது.

"அப்படியே ஏற்பாடுகள் செய்து விடுகிறேன். இந்துவை அழைத்துக் கொண்டு கவுண்டர், அவர் மனைவி எல்லோரும் நாளை இரவே குங்குமத் துறைக்குப் புறப்படட்டும். நான் இரண்டு நாள் கழித்துப் போகிறேன். எனக்கு இங்கே கொஞ்சம் காரியம் இருக்கிறது" என்றார் ராஜாராம்.

"அதெல்லாம் முடியாது! குங்குமத் துறையில் போய் எங்கே இறங்குவது? நீங்கள் வந்தால்தான் எல்லாம் சரியாக நடக்கும்" என்றேன்.

"இல்லை, இந்து! இன்றிரவே ஜமீன் மானேஜருக்குத் தந்தி அடித்துவிடுகிறேன். கதிர்வேல் பெயரைச் சொன்னால் உடனே அவர் அதற்கு ஏற்பாடு செய்வார். நீ போய் நேரே அவர் அமர்த்தியிருக்கும் வீட்டில் இறங்கலாம்" என்றார் ராஜாராம்.

எனக்கும் சென்னையை விட்டுப் போனால் போதுமென்று தோன்றியது. மறுபடியும் ஈசுவரமூர்த்தி வந்து தொலைத்தால் என்ன செய்வது? ரங்கதுரையும் இங்கு இல்லாதிருக்கும்போது, நானும் போய் விடுவதுதான் சரி. ஒரு நாள்கூடத் தாமதிக்கக் கூடாது என்று எண்ணினேன். உடனே தந்தி கொடுக்கும்படி ராஜாராமிடம் சொன்னேன். ராஜாராம் வெளியே சென்றார்.

அவர் போன பிறகு மறுபடியும் ரங்கதுரை என் கைகளைத் தம் கையில் எடுத்துக் கொண்டார். "இந்து! என் மீது உனக்குக் கோபமா?" என்று கனிந்த குரலில் கேட்டார்.

"கோபமில்லை. ஆனால் இதெல்லாம் நிஜமாகவே நடக்கக் கூடியதுதானா? ஏதோ ஒரு சக்தி நம்மை மறுபடியும் பிரித்து விடச் சூழ்ச்சி செய்து கொண்டே இருப்பது போல எனக்குத் தோன்றுகிறதே!"

"இன்னும் நீ என் மீது சந்தேகப்படுகிறாயா? என் அன்பு பரிசுத்தமானது என்பதை நீ உணரவில்லையா, இந்து?" என்று கேட்டார் அவர்.

"உங்கள் மீது எனக்குச் சிறிதும் சந்தேகமில்லை. என்னுடைய அதிர்ஷ்டத்தின் மீதுதான் சந்தேகம். நான் துன்பத்துக்காகவே பிறந்தவள். எனக்கு எவ்வாறு இந்த இன்பம் கிடைக்க முடியும்? என் மீது அன்பு வைத்தவர்கள் எல்லோருக்கும் நான் துன்பத்தைத்தான் அளித்து வந்திருக்கிறேன். நான் சென்ற இடமெல்லாம் ஏமாற்றமே என்னைத் தொடர்ந்து

வந்திருக்கிறது. சினிமாவில் சேர்ந்த பிறகும் பணக் கஷ்டம் இல்லாமல் வாழ்ந்தேனே தவிர ஒரு நாளேனும் நிம்மதியாக இருந்திருக்கிறேனா? அதுவும் இல்லை. ஈசுவர மூர்த்தியின் நினைவே என்னைப் பைத்தியமாக அடித்து விடும் போல் இருக்கிறது."

"இந்து! இதையெல்லாம் எதற்காகச் சொல்லுகிறாய்? நீ இது வரை சொல்ல முடியாத துயரங்களையெல்லாம் அனுபவித்து விட்டாய். அதனாலேயே இனிமேல் உனக்கு ஒரு கஷ்டமும் வராது. இன்னும் உன்னை இறைவன் சோதிக்க மாட்டார். நானும் உன்னைக் கஷ்டப்பட விடமாட்டேன். உன்னை என்னிடமிருந்து பிரிக்க யாராலும் இனி முடியாது."


"நான் ஒன்று கேட்கலாமா?"

"என்ன வேண்டுமானாலும் தாராளமாய்க் கேள், இந்து!"

"உண்மையாகச் சொல்லுங்கள். என் நிஜத் தந்தை ஒரு கொள்ளைக்காரர் என்ற வதந்தி நிலவி வருகிறது. என்றால் அதை அப்படியே நம்ப முடியா விட்டாலும், அவர் உலகத்துக்கு ஒளிந்து வாழ்கிறாரென்பது தெரிகிறது. மேலும் என் மீது ஒரு பயங்கரமான பழி இருக்கிறது. நீங்களோ உயர்ந்த பதவியில் இருக்கிறீர்கள். இந்த அபவாதங்களால் உங்களுக்குக் கௌரவக் குறைவு ஏற்படும்........."

ரங்கதுரை என் வாயைப் பொத்தினார். "இந்து! இப்படிப் பேச உனக்கு எப்படி மனம் வருகிறது? உன்னால் எனக்கு ஒரு நாளும் கௌரவக் குறைவு ஏற்படாது. நீ என் உயிருக்குயிரானவள். இந்த விவகாரங்களுக்கும் நமது அன்புக்கும் சம்பந்தமே இல்லை. உன்னை விட்டுப் பிரிந்து சீமைக்குச் சென்றேன். அப்போதே மிகவும் மனம் நொந்திருக்கிறேன். வேலை ஏற்ற பிறகு 'நான் படித்தும், உத்தியோகம் பார்த்தும் பயன் என்ன? என் இதய தேவதைக்காக இவைகளைச் செய்யாவிட்டால் என்ன

ஹாஸ்யக் களஞ்சியம்



பிரயோசனம்?" என்று வருந்தி யிருக்கிறேன். இந்து! உனக்காக இந்தப் பதவி மட்டுமில்லை. இன்னும் அரச பதவி இருந்தால்கூட விட்டு விட்டு உன்னை மகிழ்விப்பதையே என் பாக்கியம் என்றுதான் நினைப்பேன்" என்றார் உறுதியான குரலில்.

உண்மையிலேயே அப்படிச் செய்ய வேண்டி உடனே நேரப் போகிறது என்று அப்போது அவரும் நினைக்கவில்லை. நானும் நினைக்கவில்லை. அவருடைய பேச்சில் கிறுகிறுத்துப்போய் உட்கார்ந்திருந்தேன்.

நானும் ரங்கதுரையும் மனம் விட்டுப் பேசிய பிறகு எனக்கும் எவ்வளவோ ஆறுதலாக இருந்தது. அவர் கூறியபடியே மறுநாள் குங்குமத் துறைக்கு நான் புறப்பட்டேன். அவர் என்னை ரயிலேற்றி விட்டுப் பிறகு தான் பங்களூர் சென்றார்.

ரயிலடியில் ஒரே உற்சாகமாகப் பேசிக் கொண்டிருந்தோம். எங்களை விடக் கவுண்டரும் அவருடைய மனைவியும் மிகவும் சந்தோஷப்பட்டுக் கொண்டிருந்தார்கள்.

வள்ளியிடம், "இந்து அக்காவுக்குக் கல்யாணம்" என்றாள் அவள் பாட்டி.

அவள் ரங்கதுரையைச் சுட்டிக் காட்டி "இவர்தான் மாப்பிள்ளையா?" என்று கேட்டாள். எல்லோரும் கொல்லென்று சிரித்தோம்.

ரங்கதுரை என்னிடம், "இந்து! எவ்வளவு சீக்கிரம் முடிந்தாலும் உடனே வந்து விடுகிறேன். ஜாக்கிரதையாக இரு" என்றார்.


கவுண்டர் உடனே, "ஆமாம்! நீங்கள் ரொம்ப சீக்கிரம் வந்து விடணும். இந்துவை இனிமேல் உங்களால்தான் பார்த்துக் கொள்ள முடியும். எங்களால் முடியாது, மாப்பிள்ளை!" என்றார். எனக்கு ஒரே வெட்கமாகப் போய் விட்டது.

"போங்கோ, தாத்தா!" என்றேன்.

"இனிமேல் எங்களை நீ போகத்தான் சொல்லுவே!" என்றார் கவுண்







டரின் பத்தினி. மறுபடியும் எல்லோரும் சிரித்தோம்.

வண்டி புறப்பட்டதும் ரங்கதுரை வண்டியை விட்டு இறங்கிக் கையை ஆட்டினார். ரயில் நகர்ந்தது. அவரும் கொஞ்சதூரம் நடந்து வந்தார். ரயில் வேகமாகப் போக ஆரம்பித்தது. ராஜாராம் அவருடைய கையைப் பிடித்து நிறுத்தியதைப் பார்த்தேன். அதன் பிறகு அவர்களுடைய உருவங்கள் தூர தூரப் போயின. எனக்கு அந்த ரயில் என்னையும் அவரையும் பிரிப்பதற்காகவே அவ்வளவு வேகமாக ஓடுவதாகத் தோன்றியது. தலையை ஆட்டி அந்த எண்ணத்தை உதறி விட்டு உற்சாகத்தை வரவழைத்துக் கொண்டேன்.

அவர் பேசியவைகளை யெல்லாம் திரும்பத் திரும்ப நினைத்துச் சுவைத்தேன். அவைகளை நினைத்தபோது இன்பத்தேன் நெஞ்சத்தில் ஊறுவது போலிருந்தது.

குங்குமத் துறையில் வேறு வீடு ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஜமீன் மானேஜர் ராஜாராமின் தந்தையைப் பார்த்து வீட்டுக்கு ஏற்பாடு செய்ததோடு, திருநந்திபுரம் ஸ்டேஷனுக்கு வில் வண்டியும் அனுப்பி யிருந்தார். வெகு நாட்களுக்குப் பிறகு குங்குமத் துறையில் வில் வண்டிப் பயணம் மிக ஆனந்தமாக இருந்தது.

நான்கு நாட்கள் ஒரே சந்தோஷமாகச் சென்றன. நான் பழைய இந்துமதியாகவே மாறிவிட்டேன். வள்ளியும் நானும் அருவித் தண்ணீர் அத்தனையும் வீணாகாமல் மூன்று வேளை ஸ்நானம் செய்தோம். நாங்கள் சென்றபோது கூட்டமில்லாத சமயம். ஜலம் கொஞ்சமாகத்தான் விழுந்து கொண்டிருந்தது. ஆனால் அதுதான் ரொம்ப சுகமாக இருந்தது. வள்ளிக்கு நான் விளையாடிய இடங்களை யெல்லாம் காட்டி மகிழ்ந்தேன்.

படப் பிடிப்புக்காகச் சென்றபோது இவ்வளவு சுதந்திரமாக என்னால் இருக்க முடிய வில்லை. மேலும் அப்போது சாரல் காலம். குங்குமத்துறையில் ஒரே கூட்டமாக இருக்கும் சமயம். ஆகவே நான் ரொம்ப ஜாக்கிரதையாக இருந்தேன். இந்தத் தடவை இஷ்டப்படி திரிய முடிந்தது.

நாங்கள் சென்ற நான்காவது நாள் ஸ்நானம் செய்து விட்டு நானும் வள்ளியும் வந்து கொண்டிருந்தோம். எனக்குக் குடியானத் தெருவைப் போய்ப் பார்க்க வேண்டுமென்று அடக்கமுடியாதஆசையாக இருந்தது.

உடனே அந்தப் பக்கமாக வந்தேன். என்னைக் கண்டதும் ஒரு குடியானவ ஸ்திரீ, "மந்திரமூர்த்தி ஐயா மக வந்திருக்கா!" என்று ஒரு சத்தம் போட்டாள். உடனே தெருவிலிருந்த அனைவரும் என்னைச் சூழ்ந்துகொண்டு விட்டார்கள். எல்லோரும் "குளந்தே! சுகமாக இருக்கிறியாம்மா? எங்கே இருந்தே இத்தனை நாளும்?" என்று மிகப் பரிவோடு விசாரித்தார்கள்.

"கண்ணாலம் ஆயிடுத்தா உனக்கு?" என்று கேட்டாள் பொன்னி.

வள்ளி உடனே, "இந்து அக்காவுக்குக் கண்ணாலம் சீக்கிரம் ஆகப் போகிறது. அதற்குத்தான் இங்கே வந்திருக்கா!" என்றாள்.

"பணக்கார மாப்பிள்ளையா, அம்மா? சொத்து இருக்கா?" என்று கேட்டாள் இன்னொருத்தி.

வள்ளி உடனே, "ரொம்பப் பணக்காரர். சீமைக்குப் போய்ட்டு வந்திருக்கார். ரொம்பப் படிச்சவர்" என்றாள். என்னைவிட அவளுக்கு உற்சாகம் அதிகமாக இருந்தது.

ஒரே ஆரவாரமாகப் போய் விட்டது. குழந்தைகளும் பெரியவர்களுமாக ஒரே சத்தம் போட்டார்கள். பண்ணையாட்கள் எல்லாம் வேலை செய்ய வயலுக்குப் போயிருந்தபடியால் அவர்களைக் காண வில்லை. நான் ஒவ்வொருவராக நிதானமாக விசாரித்து விட்டு உற்சாகம் நிரம்பிய மனத்துடன் வீட்டுக்குப் போனேன்.

வீட்டைப் பார்த்ததுமே எனக்கு ஏதோ கொஞ்சம் கலவரமாகப் போய் விட்டது. வாசலில் ஒரு போலீஸ் வான் நின்றது. இரண்டு போலீஸ்காரர்கள் படியில் நின்று கொண்டிருந்தார்கள். நான் விரைந்து உள்ளே சென்றேன். நடுக் கூடத்தில் ஒரு இன்ஸ்பெக்டர் கவுண்டரிடம் ஏதோ கேட்டுக் கொண்டிருந்தார். கவுண்டர் என்னைக் கண்டதும், "அம்மா, இந்து! இவர்கள் ஏதோ பயங்கரமான செய்தி சொல்லுகிறார்களே, நான் என்ன செய்வேன்?" என்று அலறினார். எனக்குத் தலை சுற்றியது. (தொடரும்)


இந்த
அடையாளத்தைக்
கவனியுங்கள்



அதில் மூவகை செயல்!
உங்கள் பற்களை அதிக பத்திரமாகப் பாதுகாக்கிறது!
உங்கள் பற்களில் தொந்தரவு இல்லாமல் பாதுகாத்துக் கொள்ள; உண்மையில் நல்ல பிரஷ் உபயோகியுங்கள் - கால்கேட் சாஸ்திரீயமாக அமைக்கப்பெற்ற நைலான் பல் பிரஷ்! அது உங்கள் பற்களை ஏன் அதிக பத்திரமாகப் பாதுகாக்கிறதென்றால்—
• அது மூவகைச் செயலுடையது - இடுக்குகளில் நுழைகிறது. பல்லின் உட்புறமும் வெளிப்புறமும் நன்கு துலக்குகிறது. ஈறுகளைப் பக்குவமாக உறுதிப்படுத்துகிறது
• அது மூடப்பட்டுள்ளது - சுகாதார முறையில் பிளாஸ்டிக் குழாயில்
• அது சாஸ்திரீயமான உருப்பெற்றது - மேலும் கீழுமுள்ள பின்பற்களை சுலப முறையில் அதிக சுத்தமாக்குமாறு
• அது மிருதுவாகத் துலக்குகிறது - சன்னமான வெண்பகுதியைப் பாதிக்காது
COLGATE
கால்கேட்
டூத்பிரஷ் டீலக்ஸ்
ஆண்களுக்கு
பெண்களுக்கு
குழந்தைகளுக்கு
ஹார்ட், மீடியம், ஸாப்ட்
சுகாதார பிளாஸ்டிக் குழாயில்



இரவில் சப்தம்
அங்கே என்ன விசித்திரமான சத்தம் — வீட்டிற்குள்ளே வருவது யார் . . .
சரிதான் - ஜன்னல் கதவு சரியாக சாத்தப்படவில்லை. "எவரெடி" டார்ச்லைட்டின் உதவியால் இருட்டு பயம் நீங்கப்பட்டது. உங்களுக்கு வேண்டியபோதெல்லாம் வெளிச்சம் அளிப்பதற்காக நீங்கள் எப்போதும் "எவரெடி" பாட்டரிகள் பொருத்தப்பட்ட ஓர் "எவரெடி" டார்ச்லைட்டை வைத்திருங்கள்.
பயப்படாதீர்கள் அம்மா! கவலைப்பட ஒன்றுமில்லை. அதை நம் உங்களுடைய "எவரெடி" டார்ச்லைட்டின் வெளிச்சத்தில் பார்த்துக் கொள்ளுங்கள்.
NCC 309 A
EVEREADY
TRADE-MARK
"எவரெடி"
டார்ச்லைட்டுகள் & பாட்டரிகள்
நேஷனல் கார்பன் தயாரிப்புகள்.
EVEREADY

சுயம்வர சுந்தரி



கு. பஞ்சாபகேசன்

காலை பதினொரு மணி இருபத்து நான்கு நிமிஷங்களுக்குப் பிறகு பெரம்பூர் ரயில் நிலையத்துக்கு வருகிறது அந்த 'லோக்கல்' வண்டி. திருவள்ளூரிலிருந்து வரும் 'லோக்கல்' வண்டிதான்; ஆனால் மற்ற லோக்கல் வண்டிகளைப் போல இல்லை இந்த வண்டி. இந்த வண்டிக்கென்று பிரத்தியேகமான ஒரு மவுசு இருந்தது; பெயரும் இருந்தது.

'சோற்று வண்டி' என்று பெயர் அதற்கு. இன்னும் சற்று விளக்குவதானால் இந்த வண்டி ஸ்டேஷனுக்கு வருவதற்கு ஐந்து நிமிஷங்களுக்கு முன்பு, வியர்க்க விறு விறுக்க மாதவரம் ஹைரோடில் பெரம்பூர் ஸ்டேஷனை நோக்கித் தலையில் 'டிபன் காரியர்' மயமாக இருக்கும் கூடையுடன் ஓடி வரும் ஸ்திரீ, எதிரே வருவோரை, "என்ன ஐயா, சோத்து வண்டி போயிட்டுதா?" என்று பரக்கப் பரக்கக் கேட்பாள். அந்தச் 'சோத்து வண்டி' போகாவிட்டால் அவள் விடும் பெருமூச்சுக்களில் உயிர் இருக்கும்; போய் விட்டிருந்தாலோ, "இது மாதிரி காலுவாட்டி நடந்திச்சன்னு, என் வயித்துச் சோத்துப் பாட்டுக்குச் சீட்டு சீக்கிரம் கிழிஞ்சாச்சு" என்று அங்கலாய்ப்பாள்.

அன்று அந்த லோக்கல் வண்டி ஐந்து நிமிஷம் தாமதமாக வந்தது. சுந்தரிக்காகவே அது ஐந்து நிமிஷம் தாமதமாய் வந்தது போலிருக்கிறது.

சுந்தரி ஓடோடியும் வந்தான் பிளாட்பாரத்துக்கு. அவன் பிளாட்பாரத்தில் வந்து நின்ற சமயமும் வண்டி நுழைந்த சமயமும் ஒன்றாயிருந்தது. ஒரு நிமிஷம் தன் கையிலிருந்த பையைச் சரி பார்த்துக் கொண்டான் சுந்தரி. அது ஒரு வர்ண நூலினால் பூவேலை செய்த 'பளிச்' சென்ற வெள்ளைப் பை; அதற்குள் பளீர் என்ற ஒளிவிட்ட பித்தளை டிபன் காரியர்; புத்தம் புதிசு; நன்றாகத் தேய்க்கப்பட்டிருந்தது. டிபன் காரியரின் மத்தியில் செருகி வைக்கப்பட்டிருந்தது பசுமையான வாழை இலைச் சுருள்.

அவன் சுந்தரிதான். உருவ அழகில் பெயர்ப் பொருத்தம் வெகு திவ்யமாகப் பொருந்தியிருந்தது. நன்றாய்த் தோய்த்து 'இஸ்திரி' போட்டது மாதிரி மடித்து வைத்து எடுத்து உடுத்திக் கொண்டிருந்த வாயில் புடவை; புடவையின் வண்ணத்திலேயே 'சோலி'. அகன்று பரந்திருந்த மாநிறமான முகத்தில் மோகனமாய் விழித்த இரு விழிகள்; பரந்த நெற்றியில் நடு நாயகமாயிருந்த சிவப்புக் குங்குமப் பொட்டின் லக்ஷணம். 'சுந்தரிக்கு எங்கேயிருந்து இத்தனை பதவிசு வந்தது!' என்று நினைக்கும்படியாய், தன்னுடைய நடையில் நாகரிகமும் ஒய்யாரமும் நடனமிட, ஒரு 'பெட்டியை' நோக்கிக் காலடி எடுத்து வைத்தான்.

பின்னால் குரல் கேட்டது, "சுந்தரீ!" என்று. திரும்பினான்.

"என்னவாம்?" — சுந்தரி கொஞ்சம் அசுவாரசியமாகவே கேட்டான்.

"என்ன பிள்ளே, இப்படிச் சலிச்சுக்கறே? ஒரு கை கொடுப்பியா?" என்றாள் அங்கம்மாள்.

"அதெல்லாம் தெரியாது, அங்கம்மா!" என்று சொல்லி விட்டுப் பெட்டிக்குள் ஏறப் போனான் சுந்தரி.

"ஏ, சுந்தரி! உன்னைத்தானே? நேத்து வரையும் நீயும் எங்களைப் போலத்தான் இருந்தே, பிள்ளே. இன்னிக்குப் பூபோட்ட பையிலே சோறு கொண்டுவிட்டு புருசன் கிட்டே போற ஜோரே ஒரு பக்கத்திலே வைச்சிடு, ஆமாம்" என்று அந்த ஒரு சில விநாடிகளில் சரமாரியாகப் பேசிக் கொண்டு போனாள் அங்கம்மாள்.

சுந்தரிக்குத் தர்ம சங்கடமாகப் போய் விட்டது. என்ன சொன்னாலும் இவள் கேட்க மாட்டாள் என்பதை நன்றாகப் புரிந்து கொண்டாள் சுந்தரி. சோற்று மூட்டைக்கு ஒரு கை கொடுத்து வண்டிக்குள் வைக்கா விட்டால், சென்டிரல் ஸ்டேஷன் போகிற வரைக்கும் அங்கம்மாள் தன்னைத் துளைத்து விடுவாள் என்பதும் சுந்தரிக்குத் தெரியும். ஒரு கை கொடுப்பதைத் தவிர வேறு வழியில்லை என்று முடிவு செய்து, ஒரு வகையாக அங்கம்மாளின் சோற்றுக் கூடையை ரயில் வண்டியில் ஏற்றி வைக்கும் பணியில் பங்கெடுத்துக் கொண்டாள்.

வண்டி புறப்பட்டது.

"என்ன பிள்ளே, சுந்தரி! சந்தோசம் தறி கெட்டுப் போகுது! உன் மயக்கு விழியிலே அந்தப் பிள்ளை மயங்கிட்டானென்னு நினைக்கிறியா? அது அசட்டுப் பிள்ளை. என்னவோ, உனக்கு வாய்ச்ச அதிர்ஷ்டம்! குருடனைப் போய் ராச பார்வை பார்க்கச் சொன்னாங்களாம், ஆனா, என்ன அதிசயம்? அந்தக் குருடனும் ராச பார்வை பார்த்து விட்டானாம்! உன் விஷயம் இப்படித்தான் இருக்குது, சுந்தரி! சரி, சரி! உனக்குக் கோவம் பொத்துக் கிட்டு வருகுது! நமக்கென்னாத்துக்கு வம்பு?" என்று வம்பை விலைக்கு வாங்கிப் பேசிவிட்டு, அங்கம்மாள் உரத்த குரலில், "ஏ வள்ளி, ராக்காயி, முனியம்மா! 'சோறுங்கன்னாம்' சரியா இருக்கான்னு 'செக்' பண்ணிக்கிடுங்க. இன்னிக் கென்னவோ மவராசன் வேகமாகப் போறான். போற போக்கைப் பார்த்தா 'பேஸின் பிரிச்சிலே' கூடச் சிமிட்டு நேரம் நிக்கமாட்டான்னு தோணுது. உம்...உம்...சீக்கிரம்!" என்று துரிதப்படுத்திக் கொண்டிருந்தாள்.

வண்டி வேகமாய்த்தான் போய்க் கொண்டிருந்தது. ரெயிலில் நாலு பேர் எதிரில் அங்கம்மாள் அப்படிக் கேலியாகச் சொல்லி விட்டது சுந்தரிக்கு என்னவோ மாதிரி போய் விட்டது.

அவனை—அவள் 'அத்தான்' என்று இப்போது அன்புடன் அழைக்கும் தனராஜை-, கல்யாணம் செய்து கொள்ளுகிறவரை அவனுக்குத் தன் சோற்றுக் கூடையில் சாப்பாடு கொண்டு போய்க் கொடுத்து வந்தாள். இப்போது அவன் சாப்பிடுவதே அவள் சாப்பாடுதானே? தன் கணவனுக்காகத் தனியாய்ச் சாப்பாடு எடுத்துக் கொண்டு போகக் கடமைப் பட்டவளில்லையா? ரயில் வண்டியைப் போலவே அவள் மனமும் ஓடியது. ஆனால் பின்னோக்கி ஓடியது.

* * *

பெரம்பூரில் லட்சுமியம்மன் கோயிலுக்கு எதிரில் ஒருநாள் நின்று கொண்டிருந்தாள் சுந்தரி. கந்தலான புடவையில் ஆயிரம் இடத்தில் தையல் போட்டுக் கொண்டு கட்டிக் கொண்டிருந்தாள். ஆனாலும் ஆடை அவளுடைய மனத்தைப் போல மிகவும் சுத்தமாக இருந்தது. அழகென்றால் சுந்தரியின் அழகைத்தான் சொல்ல முடியும். வாட்ட சாட்டமான மேனி; மாநிறத்தை விடவும் ஒரு மாற்றுக் கூட்டிச் சொல்லக் கூடிய சிவப்பு நிறம்.

சுந்தரி நல்ல பரம்பரையில் பிறந்தவள்தான். ஆனால் இடைக்காலத்தில் நொடித்துப் போய்விட்டது அவளுடைய குடும்பம். அவள் குடும்பக் கஷ்டங்களுக்கு இலக்காகி, இப்போது தானும் வறுமையில் மிகவும் சிரமப்பட்டுக் கொண்டிருந்தாள். நல்ல சாப்பாடு சாப்பிட்டுப் பல நாட்கள் ஆனாலும், நல்ல திடகாத்திரமான குடும்ப பரம்பரையில் வந்ததால் சுந்தரியும் அழகு மங்கையாகத் திகழ்ந்ததில் அதிசயமில்லை.

லட்சுமியம்மன் கோயிலுக்கு எதிரில் சுந்தரி நின்றுகொண்டு அம்பிகையைத் தரிசித்துக் கொண்டிருந்த அந்தச் சமயம் மணி பதினொன்று இருக்கும்.


வீதியிலிருந்து பார்த்தால் கோயிலின் கர்ப்பக் கிருகம் நன்றாகத் தெரியும். அப்போது கர்ப்பக் கிருகத்தை இரும்புக் கம்பிக் கதவால் சாத்தி விட்டார்களாதலால், சுந்தரி வீதியின் நட்ட நடுவில் நின்று கொண்டுதான் அம்பிகையைத் தரிசிக்க முடிந்தது. "அம்மா, லட்சுமி அம்மா! என் குறை தீர வழி செய்யக் கூடாதா, தாயே! உனக்கு என்னாலானவரை விசேஷ அபிஷேகங்கள் ஆற்றுகிறேன்!" என்று வேண்டி விட்டுத் திரும்பினாள்...

'டங்' என்ற சத்தம்!

திடுக்கிட்டுத் திரும்பினாள் சுந்தரி.

இரண்டு டிபன் காரியர்கள் இடீர் இடீர் என்று கீழே தரையில் விழுந்தன; இன்னும் நாலைந்து டிபன் காரியர்கள் இருந்த பெரிய கூடை வீதியின் நட்ட நடுவில் விழுந்தது; இலைச் சுருள்கள், இலையுதிர் காலத்து இலைகளைப் போல் வீதியின் நாலாபுறத்திலும் 'பொல பொல' வென்று உதிர்ந்து ஓடின.

தான் என்ன செய்து விட்டோம் என்பதை உணரச் சுந்தரிக்கு இரு கணங்கள் பிடித்தன. மெய் மறந்த பரவசத்தில் அம்பிகையை வேண்டிவிட்டுச் சுந்தரி திடுமென்று





'அனஸின்'

நான்கு மருந்துகள் அடங்கியுள்ளது.

'அனஸின்' விஞ்ஞான முறைப்படி சேர்க்கப்பட்ட நான்கு மருந்துகளின் கலப்பாகும். அவை நரம்புகளின் முக்கிய சேர்க்கை பாகங்களில் கூட்டாக வேலை செய்து விரைவில் வலி, தலைவலி, ஜலதோஷம், ஜுரம், பல்வலி, மற்றும் தசை நார்களில் நோவு இவற்றை நீக்கும். அனஸினில் அடங்கிய சில நான்கு மருந்துகள் —

1. கொயினு: ஜுரத்தடுப்பு குணமும், பலவிருத்தி செய்வதற்கும் பிரசித்தி பெற்றது. ஜுரத்தை குறைப்பதில் மிகத் துரிதமானது.
2. காப்பீன்: பலஹீனத்திற்கும், மனச்சோர்வுக்கும் மிதமான தூண்டுகோல் மருந்தாக விதிக்கப்பட்டிருக்கிறது.
3. பினஸிடின்: ஜுரத்தடுப்பு, வலி நிவாரணத் தன்மைகளுக்கு பெயர் பெற்றது.
4. ஆஸிடில் ஸலிஸிலிக் ஆஸிட்: தலைவலி அது போன்ற எல்லா வலிகளையும் போக்குவதற்கு மிகவும் உபயோகமுள்ளது.

அனஸினிலுள்ள இந்த நான்கு மருந்துகளும் ஒரு டாக்டரின் குறிப்புக்கு ஒப்பாகும். 'அனஸின்' இருதயத்திற்கு தீங்கு விளைவிப்பதோ அல்லது வயிற்றுக்கு கோளாறு உண்டாக்குவதோ கிடையாது. வலி, தலைவலி, ஜலதோஷம், ஜுரம், பல்வலி மற்றும் தசைகளில் வலி முதலியவற்றிலிருந்து விரைவிலும், பத்திரமாகவும், நிச்சயமாகவும் நிவாரணம் பெறஎப்பொழுதும் அனஸினையே கேட்டு வாங்குங்கள்.



லக்ஷக்கணக்கான மக்களுக்கு நிவாரணம் அளிக்கின்றது.

A. 43

திரும்பிய போது, பெரம்பூர் ஸ்டேஷனில் 'சோற்று வண்டியைப்' பிடிப்பதற்காகக் கன வேகத்தில் வந்து கொண்டிருந்த அந்த ஸ்திரீயின் மேல் மோதியிருக்கிறான். அதன் விளைவுதான் தொடர்ந்ததெல்லாம்.

"கண் மண் தெரிஞ்சதும் இருக்கா? சோத்து வண்டியைப் பிடிக்காட்டி என் சோத்து வாயிலே இன்னிக்கு மண்ணு தான். லட்சுமியம்மா அளவறிஞ்சு படி யளந்து வெச்சிருக்காளே. நீ ஏன் என் வயத்திலே மண்ணை அடிக்க வர்றே?" என்று தன் ஆத்திரத்தைக்கொட்டியவாறே அங்கம்மாள்—ஆமாம், அவள் அங்கம்மாள் தான்!—இலைகளைப் பொறுக்கிக் கூடைக் குள் அவசரம் அவசரமாகத் திணிக்க முனைந்தாள். நல்ல வேளை! விழுந்த டிபன் காரியர்களில் எதுவும் கழன்று போய், வீதி யெல்லாம் சோற்றுக் கடலாகி விடவில்லை!

சுந்தரியும் அங்கம்மாளுடைய பணியில் உதவி செய்தான்.

"தெரியாமற் செய்து விட்டேன், ஆச்சி. மன்னிச்சுக்க......" என்று தயக்கத்துடன் சொன்னான் சுந்தரி.

"என்ன மன்னிச்சுக்க? இனிமே மாதவ ரம் ஏரோட்டு பூராவும் 'யேராப்ளேன்' மாருதிப் பறக்கணும். சோத்து வண்டியைப் பிடிக்கணும். இந்தச் சோத்துக் கூடை தூக்கித் தூக்கித் தள்ளாமை வந்திருச்சு. எப்படித் தூக்கிக்கிட்டு ஓடுறது?" என்றாள் அங்கம்மாள்.

"ஏன், நான் டேசன் வரைக்கும் தூக்கி யாறேன்" என்று சொல்லிவிட்டு அங்கம் மாளின் பதிலுக்குக் காத்திராமல் கூடை யைத் தூக்கிக் கொண்டு ஓட்டமும் நடையு மாக நடக்க ஆரம்பித்தான் சுந்தரி.

ஐந்து நிமிஷத்தில் பெரம்பூர் ஸ்டேஷனை அடைந்து விட்டான் சுந்தரி; பிறகுதான் அங்கம்மாள் வந்தாள்.

"நீ நல்ல பிள்ளை, சுந்தரி...சாயங்காலம் நான் உன் வீட்டுக்கு வர்றேன். உனக்கு எதுனாச்சியும் பிழைப்புத் தேடிக்கிட்டே வர்றேன்" என்றாள் அங்கம்மாள். சுந்தரி யின் மனம் மலர்ச்சி பெற்றது.

அம்பிகை லட்சுமியம்மா சுந்தரியின் வாழ்க்கையில் அன்று ஒரு புதிய ஏட்டைத் திறந்து வைத்தாள். அங்கம்மாள் தனக் கென்று நியமித்துக் கொண்ட வீடுகளில், ஓர் ஐந்தாறு வீட்டுச் 'சோறுகளை'ச் சுந்தரிக்கு விட்டுக் கொடுத்தாள். சென் டிரல் ஸ்டேஷன் 'யார்டு'களிலும் ஆபீஸ் களிலும் வேலை செய்து வந்த சிப்பந்தி களில் சிலர் பெரம்பூரில் வாசம் செய்து வந்தார்கள்; அவர்களுக்கு மத்தியானச் சாப்பாட்டை எடுத்துக் கொண்டு போகும் பொறுப்பை ஏற்றான் சுந்தரி.



தமிழ் நாட்டில் நாடகக் கலை வேகமாக வளர்ந்து வருகிறது. புதுப்புது நாடகங்களை அரங்கேற்றி வருகிறார்கள். செப்டம்பர் 10-ந் தேதி சென்னை மியூஸியம் தியேட்ட ரில் "தங்கப் பதுமை" என்ற நாடகம் நடந்தது. இந்த நாடகத்தை எழுதிய நார நர் சீனிவாசராவ் இதில் முக்கிய பாத்திர மாகத் தோன்றிப் பிரமாதமாக நடித்தார். நாடகத்துக்குக் கல்வி மந்திரி கனம் சுப்பிர மணியம் தலைமை வகித்துச் சிறப்பித்தார். 'தங்கப் பதுமை' நாடகத்தின் இரண்டுகாட் சிகளை மேலே உள்ள படத்தில் காணலாம்.

அவன் யாருக்காகச் சாப்பாடு எடுத்துக் கொண்டு போனானோ, அவர்களில் தன ராஜும் ஒருவன். அதிர்ஷ்டம் கூரையைப் பிய்த்துக் கொண்டு கொட்டும் என்று சொல்வார்கள். தனராஜைச் சந்திப்பதற் காகவே அம்பிகை லட்சுமியம்மா அவ னைத் தன் எதிரே வீதியிலே நிறுத்தியது போலிருந்தது சுந்தரிக்கு.

தனராஜ் சுந்தரிக்கு 'அத்தான்' ஆனது எப்படி? சமீபத்தில் நடந்த அந்த அனுப வங்கள் சுந்தரியின் நினைப்புக்கு வந்த போது, அவனுடைய மனந்தான் எப்படிப் பட்ட இன்ப அரங்கமாக மலர்ந்தது!

* * *

தனராஜ் ஸென்டிரல் ஸ்டேஷன் 'யார்'டில் ஒரு 'பிட்டராக' வேலை பார்த்து வந்தான். ரெயில்வே உத்தியோகம் என்றால் அதன் நிரந்தரத் தன்மைக்குக் கேட்க வேண்டுமா? அதிலும் தனராஜ் இளைஞன்;

கட்டு மாறாத உடலுறுதி யுள்ளவன்; தன்னுடைய செலவுகளில் பிடிப்பான பொறுப்புள்ளவன்; அடக்கமான சுபாவம் உள்ளவன்; அழகன். அவனுக்கும் பெண்ணைக் கொடுப்பதற்கு 'நீ முந்தி, நான் முந்தி' என்று போட்டி போட்டுக் கொண்டு எல்லாரும் முன் வந்ததில் ஆச்சரியமில்லை. ஆனாலும் அவன் சுந்தரியைத் தேர்ந்தெடுத்தபோது, அது எல்லாருக்கும் ஆச்சரியமாகவே இருந்தது; அதிலும் அங்கம்மாளுக்கு அது பரம ஆச்சரியமாக இருந்தது.

பிரதம 'யார்'டின் முன் வாசலில் தன் சோற்றுக் கூடையை வைத்துக் கொண்டு காத்திருப்பாள் சுந்தரி. சாப்பாட்டுச் சங்கு ஊதியதும் அவரவர்கள் வந்து தங்கள் டிபன் காரியர்களை எடுத்துக் கொண்டு போவார்கள். தனராஜும் வருவான்.

சுந்தரியைப் பார்த்த முதல் நாளே தனராஜ் அவளிடம் தன் மனத்தைப் பறிகொடுத்து விட்டான். 'எப்படியாவது தன் ஏழ்மை கௌரவமான ரீதியில் தீர்ந்தால் போதும்' என்று எண்ணி வந்த சுந்தரிக்குத் தனராஜின் மன நிலையை ஆரம்பத்தில் அவ்வளவு சுலபமாய்ப் புரிந்து கொள்வதற்கு முடியவில்லை.

ஒருநாள் சுந்தரி பதினொரு மணி இருபத்தி நான்கு நிமிஷ சோற்று வண்டியைத் தவற விட்டுவிட்டு, அடுத்த வண்டிக்காகக் காத்திருந்து வந்த போதுதான் நடந்தது அந்தச் சம்பவம்.

சங்கு ஊதி இருபத்து ஐந்து நிமிஷங்களுக்குப் பிறகு — அதாவது 'பசி பசி' என்று பறந்து, பசி முற்றிய பிறகு — சுந்தரி வந்தாள்.

வாடிக்கைக்காரர்கள் உறுமினார்கள்.

“காலையிலிருந்து நீ சோறு கொண்டுவர வேண்டாம்!”

“இன்னும் இரண்டு வண்டி தள்ளிக் கழிச்சு வா. சாப்பாடு சூடாயிருக்கும்!”

அவர்களுக்கு என்ன சமாதானம் சொல்லியும் சுந்தரியால் மாளவில்லை.

அப்போது அங்கே வந்தான் தனராஜ்.

மற்றவர்களைப் பார்த்து, “எதற்காக இப்படி உங்களைக் கஷ்டப்படுத்திக்கிட்டு, இன்னும் சாப்பிடாமல் நேரத்தை வீணாக்குறீங்க? இன்னிக்கு எங்க வீட்டில்தான் கொஞ்சம் நேரமாகி யிருக்கும்...” என்று சொல்லிச் சுந்தரியைப் பார்த்து மெதுவாகக் கண் அசைத்து விட்டு, “...என் அக்காளுக்கு நேற்றே உடம்பு சுகமில்லை. காலையிலே எழுந்திருக்கிறதுக்குக் கூட நேரம் பண்ணிச்சு. மெதுவாச் சமைச்சிருப்பாங்க. என்ன அம்மா சுந்தரி, எங்க

வீட்டிலேதானே நேரமாச்சு?" என்றான் தனராஜ்.

"ஆமாம்..." என்று தட்டுத் தடுமாறிச் சொன்னாள் சுந்தரி. அவன் சொன்ன பொய்யைத் தொடர்ந்து தானும் பொய் சொன்னது சுந்தரிக்குத் தெரியும். ஏனென்றால் தனராஜுக்குப் பெரம்பூரிலிருந்த ஒரு ஹோட்டலிலிருந்துதான் சாப்பாடு வந்து கொண்டிருந்தது!

அன்றிலிருந்து சுந்தரி தனராஜைப் பற்றிச் சிந்திக்க ஆரம்பித்தாள். அதற்கடுத்து நடந்த சில சம்பவங்களில் தனராஜ் அவளிடம் காட்டிய பரிவு அவள் இதயத்தைக் குளிர்விப்பதாக இருந்தது.

அன்றொரு நாள் தனராஜ் உடம்பு சுகமில்லாமல் தன் ஜாகையில் படுத்திருந்தான். வழக்கப்படி, அவன் சாப்பாட்டுக்காகக் குறிப்பிட்ட அந்த ஹோட்டலுக்கு டிபன் காரியரை எடுத்து வரப்போன சுந்தரியிடம் அங்கேயிருந்தவர்கள் அன்றைக்குத் தனராஜுக்கு உடம்பு சுகமில்லை என்றும் வீட்டிலேயே இருப்பதாகவும் சொன்னார்கள்.

என்னவோ தெரியவில்லை, சுந்தரிக்கு அன்று மனம் மிகவும் குழம்பியது. தனக்காக எத்தனை பரிவு காட்டினார் அவர்! எல்லோரும் கொடுப்பதைவிட இரண்டு நாள் முன்னதாகவே சம்பளம் கொடுத்து விடுவார்!...சாப்பாடு கொடுத்து விட்டுத் திரும்பி வந்து தனராஜின் ஜாகைக்குப் போவது என்று நிர்மாணித்தாள் சுந்தரி.

அன்று மாலை தனராஜின் ஜாகைக்குப் போனாள் சுந்தரி. அறையில், கட்டிலில் படுத்துக் கொண்டிருந்தான் தனராஜ். சுந்தரியைப் பார்த்ததும், "என்ன, சுந்தரி! ஓட்டல்லே சொல்லியிருந்தேனே. மறந்து போய்ச் சாப்பாடு கொடுத்திட்டாங்களா? பாவம், சுமந்துக்கிட்டுப் போனியா?" என்று கேட்டான் பரிவுடன்.

"இல்லைங்க. உங்களுக்கு உடம்பு சுகமில்லைன்னு சொன்னாங்க. பார்த்திட்டுப் போகலாம்னு..."

"அதெல்லாம் ஒண்ணுமில்லை, சுந்தரி. லேசா சலதோஷம். அவ்வளவு தான். ரெயில்வே டாக்டரு ஒரு வாரத்துக்கு லீவு கொடுத்திருக்காரு. பாவம், ஒரு வாரத்துக்கு என்னாலே ஒரு கஷ்டமும் உனக்கு இருக்காது..."

"என்னங்க, அப்படிச் சொல்றீங்க? உங்களாலே எனக்கு என்ன கஷ்டம்?"—மேற்கொண்டு என்ன சொல்வது என்று சுந்தரிக்குத் தெரியவில்லை.

"சுந்தரி! கொஞ்சம் சுடு தண்ணீர் ஓட்டலிலிருந்து கொண்டு வந்து தர்றியா?" என்று கேட்டான் தனராஜ்.

"ஓட்டல் என்னாத்துக்குங்க? நான் இதோ நிமிஷத்திலே வைச்சுத் தர்றேன்..." என்றாள் சுந்தரி.

அந்த இரண்டு மூன்று நாட்களும் தனராஜுக்கு ஆஸ்பத்திரியிலிருந்து மருந்து வாங்கிக் கொண்டு போய்க் கொடுத்து வந்தாள் சுந்தரி.

தனராஜ் ஒரு வாரத்துக்குப் பிறகு வேலைக்குப் போக ஆரம்பித்தான். ஓட்டலிலிருந்து அவனுக்குச் சாப்பாடு கொண்டு போகாமல், தன் வீட்டிலேயே பத்தியச் சமையல் செய்து அவனுக்குக் கொண்டு போய்க் கொடுத்தாள் சுந்தரி.

அப்படிக் கொண்டு போய்க் கொடுத்த ஒரு நாளில்தான் சுந்தரியின் தலைவிதியே நிர்ணயமாயிற்று. ஆனால் அது நல்ல கதியில் நிர்ணயமாகி விட்டது.

அவன் சோற்றுக் கூடைக்கு அருகிலேயே தன் டிபன் காரியரைப் பிரித்து வைத்துக் கொண்டு அன்று சாப்பிட்டான் தனராஜ். சுந்தரி வெட்கமும் பயமும் சூழ ஒதுங்கி நிற்க முனைந்தாள்.

"சுந்தரி! நான் ஒன்னு கேட்பேன். கோபப் படாமல் பதில் சொல்லணும்......" என்றான் தனராஜ்.

"என்னங்க?"

"கோபப் படாமல் பதில் சொல்லணும்."'

"இல்லேங்க..."

"நீ ஆக்கிக் கொண்டு வர்ற சாப்பாட்டை விட்டுப்புட்டு ஓட்டல் சாப்பாட்டுக்குத் திரும்ப எனக்கு இஷ்டமில்லே. அதனாலே........"

"அதனாலே நீங்க இதுக்காக ஒண்ணும் இந்தச் சாப்பாட்டுக்காகன்னு தனியாகப் பணம் கொடுக்க வேணாங்க" என்று கூறினாள் சுந்தரி.

"உன் சாப்பாட்டுக்குப் பணம் கொடுக்க எந்த லட்சாதிபதியாலும் முடியாது, சுந்தரி. அதுதான் எத்தினி ருசியா இருக்குது! ஆனா......ஆனா..."—தயங்கினான் தனராஜ்.

சுந்தரி அவன் முகத்தை நிமிர்ந்து பார்த்தாள். தான் நினைப்பதையே அவன் சொல்லிவிட மாட்டானா என்ற ஆவல் இருந்தது அவளுக்கு.

"நீ இப்படித் தினசரி எனக்குச் சாப்பாடு போட்டுக் கிட்டே இருக்க..."—முடிக்க முடியாமல் திணறினான் தனராஜ்; சுந்தரி நாணத்தினால் தன்னுடைய தலையைக் கவிழ்ந்து கொண்டாள்.

தொடர்ந்து அவர்களுடைய கலியாணம் முடிய வெகு நாட்களாகவில்லை. அடுத்த முகூர்த்தத்திலேயே திருமணம் நடந்தேறியது. இருவர் முகங்களிலும் மகிழ்ச்சி பூரணமாக ஒளி விட்டது.

திருமணத்துக்குப் பிறகு தன் அத்தானிடமிருந்து ஒரு வரம் பெற்றுக் கொண்டாள் சுந்தரி. அவனுக்கு அவள்தான் தினசரி சாப்பாடு கொண்டு போவாளாம்! நேர்த்தியான வெள்ளைப் பூப்பையில், தன் மலர்க் கரங்களால் அந்தக்கரண சுத்தியுடன் ஆக்கிப் படைத்த அமுதைத் தன் கணவனுக்குத் தினம்தினம் எடுத்துப் போவாளாம்!...



இந்தியத் தொழில் நிதிக் கார்ப்பரேஷனின் டைரக்டராகத் திரு எம். வி. முத்தையா தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். இவர் பாங்குகளின் பிரதிநிதியாக அங்கம் வகிப்பார்.


சென்ட்ரல் ஸ்டேஷன் வந்து விட்டது. சிந்தனையிலிருந்து விடுபட்டுச் சுந்தரி இறங்கத் தயாரானாள். அங்கம்மாளின் வழக்கமான அதிகாரக் குரல் கேட்டது. சோற்றுக் கூடையை அவள் தலையில் தூக்கி வைத்தாள் சுந்தரி.

"ஏ, பின்னே, சுந்தரி! ஒரு சங்கதி. கேட்டுவிட்டுப் போ. லட்சுமியம்மா தயவிலே நீ முழுகாமல் போனா, உன் புருசன் சோத்துக் கிராக்கியை வேறு யாருக்கும் கொடுக்கக் கூடாது! தெரிந்ததா?" என்றாள் அங்கம்மாள்.

அங்கம்மாள் என்ன சொல்கிறாள் என்று அவளுக்கு விளங்கவில்லை. சாப்பாடு சுமந்து செல்லும் கூலி தனக்குக் கிடைக்க வேண்டும் என்பதற்காகச் சொல்கிறாளா?

"உன் புருஷனுக்குச் சோறு கொண்டு கொடுக்கும் பொறுப்பு என்னைச் சேர்ந்தது. வேறு யாரையும் கூலிக்கு அமர்த்திக் கொண்டு கஷ்டப்படாதே. கூலி கொடுக்கும் அந்தப் பணத்தைக் கொண்டு குழந்தைக்குச் சொக்காய் தைத்துப் போடலாம் அல்லவா?" என்றாள்.

அங்கம்மாளின் விசித்திரப் போக்கை நினைத்துப் பார்த்துக் கொண்டே ஸ்டேஷன் முன் வாசலை நோக்கி நடந்தாள் சுந்தரி. அவளுக்கு முன்னேயே அங்கே வந்து புன்னகை பூத்த முகத்துடன் நின்று காத்துக் கொண்டிருந்தான் தனராஜ்.



FS. 463
நித்திய உபயோக
ஆடைகள்
அல்லது
ஆடம்பர
உடைகள
எதுவாயிருப்பினும்
டாடா 501 ஸ்பெஷல்
அவைகளை
சிறப்பாக
சலவை செய்கிறது
சுதேசிப் பொருள்களை
வாங்கி இந்தியத் தொழில்
களை ஆதரியுங்கள்.
501
SPECIAL SOAP
FOR DELICATE MATERIALS
TATA PRODUCT
டாடா ஆயில் மில்ஸ் கம்பெனி லிமிடெட்

2



மேலும் அண்ணல் காந்தி அவர்கள் எழுதிய 'ஆரோக்கிய சாதனம்' என்ற கட்டுரையில் க்ஷய ரோகத்தைப்பற்றிக் குறிப்பிட்டுள்ளார். அவர், "இருபத்திநான்கு மணி நேரம் திறந்த காற்றில் க்ஷயரோக வியாதிக்காரர் வசிப்பதுதான் கைகண்ட ஔஷதம்" என்று கூறியுள்ளார். இந்நாட்டு முறையான இயற்கை மருத்துவத்தைக் கிராமம் கிராமமாகவும் நகரங்கள் தோறும் பரப்புவதை விட்டு விட்டு, மேனாட்டு முறையைப் புகட்டி அது நம்நாட்டு சீதோஷ்ண நிலைக்கு ஒத்துக் கொள்ளாமல் மக்களை அவதிப்படுத்த வேண்டாம்.

மதுரை
20—9—55

ரா. சங்கரநாராயணன்

*

உபதேச மொழிகள்

சென்ற செப்டம்பர் மாதம் 11-ந் தேதி,-பாரதி, வினோபா தினத்தில்-'கல்கி' இதழில், "சாதி உணர்ச்சி ஒழிய வழி" என்ற கட்டுரையின் மூலம் ராஜாஜி, சாதி பேதத்தாலும் வகுப்பு வாதத்தினாலும் பிடிக்கப்பட்டிருக்கும் தமிழ் மக்களுக்கு நல்ல வழி காட்டியிருக்கிறார். நாம் நன்கு சிந்தித்து உணர வேண்டிய பல உயர்ந்த கருத்துக்கள் அதில் உள்ளன.

'கல்கி' வாசகர்களுக்குள் எந்த விதமான சாதித் துவேஷமும் இருக்காது என்று அவர் குறிப்பிட்டிருப்பது மிகவும் போற்றத் தக்கது.

"ஈர நெஞ்சு மக்களும் மர நெஞ்சு மாக்களுமே இரண்டு சாதிகள்; ஒரு சாதி வெறுப்பை வளர்த்தால் பல சாதி வெறுப்பு கட்டாயம் காடாக வளரும்", "**சாதிகள் ஒன்றுபடுவதற்கு உள்ளத் தூய்மையும் பேதமற்ற விவாகமுமே வழி**" என்று ராஜாஜி கூறியிருப்பது நூற்றுக்கு நூறு சரியான உபதேசமாகும். மிகச் சிக்கலும் சிரமமுமான சாதி வளர்ச்சி ஒழிப்பு விஷயத்தில் அவரை விட யாரே தமிழ் நாட்டுக்கு நல்ல வழிகாட்ட வல்லவராவார்! ஏறக்குறைய முப்பத்தியேழு ஆண்டுகளுக்கு மேலாக அவரை ஆழ்ந்து அறிந்த அனுபவத்தைக் கொண்டு சொல்லுகிறேன். துவேஷம் கண்ணை மறைக்கும். தமிழ் மக்கள் இத் தீமையிலிருந்து எவ்வளவுக் கெவ்வளவு சீக்கிரம் கண் திறந்து விடுபடுகிறார்களோ அவ்வளவுக் கவ்வளவு அவர்கள் சுகம் பெறுவார்கள். காந்திய வழியில் நம்பிக்கையுள்ள ஊழியர்கள் யாவருக்கும் இது விஷயத்தில் கடமையுண்டு.

18—9—55

ரெ. தே. பெ. சுப்ரமணியன்

சிவன் கீர்த்தனைகள்

இன்று தமிழ் இசை பாராட்டத்தக்க அளவுக்கு வளர்ந்திருக்கிறது என்றால் பெருமையில் பெரும் அளவு "கர்நாடகம்" - அவர்களுக்கே சேரும். "சங்கீத யோகம்" கட்டுரைத் தொடரில் அவர் தீர்க்க தரிசனத்துடன் வெளியிட்ட யோசனைகள் இன்று நடைமுறைக்கு வருவது பாராட்டுக்குரியது. இன்றைய சாகித்ய உலகில் முதலிடம் வகிக்கும் ஸ்ரீ சிவன் அவர்களின் தமிழ்ப் பாடல்களுக்கு ஆஸ்தான வித்வான் ஸ்ரீ செம்மங்குடி அவர்கள் ஸ்வரம் அமைத்துக் கொடுப்பது, தமிழ் இசை அபிமானிகளுக்கு மட்டுமேயன்றி அனைவருக்குமே ஒரு நல்விருந்து. ஸ்வாதித் திருநாள் கீர்த்தனைகளுக்கு ஒரு பிரபலம் ஏற்படுத்திய ஸ்ரீ செம்மங்குடியின் ஒத்துழைப்பு தமிழ் இசைக்குக் கிடைத்திருப்பது, தமிழ் இசையின் வளர்ச்சிக்கு ஒரு நல்ல சூசகம். பாடல்கள் தொடர்ந்து வெளி வருவதை ஆவலோடு எதிர்பார்த்திருக்கிறேன்.

குண்டக்கல்
18—9—55

ர. கிருஷ்ணன்

*

பி. ஸி. ஜி

இளம் குழந்தைகளுக்கு மிட்டாய்களைக் கொடுத்துக் கடலூரில் பி. ஸி. ஜி போடுவதாக அறிந்தேன். பெற்றோர்கள் அனுமதி கொடுக்காமலிருந்த போதிலும் குழந்தைகள் அழகிய மிட்டாய்களினால் கவரப்பட்டு ஊசி குத்திக் கொண்டு பிற்பாடு அவதிப்படுவார்கள் என்பதை மேலதிகாரிகள் உணர வில்லை போலும்; இதன் கொடுமையைத் தங்கள் தங்கள் குழந்தைகளுக்குக் குத்தப்பட்டால் தான் தெரிந்து கொள்வார்கள். இதன் கொடுமையை ஏன் இளம் குழந்தைகளிடம் காட்ட வேண்டும்! வறுமையால் வாடும் ஏழைக் குழந்தைகள் பி. ஸி. ஜி குத்திக் கொண்டபின் ஏற்படும் தீங்கைப் போக்க வேண்டுமாயின் நூற்றுக் கணக்கான ரூபாய்களுக்கு எங்கே போவார்கள் என்பதை அரசாங்கம் அறிய வேண்டும். ஒரே குழந்தை பெற்ற பெற்றோர்கள் இதற்குத் (பி. ஸி. ஜி) தங்கள் குழந்தைகளைப் பலி கொடுத்து விட்டால் அவர்கள் மனம் எவ்வளவு பாடுபடும் என்பதையும் உணர வேண்டும். இதையெல்லாம் அனுசரித்துக் குழந்தைகளிடம் இதன் கொடுமையைக் காட்ட வேண்டாம்.



அன்று வெள்ளிக்கிழமை. புவனு கோயிலுக்குப் போவதற்காக வேலைகளையெல்லாம் வழக்கத்தைவிடச் சீக்கிரமாக முடித்து விட்டு, வெற்றிலை, பாக்கு, பழம், தேங்காய் எல்லாவற்றையும் கூடையில் எடுத்துத் தயாராக வைத்து விட்டு, வாசலுக்கும் உள்ளுக்குமாகப் போய்க் கொண்டிருந்தாள். வழக்கமாக ஆறு மணிக்கு வந்து விடும் அவள் கணவன் அன்று ஏனோ மணி ஏழாகியும் வரவில்லை. சீக்கிரம் வரச் சொன்னேனே, ஏன் வரவில்லை எனச் சிந்திக்கும் பொழுதே, "ரொம்ப நேரமாகி விட்டதில்லையா புவனு? இன்றைக்கென்று ஆபீஸில் அதிக வேலை இருந்து விட்டது" என்று சொல்லிக் கொண்டே வந்தான் மூர்த்தி.

"பரவாயில்லை. அதற்கென்ன செய்வது? நீங்கள் வந்துதானே நான் போக வேண்டும்? வெள்ளிக்கிழமையை மறந்து போய் நண்பர்களுடன் எங்கேயாவது போய் விட்டீர்களோ என்று நினைத்துக் கொண்டிருந்தேன்" என்று சொல்லிக் கொண்டே தயாராக வைத்திருந்த காப்பியை எடுத்துக் கொடுத்தாள் புவனு.

"உன்கூட வருவதற்குத் துணை யாரேனும் இருக்கிறார்களா?" என்றான் அவன்.

"வேண்டாம், நீங்கள் இப்போதுதானே அலைந்து விட்டு வந்திருக்கிறீர்கள்? நான் அடுத்த வீட்டு அலமு மாமியை இருக்கச் சொல்லியிருக்கிறேன். நாம் இருவரும் ஞாயிற்றுக் கிழமை போய் வருவோம்" என்று சிரித்துக் கொண்டே கூறினாள் புவனு. அவள் அப்படிக் கூறியதிலும் அர்த்தம் இருக்கத்தான் செய்தது.

* * *

அப்பொழுது புவனு பதினைந்து வயதுப் பெண். அவள் தகப்பனார் சாத்தூரில் ஒரு பள்ளிக்கூட உபாத்தியாயர். நல்லவேளையாக அவருக்குக் குழந்தைகள் அதிகம் கிடையாது. புவனுவும் இரு பையன்களுமே அவர் குழந்தைகள். ஆனால் வயது சென்ற பெற்றோரைக் காப்பாற்றும் பொறுப்பு அவருக்கு இருந்தது. அவருடைய சொற்ப வருமானத்தில் ஏழு ஜீவன்கள் எப்படிக் காலந்தள்ள முடியும்?

அவருடைய அடுத்த வீட்டிலே தான் அவருடைய பள்ளியின் தலைமை ஆசிரியர் குடியிருந்தார். அப்பொழுது ஹைஸ்கூலில் இன்ஸ்பெக்ஷன் சமயம். 'இன்ஸ்பெக்டர்' எப்பொழுதுமே தலைமை ஆசிரியர் இல்லத்தில்தான் தங்குவது வழக்கம். வழக்கம் போல் அவ் வருஷமும் டிசம்பர் மாதம் 'இன்ஸ்பெக்ஷன்' நடக்க இருந்தது. முதல் நாள் பள்ளிக்கூடத்தில் அதிக நேரம் ஆகி விடவே தலைமை ஆசிரியர் இல்லத்தில் தங்கி விட்டார் இன்ஸ்பெக்டர் ராமநாத அய்யர்.

மறுநாள் மார்கழி மாதம் முதல் தேதி. விடியற்காலை நாலரை மணிக்கே எழுந்து விட்ட இன்ஸ்பெக்டர் ராமநாத அய்யர் சமீ

பத்தில் யாரோ இனிய குரலில் சுருதி சுத்தமாகத் திருப்பாவை பாடுவதைக் கேட்டு மெய் மறந்து நின்று விட்டார். மேலும் அக்குரல் அவர் முன்பே கேட்ட குரலாக இருந்தது. யோசித்துப் பார்த்தார் அவர். ஆம்! முதல் நாள் அவர் பத்தாவது வகுப்பைப் பார்வையிட்ட போது ராமலிங்க சுவாமிகளின் திருவருட்பா ஒன்றை இனிய குரலில் பாடி அர்த்தம் கூறினாள் ஒரு பெண். அதே குரல்தான் இது என்று தீர்மானித்துக் கொண்டார். அப்பெண்ணைப் பற்றிய முழு வரலாற்றையும் அறிய எண்ணித் தலைமை ஆசிரியரிடம் விவரம் கேட்டார். தலைமை ஆசிரியர், புவனாவின் தந்தையைப் பற்றியும் புவனாவைப் பற்றியும் கூறினார். இந்தப் பெண்ணைத் தம் பிள்ளை மூர்த்திக்குக் கல்யாணம் செய்து கொண்டு விட வேண்டியதுதான் என்று தீர்மானித்தார் ராமநாதய்யர். இப்படி அவர் தீர்மானித்ததற்கு ஒரு முக்கியமான காரணம் இருந்தது. மூர்த்தியை ஒரு நாஸ்திகன் என்றே சொல்லலாம். தெய்வம், கோயில் என்ற பேச்சைக் கேட்டாலே தூக்கி யெறிந்து பேசுவான். புவனா பக்திப் பாடல்களைப் பாடும் உருக்கத்திலிருந்து அவள் தன் பக்தியினால் அவளது கணவன் மனத்தையும் மெள்ள மெள்ளத் திருத்தி விடலாம் என்று அவர் நம்பினார்.

மறு முறை இன்ஸ்பெக்டர் ராமநாத ஐயர் அந்த ஊருக்குப் பள்ளிக்கூட அலுவலாக வந்த போது தலைமை உபாத்தியாயர் வீட்டில் இருந்த படியினால் புவனாவின் தகப்பனாருடனே தங்கும்படி நேர்ந்தது. அந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு, புவனாவின் குணாதிசயங்களையும், வீட்டு வேலைகளை அவள் செய்யும் நேர்த்தியையும் நேரில் கண்டார் அவர். பெண்ணின் நற்குணம் அவருக்குப் பிடித்து விட்டது.

ராமநாத அய்யர் ஊருக்குப் புறப்படும் போது அவர் கூறிய வார்த்தைகள் புவனாவின் தந்தையை ஆச்சரியத்தில் மூழ்க வைத்தன. "நம் வழக்கத்தில் பிள்ளைக்குப் பெண் கேட்பது இல்லை யென்றாலும் பரவாயில்லை. உங்கள் பெண் புவனா சகல விதத்திலும் எனக்குப் பிடித்தமாக இருக்கிறாள். என் பிள்ளை 'எகனாமிக்ஸ்' ஆனர்ஸ் படித்துக் கொண்டிருக்கிறான். அவனுக்கு உங்கள் பெண்ணைப் பண்ணிக் கொள்ளலாமென்று நினைக்கிறேன். எனக்குப் பணம் காசு ஒன்றும் அவசியமில்லை" என்றார்.

ஆச்சரியம் ஓரளவு நீங்கினவுடன் புவனாவின் தந்தை, "என் பாக்கியம்" என்றார்.

சம்பிரதாயமாகப் பெண் பார்க்கும் படலம் நடந்தது. புவனா அப்படி ஒன்றும் அதிக அழகி இல்லா விட்டாலும் அவள் முகத்தில் ஒரு வசீகரம் இருந்தது. அதிக ஆடம்பரமின்றி அவள் செய்து கொண்டிருந்த அலங்காரங்கள் அவள் உருவத்தைக் கவர்ச்சிகரமாகச் செய்தன. ஆகவே ராமநாதய்யர் மனைவிக்கும் பிள்ளை மூர்த்திக்கும் புவனாவின் தோற்றம் திருப்தியாக இருந்ததில் ஆச்சரியமில்லை. சித்திரை மாதம் கல்யாணம் நடந்தது.

மூர்த்திக்குக் கும்பகோணம் கல்லூரியில் போதகர் வேலை கிடைத்து விட்டது என்று கடிதம் வரவே சந்தோஷத்தில் மூழ்கினர் மூர்த்தியின் பெற்றோர். புவனாவின் அதிர்ஷ்டம் என்று சொல்லிக் குதூகலப்பட்டனர். தானே குடித்தனம் வைத்து விட்டுப் பத்து நாட்களுக்குக் கூட இருந்து விட்டு வந்தாள் புவனாவின் மாமியார். இதற்குள் அக்கம் பக்கத்திலுள்ளவர்களுடன் பழகிச் சிநேகம் செய்து கொண்டாள் புவனா. மாமியார் இருக்கும் பொழுது அவர்களுடன் தானும் தினமும் கோவிலுக்குச் சென்று வருவாள். மாமியார் ஊருக்குப் போன மறுநாள் வெள்ளிக்கிழமை. அன்று கல்லூரியிலிருந்து சீக்கிரமே வந்து விட்டான் மூர்த்தி. வழக்கம் போல் அடுத்த வீட்டு அலமுமாமி வந்து, "ஏம்மா, புவனா கோவிலுக்குப் போகலாம், வருகிறாயா?" என்று கேட்டாள். கணவனுக்குப் பலகாரமும் காப்பியும் அளித்த பின் போகலாம் என்று புவனா தீர்மானித்தாள். அவள் கணவன் வந்ததும் அவருக்குச் சிற்றுண்டி கொடுத்து விட்டு, "நான் கோவிலுக்குப் போய் விட்டு வரட்டுமா?" என்றாள் கணவனிடம். 'சரி' என்றான் மூர்த்தி அரை மனத்துடன்.

இதே மாதிரி இரண்டு மூன்று தரம் அவள் போய் விட்டு வந்த பிறகு, ஒருநாள் மூர்த்தி, "புவனா! இங்கே வா!" என்றான். அவன் குரலில் கலந்திருந்த கடுமையைக் கண்டு பயந்து விட்டாள் புவனா. "இதோ பார், புவனா. எனக்கு இதுபோன்ற மதத்தின் புறச் சின்னங்கள் எல்லாம் பிடிக்காது. ஏதோ இத்தனை நாள் நீ முதல் முதலில் கேட்டதை மறுப்பானேன் என்று கோவிலுக்குப் போய் வர உத்தரவு கொடுத்து வந்தேன். உனக்கு வேண்டுமென்றால் நீ வீட்டில் விளக்கேற்றிக் கொள். பூஜை செய்து கொள். அதை வேண்டாமென்று நான் சொல்லவில்லை. ஆனால் கோயிலுக்குப் போவேன், உத்ஸவத்துக்குப் போவேன் என்று கிளம்பக் கூடாது. அப்படிக் கிளம்பினால் இந்தக் கும்பகோணத்தில் உள்ள கோவில்களைப் பார்ப்பதற்குத்தான் உனக்குப் பொழுது சரியாக இருக்கும்!" என்றான்.

புவனாவுக்கு மிகவும் வருத்தமாகப் போய் விட்டது. இருந்தாலும் என்ன செய்வது? அன்றிலிருந்து அவள் அவனுக்கு விரோதமாக ஒரு காரியமும் செய்வதில்லை.

ஒரு நாள் அடுத்த வீட்டு அம்மாமி, "ஏன், புவனு! இப்படி வீட்டுக்குள்ளேயே அடைந்து கிடக்கிறாய்? வாயேன். கோவிலுக்குப் போய்விட்டு வரலாம். ஆடி வெள்ளிக்கிழமை விசேஷமில்லையா?" என்றாள்.

"வேண்டாம் மாமி, அவர் குணம்தான் உங்களுக்குத் தெரியுமே. அவருக்குத் தெரிந்தால் மிகவும் கோபித்துக் கொள்வார்" என்று கூறினாள்.

"பரவாயில்லை, வா! அவன் வருவதற்குள் போய்விட்டு வந்து விடலாம்" என்றாள். புவனுவும் அப்படியே நம்பிக் கொண்டு புறப்பட்டு விட்டாள். கோவிலில் இயற்கையாகவே இருந்த ஆர்வம் ஒரு பக்கம் இழுத்தது. மாமியின் வற்புறுத்தல் வேறு.

அன்று சோதனை போல் மூர்த்தி சீக்கிரம் வந்து விட்டான். வீடு பூட்டியிருந்தது. தன்னைக் கேட்காமல் எங்கு போயிருப்பாள் என்று நினைக்க நினைக்க அவனுக்குக் கோபம் பொத்துக் கொண்டு வந்தது. கோவிலிலிருந்து அவள் வந்ததும் அவளிடமிருந்து சாவியைப் பிடுங்கி வேகமாகக் கதவைத் திறந்தான். அவள் உள்ளே நுழைந்ததும் நுழையாததுமாக அவள் கன்னத்தில் இரண்டு அறை கொடுத்தான். பிரமித்து நின்றாள் புவனு. அவள் மனம் அவமானத்தால் குன்றியது. இரவெல்லாம் அழுது-அழுது-அவள்கண்கள் வீங்கிவிட்டன.

மறு நாள் புவனுவின் உடம்பு நெருப்பாகக் கொதிக்க ஆரம்பித்தது. சாதாரண ஜுரமாக இருக்கும், இரண்டு நாள் மருந்து கொடுத்தால் தானே சரியாகப் போய் விடும் என்று நினைத்துக் கொண்டு மருந்து வாங்கிக் கொடுத்தான் மூர்த்தி. ஜுரம் கொஞ்சமும் குறையாமல் இருக்கவே அவன் நெஞ்சு திடுக்கிட்டது. ஒரு வாரம் ஆகியும் ஜுரத்தின் வேகம் சற்றும் குறையவில்லை. தன் செய்கைக்காக வருந்தப் பட்டான்; வெட்கமடைந்தான். மூர்த்திக்குக் கைகால் ஓடவில்லை. தன் வீட்டுக்கு ஒரு தந்தியும் அவளுடைய பெற்றோர்களுக்கு ஒரு தந்தியும் கொடுத்தான். தந்தியைக் கண்டவுடனே புவனுவின் தாயாரும், மாமியாரும் ஓடோடியும் வந்தனர். யார் வந்ததையும் புரிந்து கொள்ளாமல் அவள் ஏதேதோ பிதற்றிக் கொண்டு தன் நினைவின்றிப் படுத்திருந்தாள். இடையிடையே "நான் கோவிலுக்குப் போகவில்லை, அடிக்க வேண்டாம்" என்ற வார்த்தைகள் கேட்டன. மூர்த்தியின் தாயார் அவனைத் தனியே கூப்பிட்டுக் கேட்கவே அவன் அவமானத்துடன் தான் செய்த தவற்றைக் கூறினான். "அடா, அசட்டுப் பிள்ளையே! புவனு நம் வீட்டுக்கு வந்தவுடன் லஷ்மி வந்தது போல் இருக்கிறதேடா. எப்பொழுது உனக்கு இவ்வளவு அசட்டுப் புத்தி வந்தது? தெய்வசிந்தனை கூடாதுடா" என்றெல்லாம் கூறி அழ ஆரம்பித்து விட்டாள்.

அவன் உள்ளத்தில் ஒருவித பயம் குடிகொண்டது. இருபது நாட்களாகியும் ஜுரம் ஏறுவதும், இறங்குவதுமாக இருந்ததே தவிரக் குணமடைவதாக இல்லை. உடல் மெலிவுற்று எலும்புந் தோலுமாக ஆகி விட்டாள் புவனு. டாக்டர்களும் கையை விரிக்கும் நிலை ஏற்பட்டு விட்டது. மூர்த்தியின் தாயார், "என் அப்பனே, வெங்கடாசலபதி! உன் மலைக்கு என் பிள்ளையையும், மாட்டுப் பெண்ணையும் அழைத்துக் கொண்டு வருகிறேன். அவளைக் காப்பாற்று! என் பிள்ளைக்கும் நல்ல புத்தியைக் கொடு" என்று மனமுருக வேண்டினாள். ஆபத்து வேளையில் வெளி வந்த இந்தப் பிரார்த்தனையை மூர்த்தியும் கேட்டான். அவன் மனம் பயத்தாலும், கவலையாலும் குழம்பிக் கிடந்தது. அவனால் பிரார்த்தனை செய்ய முடியவில்லை. ஆனால் மனிதர்கள் காப்பாற்ற முடியாத நிலையில் அவனுடைய தாயார் அவர்களைவிட ஒரு பெரிய சக்தியிடம் முறையிட்டுக் கொள்வதைக் கேட்டபோது அவனுக்கே ஒருவித ஆறுதல் ஏற்பட்டது. 'அம்மா, புவனு இவர்களுக்கெல்லாம் எவ்வளவு தெய்வ பக்தி இருக்கிறது! அதெல்லாம் முட்டாள்தனமா என்ன?' என்று தன்னையே திரும்பத் திரும்பக் கேட்டுக் கொண்டான். அவன் தாயாரின் வேண்டுகோளுக்குச் செவி சாய்த்ததுபோல் புவனுவின் உடல் நிலையில் சிறிது முன்னேற்றம் ஏற்பட்டது. மூர்த்தியின் முகத்திலும் இப்பொழுது மகிழ்ச்சி தோன்றியது.

பிரார்த்தனையைச் செலுத்துவதற்கு எல்லோரும் திருப்பதிக்குச் சென்ற போது ஸ்வாமி சந்நிதியில் நின்ற மூர்த்தியின் கரங்கள் அவனையுமறியாமல் பக்தியுடன் குவிந்தன. அவன் தாயாரும் புவனுவும் அவன் மனம் மாறியதற்காக நன்றி செலுத்தினர் சர்வேசுவரனுக்கு.

* * *

"கோவிலுக்குப் புறப்பட வேண்டுமென்றாய், சும்மா நின்று கொண்டிருக்கிறாயே!" என்றான் மூர்த்தி.

"ஒன்றுமில்லை. ஏதோ பழைய நினைவு" என்று சிரித்துக் கொண்டே புவனு கோவில் சாமான்களை எடுத்து வைத்தாள்.

"நான் வாங்கி வந்த பூவைத் தவறாமல் எடுத்துக் கொண்டு வா."

தாங்க முடியாத பெருமையுடன் புவனு அவன் கொண்டு வந்த பூச்செண்டை எடுத்துக் கூடையில் வைத்தாள். அப்போது அவன் முகம் அந்தப் பூவைப் போலவே மலர்ந்திருந்தது.



BBK-37 TM
குடும்பத்தில்
எல்லோரும் விரும்புவது...
Glaxo
கிளாக்ஸோ பிஸ்கோத்துகள்
சிறந்த பிஸ்கோத்துகள்
பிரிட்டானியா

JB 993





பர்மா ரமணி

அழ. வள்ளியப்பா

12. அவர் மறதி!

“நீங்கள் உங்கள் வீட்டுக்குப் பக்கத்திலுள்ள போலீஸ்-ஸ்டேஷனில் ‘ரிப்போர்ட்’ கொடுத்திருக்கிறீர்கள். ஆனால், அந்த ரமணிப் பயல் நம் நாடகக் கொட்டகைக்குப் பக்கத்தில் உள்ள போலீஸ்-ஸ்டேஷனில் சிக்கிக் கொண்டிருக்க வேண்டும். இந்தப் பட்டணத்தில்தான் B, B-1, B-2, B-3, B-4 என்று ஆரம்பித்து K, K-1, K-2, K-3, K-4 வரை கிட்டத்தட்ட ஐம்பது போலீஸ் ஸ்டேஷன்கள் இருப்பதாகத் தெரிகிறதே! ரமணியை இந்தப் போலீஸ் ஸ்டேஷனுக்குப் பிடித்து வந்தபோது, அவன் கையில் பேனா மட்டுமே இருந்திருக்க வேண்டும். கடிகாரத்தை அவன் எங்கேயோ ஒளித்து வைத்திருக்க வேண்டும். அல்லது விற்றிருக்க வேண்டும். ‘இந்தப் பேனா யாருடையது?’ என்று கேட்டிருப்பார்கள். அவன் உள்ளதைச் சொல்லியிருக்க மாட்டான். சொன்னால் தான் உடனே இங்கு கூட்டிக் கொண்டு வந்திருப்பார்களே! அப்போது அவனுக்கு எப்படி இருக்கும்? அவமானமாயிருக்குமல்லவா? அது மட்டுமா? நானும் என் கடிகாரத்தைப் பற்றிக் கேட்காமல் விடுவேனா? அதற்கும் பதில் சொல்லி ஆக வேண்டுமே! அதனால், பேனா எங்கோ வழியில் கிடந்ததாக அவன் சாதி விட்டிருப்பான்............”

முதலாளி மோகனரங்கம் இப்படிக் கூறிக் கொண்டிருக்கும் போதே, “அப்படியானால், கீழே கிடந்ததாகக் கூறி என் பேனாவைப் போலீஸில் கொடுத்து விட்டு ரமணி தப்பித்துக் கொண்டிருப்பான்” என்றார் மதுரநாயகம்.

“யார் கண்டது? ஒருவேளை அவன் மீது சந்தேகப்பட்டு அடைத்து வைத்திருந்தாலும் இருக்கலாம். எதற்கும் நாளை சாயங்காலம் கட்டாயம் போய்ப் பார்த்து விடுங்கள். அந்த ரமணிப் பயல் அங்கே இருந்தால், என் கடிகாரத்தைப் பற்றியும் கேளுங்கள்; மறந்து விடாதீர்கள்!” என்றார் மோகனரங்கம்.

* * *

மறுநாள் மாலை மணி நாலு இருக்கும். மானேஜர் மதுரநாயகம் புறப்பட்டுத் தபாலாபீஸ் அருகேயுள்ள போலீஸ்-ஸ்டேஷனுக்குச் சென்றார். அங்கே சென்றதும், சப்-இன்ஸ்பெக்டரிடம் விஷயத்தைக் கூறினார்.

“ஓஹோ! அது நீங்கள்தானா? ஆமாம், பேனாவைக் கொடுத்தது தான், பேனாவைக் கொடுத்த ஆசாமி சொல்வதற்கும் சம்பந்தம் இல்லையே!” என்று கூறினார் சப்-இன்ஸ்பெக்டர்.

“அது எப்படி சார் இருக்கும்? திருடிக் கொண்டு வந்தவன் உண்மையையா சொல்வான்?”

“ஆத்திரப் படாதீர்கள்! இப்போது பேசாமல் வீட்டுக்குப் போங்கள். நாளைக் காலையில் நான் ஆள் அனுப்புகிறேன். அப்போது வந்தால், விவரமாகப் பேசி முடிவு செய்யலாம்” என்று கூறினார் சப்-இன்ஸ்பெக்டர்.

“ஏன் சார் பேனாவைக் கொடுத்தது யார்? அவன் எங்கே இருக்கிறான்?”

“அதெல்லாம் இப்போது சொல்லக் கூடாது. சொன்னால், உடனே நீங்கள் போய் அந்த ஆசாமியைப் பார்த்து உங்களுக்குச் சாதகமாகப் பேசச் சொல்லி விட்டால் என்ன செய்வது?” என்று சற்றுக் கடுமையாகக் கூறினார் போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர்.

“சரி, சார்! நான் போய் நாளை வருகிறேன்” என்று கூறிவிட்டுப் புறப்பட்டு வந்தார் மதுரநாயகம்.

நாடகசபா முதலாளியும், கமலாதேவியும் விஷயத்தைக் கேட்டதும், “சரி, நாளை எப்படியும் அந்தப் பயல் அகப்பட்டுக் கொள்வான்” என்றே முடிவு கட்டி விட்டார்கள்.

* * *

மறுநாள் காலை முதலாளி மோகனரங்கமும், மானேஜர் மதுரநாயகமும் போலீஸ்-ஸ்டேஷனிலிருந்து தகவல் வருமா, வருமா என்று எதிர்பார்த்துக் கொண்டேயிருந்தார்கள்.

பிற்பகல் மணி ஒன்று ஆகியும் தகவல் வரவில்லை. வழக்கமாகப் பன்னிரண்டு மணிக்குச் சாப்பிடும் முதலாளியால் அதற்கு மேலும் அங்கு இருக்க முடியவில்லை. காரிலே வீட்டுக்குப் புறப்பட்டுப் போய் விட்டார்.

மதுரநாயகமும் வீட்டுக்குப் புறப்பட்டு வெளி வாயில் வரை வந்து விட்டார். அப்போது சைக்கிளில் ஒரு போலீஸ்காரர் வந்தார். அவரைக்

கண்டதும், "யார் வேண்டும்?" என்று கேட்டார் மதுரநாயகம்.

"நாடகசபா மானேஜரை சப்-இன்ஸ்பெக்டர் கையோடு அழைத்து வரச் சொன்னார்" என்றார் போலீஸ்காரர்.

"நான்தான் மானேஜர். காலையிலிருந்து எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன். இதோ நேராக வருகிறேன்" என்றார் மதுரநாயகம்.

"சீக்கிரம் வாருங்கள். நான் முன்னால் போய்ச் சொல்லுகிறேன்" என்று கூறிவிட்டுச் சைக்கிளில் திரும்பி விட்டார் போலீஸ்காரர்.

மதுரநாயகம் சப்-இன்ஸ்பெக்டர் அறைக்குள்ளே நுழைந்ததும், அங்கு ஒருவர் உட்கார்ந்திருப்பதைக் கண்டார்.



அவர் உயரமாக, நல்ல சிவப்பாக இருந்தார். கதர் ஜிப்பா அணிந்திருந்தார். அவர் ஏதேனும் வேறு வேலையாக வந்திருப்பார் என்று நினைத்தார் மதுரநாயகம். ஆனால், சப்-இன்ஸ்பெக்டர் அவரைச் சுட்டிக் காட்டி, "என்ன மிஸ்டர் மதுரநாயகம், இவரை உங்களுக்குத் தெரியுமா?" என்று கேட்டார்.

மதுரநாயகம் அவரை ஏற இறங்க ஒரு முறை பார்த்தார். பார்த்துவிட்டு, "அடிக்கடி பார்த்ததில்லை. சமீபத்தில் எங்கோ பார்த்தமாதிரி இருக்கிறது" என்று இழுத்தார்.

உடனே சப்-இன்ஸ்பெக்டர் அந்த மனிதரிடம், "இவரை உங்களுக்குத் தெரிகிறதா?" என்று கேட்டார்.

"சந்தேகமில்லை, சார்! அந்த மனிதர் இவரேதான்! கண்ணாடி அணிந்திருக்கிறார். சுருட்டை மயிர், அரை மீசை, சிவப்பு நிறம், வலது கையில் கிருஷ்ணன் பொம்மை போட்ட மோதிரம் எல்லாம் அப்படி அப்படியே இருக்கின்றன. நான் அன்றைக்கு எழுதிக் கொடுத்ததில்கூட இதையெல்லாம் குறிப்பிட்டிருக்கிறேனே!" என்றார் கதர் ஜிப்பாக்காரர்.

உடனே சப்-இன்ஸ்பெக்டர் ஜிப்பாக்காரரைப் பார்த்து, "ஏனய்யா, நீர் எழுதிக் கொடுத்திருப்பதெல்லாம் பொய்யாம்! உம்மைத் திருடன் என்றும், திருடன் சொல்வது உண்மையாக இருக்க முடியாதென்றும் இவர் சொல்லுகிறாரே!" என்றார் சிரித்துக் கொண்டே.

உடனே அவர், "என்ன! நானாவது திருடனாவது! யார் திருடன்? இது நல்லதுக்கே காலமில்லை" என்று ஆத்திரத்தோடு கூறினார்.

"ஐயையோ! நான் உங்களைத் திருடன் என்று சொல்லவே இல்லையே!" என்று கதறினார் மதுரநாயகம்.

அதைக் கேட்டதும், சப்-இன்ஸ்பெக்டர், "சரி, அதெல்லாம் இருக்கட்டும். இப்போது நான் கேட்பதற்குப் பதில் சொல்லுங்கள். நீங்கள் போஸ்டாபீஸுக்கு அடிக்கடி போவதுண்டா?" என்று கேட்டார்.

"இல்லை. அவசரமான வேலை இருந்தால்தான் போவேன்" என்று பதிலளித்தார் மதுரநாயகம்.

"சமீபத்தில் எப்போதாவது நீங்கள் போனதுண்டா?"

"சென்ற செவ்வாய்க்கிழமை பிற்பகல் மணியார்டர் செய்யப் போனேன்."

"உடனே மணியார்டர் செய்துவிட்டுத் திரும்பி விட்டீர்களா? அல்லது காத்திருந்தீர்களா?"

"க்யூ வரிசையில் சுமார் அரைமணி நேரம் காத்திருந்தேன்."

"காத்திருந்து, உங்கள் முறை வந்ததும், மணியார்டர் செய்தீர்கள். அப்படித்தானே!"

"இல்லை. மணியார்டர் செய்யப்போன சமயம், எங்கள் சபா முதலாளி அவசரமாக என்னை அழைத்து வரச் சொன்னதாக ஒரு பையன் ஓடிவந்து சொன்னான். உடனே நான் மணியார்டர் செய்யாமலே திரும்பி விட்டேன்."

"க்யூவில் நிற்கும்போது, உங்களிடம் யாராவது பேனாக் கேட்டதுண்டா?"


இதைக் கேட்டதும், மதுரநாயகம் உடனே பதில் சொல்லவில்லை. சிறிது நேரம் யோசனையில் ஆழ்ந்தார். பிறகு,



ஹத்திபாயின்
தராசு மார்க்
உத்திரவாதமான
ஸ்டெய்ன்லஸ்
ஸ்டீல்
பாத்திரங்கள்
உயர்ந்த ரகம்-நேர்த்தியான தயாரிப்பு
ஹத்திபாய் துள்ஸிதாஸ் அண்டு ஸன்ஸ், பம்பாய்–2


அடைந்த
மூக்கைத்
துரிதமாகச்
சுத்தி
செய்கிறது!
VICKS
Inhaler
எச்சரிக்கை!
கவனியுங்கள்
ஆம் விக்ஸ் இன்ஹேலர்!
விக்ஸ் ஒரு டிரேட் மார்க்


ஆஹா,
போட்டால்...
போடணும்
மைதீன்
புகையிலை
போன்
41
தந்தி:
"MYDEENCO"
E.S. மைதீன் & கோ
கும்பகோணம்.


TSR
சுமார் இரண்டு மணி நேரத்
திற்கு அற்புத மணத்தை
அள்ளி வீசும் எங்கள்
மற்றுமோர் புதிய தயாரிப்பு
TRADE MARK
GOKUL
SPECIAL Thick
MALA BATHI
MADE BY. T.S.R & CO. KUMBAKONAM
12 STICKS
TSR
T.S.R & Co., PERFUMERS, KUMBAKONAM

"அடடே! இப்போதுதான் ஞாபகத்துக்கு வருகிறது, சார்! அப்போது ஒருவர் மணியார்டர் பாரம் பூர்த்தி செய்ய வேண்டுமென்று பேனுக் கேட்டார். கொடுத்தேன். திருப்பி வாங்குவதற்குள் அந்தப் பையன் வந்து கூப்பிட்டு விட்டான்......!" என்று சொல்லிவிட்டு, மேலும் ஏதோ சொல்லப் போனுர்.

அதற்குள் அந்த சப்-இன்ஸ்பெக்டர், "யாரிடம் பேனுவைக் கொடுத்தீர்கள்? அந்த ஆள் பத்துப் பேருக்கு நடுவிலே வந்து நின்ருல், அவரைக் கண்டு பிடிக்க முடியுமா?" என்று கேட்டார்.

உடனே மதுரநாயகம், "அவர் இவர் தானே......" என்று சந்தேகத்துடன் பக்கத்திலிருந்த ஜிப்பாக்காரரை உற்றுப் பார்த்தார். பார்த்துவிட்டு, "சார், சார் இவராகத்தான் சார் இருக்கவேண்டும்!" என்ருர் உறுதியான குரலில்.

"இவராகத்தான் இருக்கவேண்டுமா! நல்ல மனிதரய்யா நீங்கள்! பேனுவை இவரிடம் கொடுத்துவிட்டு, எவனே ஒரு சிறுவன் மீது பழிபோட்டு விட்டீர்களே! பாவம்!" என்று அநுதாபப் பட்டார் சப்-இன்ஸ்பெக்டர்.

"பாவம், சார்! அந்த ரமணி மிகமிக நல்லவன் என்று தெரிகிறது. எல்லாம் இந்த மறதியால் வந்த வினைதான்!" என்று வருத்தப்பட்டார் மதுரநாயகம்.

"ஆமாம். நான் பாரத்தைப் பூர்த்தி செய்து விட்டு நிமிர்ந்து பார்த்தேன். உங்களைக் காணும்! தபாலாபீஸ் முழுவதும் தேடு தேடு என்று தேடினேன். பேனுவோ விலை உயர்ந்தது. சாதாரணப் பேனுவைக் கூடச் சிலர் தரமாட்டார்கள். நீங்கள் முன்பின் அறியாத என்னை நம்பி அந்த உயர்ந்த பேனுவைத் தந்தீர்கள். நம்பிக்கைத் துரோகம் செய்யலாமா? பேனுவின் மேலே பெயர் இருக்கிறதா என்று பார்த்தேன். 'சேகர் அன்பளிப்பு' என்று மட்டுமே இருந்தது. 'யார் அந்த சேகர்?' என்பது எனக்குத் தெரியுமா? யோசித்து யோசித்துப் பார்த்தேன். கடைசியில், இந்தப் போலீஸ் - ஸ்டேஷனில் கொண்டுவந்து கொடுத்து, சொந்தக்காரரிடம் சேர்த்து விடச் சொன்னேன். அப்போது, பேனு என் கைக்கு எப்படி வந்தது என்பதை விவரமாக எழுதிக் கொடுத்திருக்கிறேன்" என்ருர் ஜிப்பாக்காரர்.

இதைக் கேட்டதும், "நீங்கள் ரொம்பத் தங்கமானவர், சார். இல்லாத போனுல், தங்க மூடி போட்ட என் பேனுவை இப்படிக் கொண்டு வந்து கொடுப்பீர்களா? வேறொருவராயிருந்தால், பேனு திரும்பியே வராது! ரமணி தான் திருடிவிட்டான் என்று சொல்லிக் கொண்டே யிருப்போம். நல்ல காலம். உங்கள் பெயர் என்ன சார்?" என்று கேட்டார் மதுரநாயகம். (தொடரும்)

டி. கே. சி. யின் கடிதங்கள்

திருக்குற்றுலம்
12—8—47

அழகான கடிதம் கிடைத்தது.

தமிழ் உலகத்தில் இத்தகைய கடித இலக்கியம் பிறந்து வருகிறது என்று சொல்லி நண்பர்கள் ஆனந்தப்படுகிருர்கள்.

பொதுவாக நம்மவர்கள் கடிதம் எழுதினுல் "இவ்விடம் க்ஷேமம். அவ்விடம் க்ஷேமத்துக்கு எழுதி யனுப்ப வேண்டும்" என்பதுதான் விஷயமா யிருக்கும்.


புலவர்கள் எழுதி யனுப்பினுல் அதுவும் இராது. 'பன்னுள் நோக்குற்றது இங்காட் போந்தெய்தியது' என்று அவர்கள் படித்த பாடத்தை யெல்லாம் ஒப்பிக்கப் பார்ப்பார்கள்.


உணர்ச்சியோ உண்மையோ சூன்யம். நமக்கு ஏமாற்றமும் தலைவலியும் மிச்சம் என்று ஏற்படும்.

இப்படி இருந்த கடித உலகில் கிடந்தவனுக்கு, தூளைவர் கடிதமும் தங்கள் கடிதமும் எவ்வளவு ஆனந்தத்தைக் கொடுத்திருக்கிறது என்பதைத் தாங்கள் அறிய முடியாது.

பழனியாண்டவன் அருள் என்றென்றும் உங்கள் இருவருக்கும் அமைவதாக.

வீரவேல் தாரைவேல்
விண்ணேர் சிறை மீட்ட
தீரவேல் செவ்வேள்
திருக்கை வேல்—வாரி
குளித்தவேல் கொற்றவேல்
சூர்மார்பும் குன்றும்
துளைத்தவேல் உண்டே துணை





25. அன்னை காவேரி

சின்னஞ் சிறு குழந்தைகள் வேடிக்கையாகப் பாடிய ஒரு நாடோடி பாடல்தான் அது. ஆனால் அந்தப் பாடல் இரண்டு பெண் உள்ளங்களிலே எத்தகைய பெரும் புயலை எழுப்பி விட்டது!

தாராபுரம் சம்பந்தம் — அத்தானை
தாசில்தார் என்று சொன்னாங்க
தாராபுரம் போய்ப்பார்த்தேன் — அத்தான்
தழுக்கடிக்கக் கண்டேனே!

இலந்தக்குளம் சம்பந்தம் — அத்தானை
இஞ்சினீர்னு சொன்னாங்க
இலந்தக்குளம் போய்ப் பார்த்தேன்—அத்
இட்டிலி விற்கக் கண்டேனே! [தான்

என்று பெண் குழந்தைகள், முற்றத்திலேயிருந்து உரத்த குரலில் பாடிக்கொண்டிருந்தது கேட்டு, ஜன்னல் வழியாக எட்டிப் பார்த்தாள் கல்யாணி.

அப்புலிங்கத்தின் பங்களா முகப்பிலேயிருந்த திண்ணையில் பெண் குழந்தைகளும் சிறுவர்களுமாக வழக்கம் போல் 'மரப்பாச்சிக் கல்யாணம்' நடத்திக் கொண்டிருந்தார்கள். பெண் குழந்தைகள் மாறி மாறிப் பாடிக் கொண்டிருந்தன :—

திருச்சினாப்பள்ளி சம்பந்தம் — அத்தானை
திவான் என்று சொன்னாங்க
திருச்சினாப்பள்ளி போய்ப்பார்த்தேன்—அத்
திவட்டி பிடிக்கக் கண்டேனே! [தான்

இந்தவிதமாக இனிமையான குரலில், கவர்ச்சி மிகுந்த எளிய மெட்டில் ஒரு பெண் குழந்தை பாடிற்று. உடனே அடுத்த சிறுமி பாட்டைத் தொடர்ந்தாள் :

கழுகுமலைச் சம்பந்தம் — அத்தானை
கலெக்டர் என்று சொன்னாங்க
கழுகுமலை போய்ப் பார்த்தேன் — அத்தான்
கழுதை மேய்க்கக் கண்டேனே!

உடனே இன்னொரு சிறுமி பாட்டைக் கீழ்க்கண்டவாறு முடித்தாள்:—

வண்ணார்பேட்டை சம்பந்தம் — அத்தானை
வக்கீல் என்றும் சொன்னாங்க
வண்ணார்பேட்டை போய்ப் பார்த்தேன்-அத்
வரட்டி தட்டக் கண்டேனே! [தான்

சிறு பிள்ளைகள் இந்த மாதிரிக் கல்யாணப் பாட்டுக்களைப் பாடிக் கொண்டே கும்மாளம் அடித்துக் கொண்டிருந்ததைப் பார்த்ததும், கல்யாணிக்கு ஏதேதோ பழைய நினைவுகள் மனத்தில் எழுந்தன.

சிறு குழந்தைகளுக்குப் பிறருடைய மன எண்ணங்களைப் பற்றி என்ன கவலை? இந்த அகில உலகத்தையுமே மறந்து, ஆண்டார் தெருப் பிள்ளைகள் தங்களுடைய வழக்கமான மரப்பாச்சி விளையாட்டை, அப்புலிங்கத்தின் பங்களாத் திண்ணையிலே ஆனந்தமாக நடத்திக் கொண்டிருந்தார்கள்!

ரவீந்திரன் அப்பொழுது எங்கோ வெளியே போயிருந்தான். கல்யாணியின் மனம் லால்குடி நோக்கிச் சென்றது.

பத்து ஆண்டுகளுக்கு முன்பு தனக்குக் கல்யாணப் பேச்சுப் பேசி நிச்சயித்ததும், கல்யாணத்தன்று ரவீந்திரனே

மணப் பந்தலிலே உட்கார்ந்து நலங்குத் தேங்காய் உருட்டியதும் நினைவு வந்தன. எத்தனை இன்பமான அனுபவங்கள் அவை! இனி அவை இன்னொரு முறை வருமா?— இப்படி நினைத்ததும், என்ன பைத்தியக்கார நினைப்பு என்று எண்ணியவளாக ஒரு விநாடி தனக்குள்ளேயே சிரித்துக் கொண்டாள் கல்யாணி. மறு விநாடி அவளுடைய உள்ளத்தில் சிரிப்பை யெல்லாம் மீறிக் கொண்டு துக்கம் படர்ந்தது.

ஆமாம்; அந்த நலங்கின்போதும் தன்னுடைய தங்கை கமலமும் அவளுடைய சிநேகிதிகளும் இப்படித்தான் ஏதோ விளையாட்டாகப் பாடினார்கள்.

'திருச்சிறுப்பள்ளி சம்பந்தம் — அத்தானே'

என்று இப்பொழுது குழந்தைகள் பாடியதும், உடனே அதுதான் நினைவுக்கு வந்தது கல்யாணிக்கு.


ரவீந்திரனைத் திவான் என்று யாரும் சொல்லவில்லை. ஆனால் பரம உத்தமமான மாப்பிள்ளை யென்றும், சங்கீதத்தில் மகா புத்திசாலி யென்றும் சொன்னார்கள். புல்லாங்குழல் வாசிப்பில் ஏறன்பெல்லாம் சரப சாஸ்திரிகள் என்ற பெரியாரைப் பற்றி மிகமிக சிலாக்கியமாகப் பேசுவதுண்டு. அப்படிப்பட்ட ஒரு பெரிய வித்வானாகத் தன்னுடைய கணவன் புகழோடு பிரகாசிப்பான் என்றும், அவனுடைய மனைவி யென்று சொல்லிக் கொள்வதில் தனக்கு எத்தனையோ பெருமை உண்டாகும் என்றும் எல்லாம், எண்ணினாள் கல்யாணி. இப்பொழுதும் என்ன? ரவீந்திரன் ஊருக்கெல்லாம் நல்லவனாகத்தான் இருக்கிறான். தனக்கு மட்டுந்தானே இப்படிக் கசப்பாகப் போய் விட்டான் அவன்!

கல்யாணி நினைத்தாள்: 'இன்றைக்கும் என்ன? இந்தச் சந்திரிகா ஒருத்தி மட்டும் குறுக்கே வந்து சேர்ந்திருக்கா விட்டால் இதற்குள் எத்தனையோ பெரிய வித்வானாகத்தான் அவர் விளங்கி யிருக்க வேண்டும். இந்தச் சிங்காரி ஒருத்தி வந்தல்லவா அவருடைய வாழ்க்கையையே இப்படிச் சீர்குலைத்து விட்டாள்!'

கல்யாணிக்குக் கண்ணீர் பெருகிற்று. சிஷ்யை யென்றும் குருநாதன் என்றும் பேசிக் கொள்கிறார்கள். இந்த டாக்டர் கூட அப்படித்தான் இன்னும் நினைத்துக் கொண்டிருக்கிறார் போலிருக்கிறது. இந்தக் கூத்துக்கு என்ன செய்வது! யாராவது தன்னுடைய சிஷ்யப் பெண்ணை இப்படி வீட்டிலேயே கொண்டு வந்து வைத்து இந்தக் கோலம் செய்வார்களா? யாராவது இப்படி ஒரு சிங்காரிக்காகத் தன்னுடைய புல்லாங்குழல் வாத்தியத்தையே கொண்டு தயங்காமல் அடகு வைப்பார்களா?

இப்படி நினைத்ததும் கல்யாணிக்குத் துயரம் அடக்க முடியாமல் உள்ளத்தில் கொந்தளித்தது. 'புல்லாங்குழலையா அடகு கொடுத்திருக்கிறேன்! மாலையிட்ட கணவரையே அடகு கொடுத்தாயிற்றே!' என்று ஒரு நினைப்பு. அடுத்த நிமிஷம் கண்ணீர் பொல பொல என்று பொங்கி வழிந்தது.

இதே சமயம் மாடியிலே இருந்த சந்திரிகாவும் கண்ணீர் வடித்துக் கொண்டுதான் இருந்தாள். மாடியின் ஜன்னல் வழியாக அவளும் குழந்தைகளின் விளையாட்டைப் பார்த்துக் கொண்டுதான் இருந்தாள். அவளுக்கு இதுவரை திருமணம் என்ற அனுபவம் ஏற்பட்டிரா விட்டாலும், அவளும் ஒரு பெண்தானே? திருமணத்தைப் பற்றிய கற்பனைகள் அவளுடைய உள்ளத்திலும் பொங்கிப் பொங்கி அலை வீசின.




எங்கோ அனாதையாகப் பிச்சை வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருந்த தன்னை ஆட்கொண்டு, இத்தனை தூரம் உயர்ந்த நிலைக்குக் கொண்டு வந்திருக்கிறார் ரவீந்திரன். அவருக்கு என்ன கைம்மாறு செய்வது? தன்னுடைய இதயத்தைத் தவிர வேறு என்ன கைம்மாறு உண்டு, அவருக்கு வழங்க? ஆனால் அவருடைய இதயமோ ஏற்கனவே கல்யாணிக்கு விலையாகி விட்ட ஒரு விலை மதிக்க முடியாத பொக்கிஷம். அந்தப் பொக்கிஷத்தை இனித் தான் அபகரித்து வைத்துக் கொள்ள நினைப்பது எத்தனை பெரிய தவறு!

சந்திரிகா ஒரு குழந்தை இல்லை. தன்னைச் சுற்றி மனித மனங்கள் எத்தனை விதமாகச் சுழல்கின்றன என்பது அவளுக்குத் தெரியும். அன்றொரு நாள் தாயுமானவர் தெரு வீட்டின் மாடியிலே, பௌர்ணமி இரவில் ரவீந்திரன் தன்னுடைய கரங்களைப் பற்றினாரே? பின்பொருநாள் தானும் தன்னை மறந்த நிலையிலே அவருடைய கைகளைத் தொட்டு நின்றாளே? அதெல்லாம் ஒரு கனவு போல இப்பொழுது சந்திரிகாவின் நினைவுத் திரையிலே நிழல்போல் ஓடின.

எத்தனை ஆச்சரியமான நிகழ்ச்சிகள் இவை! ஏதோ மனசாட்சி என்று ஒன்று தனக்கும் ரவீந்திரனுக்கும் இருப்பதால் தானே, இத்தனை நெருங்கிய தொடர்புக் குன்றும் இதுவரை தங்கள் ஜீவகானத்தில் அபஸ்வரம் விழாமல் காத்துவர முடிந்திருக்கிறது! இனியும் அந்த மனசாட்சி தங்களைக் காப்பாற்றிக் கொண்டு வருமா?

சந்திரிகா நினைத்தாள்: கல்யாணி அம்மாள் உண்மையிலேயே நல்லவள். தன்னிடம் இப்பொழுது கொஞ்ச நாளாகத் தானே கடுகடுப்பாக இருக்கிறாள். தன்னுடைய சிறு வயதில் தான் ஒரு அனாதையாக அந்த வீட்டிலே அடியெடுத்து வைத்ததிலிருந்து, எத்தனை பாசத்தோடு தன்னைக் காப்பாற்றி வந்தாள். ஒரு தாயின் அன்போடு அல்லவா தன்னைப் பேணி வளர்த்தாள். இப்பொழுது தன்னுடைய பருவம்—சந்திரிகா பூரணமாக உணர்ந்தாள் அதை—தன்னுடைய பருவம், கல்யாணி தன்னைப் பற்றி வித்தியாசமாக நினைக்கும்படி செய்கிறது. இதிலென்ன தவறு? போதாத குறைக்கு அந்தப் பாழாய்ப் போகிற நாகரத்தினம் வேறு வந்து விஷப்புகை போட்டுக் கொண்டிருக்கிறாள்!

சந்திரிகாவுக்கு மனம் குமைந்தது. எத்தனை நாள் இந்தச் சூழ்நிலையில் தான் இப்படியே வாழ்க்கை நடத்துவது. இதையெல்லாம் நினைத்தால் இந்த நடனமும் வேண்டாம், 'நடனமணி' என்ற பேரும் வேண்டாம். கல்யாவது கனிமண்ணாவது. அந்தப் பழைய பிச்சைக்கார வாழ்க்கை எத்தனையோ மேல் என்று தோன்றுகிறது.



இப்படி எண்ணியதும் சந்திரிகாவுக்கு இதயம் விம்மியது. 'அந்தப் பிச்சைக்கார வாழ்க்கை. ஆமாம் எண்ணிப் பார்த்தால் அதுவே மேல்! சிரமம் எல்லாம் தனக்குத் தான். பிறர் யாருக்கும் தன்னால் என்னத் தனை இடையூறும் கிடையாது!'

மனக் கொதிப்பினால் 'இப்படி ஒரு எண்ணம் உண்டாகவே, இந்த நினைப் பின் பயங்கரத்திலே சந்திரிகாவுக்குக் கண் ணீர் பெருகி வடிந்தது.

'நானும் அவரும் எல்லைக் கோட்டுக் குள்ளேதான் இதுவரை இயங்கி வந்திருக் கிறோம். ஆனால் உலகம் இதைக் கண்டதா? உலகத்தார் இதை நம்புவார்களா? உலகத் தாரைப் பற்றிச் சொல்வானேன்! இதே வீட்டில் சதா வாழ்கிற இந்த வீட்டின் தலைவி, நாயகி, யஜமானி, கல்யாணி யம்மாளே இதை நம்ப மாட்டாளே!'



இப்படி எண்ணியதும் சந்திரிகாவுக்குக் கண்ணீரை அடக்க முடியவில்லை. விம்மி விம்மி அழுதாள் அவள்.

"சந்திரிகா!" என்று குரல் கேட்டது. அது ரவிந்திரன்தான். மாடி ஜன்னல் வழியாக எட்டிப் பார்த்தாள், சந்திரிகா, கீழே! ரவிந்திரனும் ராமநாதனும் வாச லில் நின்றுகொண்டிருந்தார்கள். கல்யாணி அம்மாள் கதவைத்திறந்த சப்தம் கேட்டது.

'இவருக்கும் நுட்பம் தெரிவதில்லை. வரும்போதே "சந்திரிகா" என்று ஏன் தன் பெயரைச் சொல்லிக் கூப்பிடுகிறார்? கல் யாணி யம்மாளைக் கூப்பிட்டால் என்ன! ஐயோ! இவருடைய அளவற்ற, உண்மை யான, பரிசுத்தமான இந்த அன்பு எங்கே கொண்டு விடுமோ தெரியவில்லையே!' என்று நினைத்து மீண்டும் கண்ணீர் வடித் தாள் சந்திரிகா.

"சந்திரிகா! இங்கே வா! நம்ப ராம நாதன் வந்திருக்கிறார்!" என்று கூப்பிட் டான் ரவிந்திரன்.

"கல்யாணி! ராமநாதனுக்குக் காப்பி கொண்டு வா! அத்தோடு நம்ப புதுவீட்டு ஸ்பெஷல் முறுக்கும், தட்டையும் கொண்டு வா!" என்று கல்யாணிக்குச் சொன்னான்.

ரவிந்திரனும் ராமநாதனும் நாற்காலி களில் உட்கார்ந்து கொண்டார்கள். சந்தி ரிகா மாடியிலிருந்து கீழே வந்தாள்.

"ராமநாதனுக்குத் தில்லியில் உத்தியோ கம் ஆகியிருக்கிறது. புறப்படுகிறார்!" என்றான் ரவிந்திரன்.

"தில்லிக்கா? பெரிய ஊர்தான்!" என்றாள் சந்திரிகா.

"பெரிய ஊர். பெரிய ஸ்தாபனத்தில் பெரிய உத்தியோகத்தில் போகிறார்!"

"அப்படி யென்றால்?" என்று கேட் டான் கல்யாணி, கையில் ஒரு தட்டோடு வந்து கொண்டே.

"சந்திரிகா, நீ மாடியிலே அப்புலிங்கம் கொண்டு வந்து போட்டிருக்கிறாரே ஒரு மேஜை, அதற்குள் ஒரு சிறு டைரி இருக் கிறது. அதைக் கொஞ்சம் எடுத்துக் கொண்டு வா. இவருடைய தில்லி விலா சத்தைக் குறித்துக் கொள்ளுவோம்!" என்றான் ரவிந்திரன்.

சந்திரிகா மாடிப் படிகளிலே ஏறினாள். ஏறும்போதே ரவிந்திரனையும் ராமநாதனை யும் பார்த்தாள். 'எத்தனை பிரியத்தோடு இந்த ராமநாதனுடன் பேசுகிறார்! ஆனால் அன்று இரவு ஐந்து நிமிஷத்துக்குள் எத்தனை சந்தேகப்பட்டு விட்டார்! ஆனால் அன்று இரவு அந்த மாதிரி ராமநாதன் உதவிக்கு வந்திரா விட்டால் என்ன விப ரீதம் ஆகியிருக்கும்! அந்தத் திருடன் என்ன நோக்கத்தோடெல்லாம் குதித்தானோ!'— இந்த மாதிரி எண்ணிக் கொண்டே மாடிப் படிகளில் நிதானமாக ஏறி நடந்தாள் சந்திரிகா!

"தில்லியில் என்ன உத்தியோகம்?" என்று கேட்டான் கல்யாணி.

"செய்தி ஸ்தாபனத்தில் முக்கியமான உதவி ஆசிரியர்" என்றான் ரவி.

"இப்பொழுதும் அப்படித்தானே ஒரு உத்தியோகம் அவருக்கு?"

"இப்பொழுது ஒரு பிரபல தினப் பத் திரிகைக்குத் திருச்சியின் நிருபராக இருக் கிறார். இனிமேல் தினப் பத்திரிகைகளுக்கு எல்லாம் செய்திகள் அனுப்புகிற பெரிய அகில உலக செய்தி ஸ்தாபனத்தின் தில்லிக் காரியாலயத்தில் செய்திகளை வழங்குகிற இலாகாவில் உதவி ஆசிரியர்!"

இதற்குள் சந்திரிகா டைரியோடு மாடியி லிருந்து கீழே இறங்கினாள்.

"என்ன சந்திரிகா! ராமநாதன் இனி மேல் வட இந்தியராகவே ஆகி விட்டார்! ஆகையினால் இனிமேல் அவரோடு ஹிந்தி யில்தான் பேச வேண்டும்! க்யாஜி! பர்மா யியே!" என்றான் ரவி, அவனுக்குத்

தெரிந்த இரண்டொரு ஹிந்துஸ்தானிச் சொற்களைத் தமாஷாகக் கலந்துகொண்டே!

"ஹிந்தியா! நானே இனிமேல்தான் படித்தாக வேண்டும்!" என்று சொன்னான் ராமநாதன்.

"படிப்பதென்ன! தில்லியிலே இருந்தால் தானாக வருகிறது. வடக்கே யெல்லாம் ஒருவரோடு ஒருவர் இங்கிலீஷில் பேச மாட்டார்களாமே! ஹிந்தியிலேதானே பேசுவார்களாம்!" என்று ஒரே வியப்போடு கேட்டாள் சந்திரிகா.

"அப்படியில்லை. வடக்கத்தி மனிதர்கள் ஒருவரை யொருவர் சந்திக்கும்போது கூடியவரை ஹிந்தியிலேதான்பேசுவார்கள். இங்கிலீஷை அவ்வளவாகக் கையாளுவதில்லை. ஆனால் தில்லியிலேதான் தமிழர்கள் ஏராளம் ஆயிற்றே. அவர்கள் இங்கிலீஷிலேதான் பேசுவார்கள்!"

"அப்படி யென்றால்?" என்று ஆச்சரியத்தோடு கேட்டாள் கல்யாணி.

ராமநாதன் சொன்னான்: "இங்கிலீஷ் ஞானத்தில் தென் இந்தியர்களுக்கு ஈடு இணையே கிடையாது, அம்மா! நம்முடைய தமிழர்களுக்கு எந்த பாஷையும் இலகுவில் வந்து விடும் என்று உலகெங்கும் பெயராயிற்றே!"

"தமிழைத் தவிர!" என்று ஒரு போடு போட்டான் ரவி.

"அப்படியில்லை, மிஸ்டர் ரவி! உத்தியோக நிமித்தமாக இங்கிலீஷை அதிகமாகப் பழகிப் போய் விட்டதால் அப்படி யிருக்கிறார்கள். மற்றப்படி தமிழில் அவர்களுக்கு எத்தனை மோகம் தெரியுமா! அதிலும் தமிழ் நாட்டில் உள்ளவர்களைவிட தில்லி, கல்கத்தா, பம்பாய் முதலிய தொலை தூரங்களில் இருப்பவர்களுக்குத் தான் தமிழில் ஆர்வம் அதிகம். தில்லியில் இப்பொழுது தமிழர்கள் எல்லாம் சேர்ந்து தங்களுக்குள் ஒருவருக்கொருவர் தமிழிலேயே பேச வேண்டும், தமிழ் நாட்டின் கலைகளை வளர்க்க வேண்டும் என்றெல்லாம் எண்ணிச் சங்கங்கள் நடத்துகிறார்கள்!"

"அப்படி யென்றால் நம்முடைய சங்கீதத்தில்கூட அவர்களுக்கு அபார அக்கறை இருக்குமே" என்று சந்திரிகா கேட்பதற்குள் ராமநாதன் சொன்னான்:

"சங்கீதமா! நம்முடைய சங்கீதத்தை வளர்க்க என்றே தனித் தனியாகச் சங்கங்கள் அமைத்திருக்கிறார்கள். நாட்டிய சங்கங்களே நாலைந்து இருக்கின்றன!" என்று கூறினான் ராமநாதன்.

"நாலைந்தா! அப்படியானால் தானே ஒன்றுக் கொன்று சண்டை போட முடியும்! தமிழர்கள் அல்லவா நாம்!" என்றான் ரவி!

"அப்படியில்லை ரவி. அங்கே அவர்களுக்குள் உள்ள ஒற்றுமையும் அக்கறையும் இங்கே நமக்குள் கிடையாது. நான் வடக்கே போன பிறகு வாருங்களேன். உங்களுக்கும் சந்திரிகாவுக்கும் 'ரிஸெப்ஷன்' ஏற்பாடு செய்கிறேன். நேரிலே பார்த்தால்தான் அங்கே நம் மனிதர்கள் செய்கிற அற்புதமான சேவை உங்களுக்குத் தெரியும்!" என்றான் ராமநாதன்.

சாப்பிட்டுக் கொண்டே வட நாட்டுத் தமிழர்களைப் பற்றி மிக்க பெருமையோடு விமர்சனம் செய்தான் ராமநாதன்.

"நீங்கள் எப்பொழுது புறப்படவேண்டும்?" என்று கேட்டாள் கல்யாணி.

"நாளைக்கே புறப்படும்படி தந்தி வந்திருக்கிறது. டாக்டரும் அப்புவும் ஊரில் இல்லையே யென்றுதான் யோசிக்கிறேன்! தில்லிக்குத் தந்தி கொடுத்துக் கேட்டிருக்



கிறேன். பதில் வந்ததும் தெரியும், எப்பொழுது புறப்பட வேண்டும் என்று!" என்றான் ராமநாதன்.

"இங்கிருந்து சென்னைக்குப் போய்த்தானே தில்லிக்கு ரயிலேற வேண்டும்!" என்று கேட்டாள் சந்திரிகா.

"ஆமாம், நாளைக்குத் திருச்சியிலே புறப்பட்டால் நாலாம் நாள் தில்லி போய்ச் சேருவேன்!" என்றான் ராமநாதன்.

"இடையில் ஒரு நாள் சென்னையில் தாமதமோ?" என்று கேட்டான் ரவி.

"ஆமாம், சென்னையில் என்னுடைய தங்கை இருக்கிறாள். அவளைப் பார்த்து விட்டுப் போக வேண்டும்!" என்று சொன்னான் ராமநாதன்.

"உங்களுக்கு எத்தனை சகோதரிகள்?" என்று கேட்டாள் கல்யாணி.

"ஒரு அக்காளும் ஒரு தங்கையும். அக்காள் பம்பாயில் இருக்கிறாள். மாதுங்காவில் அவள் ஒரு சேவா சங்கம் வைத்து நடத்துகிறாள். அவள் கணவருக்கு ஆபீஸ்

நேரம் போகப் பாக்கி நேரமெல்லாம் தேச சேவைதான். இப்பொழுது கூட ஒரு நாட்டியப் பள்ளிக்கூடம் ஆரம்பித்திருக்கிறார்களாம், நம்முடைய தென்னாட்டுக் குழந்தைகளுக்கு என்று!"

இப்படிச் சொல்லிக் கொண்டே ராமநாதன் எழுந்தான்.

"ஒருதரம் பம்பாய்க்குப் போய் வர வேண்டும் என்று சொல்லிக் கொண்டிருந்தீர்களே, மிஸ்டர் ராமநாதனுடைய அக்காளின் விலாசத்தை வாங்கிக் கொள்ளலாமே!" என்று சொன்னாள் சந்திரிகா, ரவீந்திரனைப் பார்த்து.

"சபாஷ்! நல்ல வேளை நினைப்பூட்டினாய். அந்த டைரியை எடுத்து வருகிறாயா?" என்றான் ரவி.



சந்திரிகா மாடிப் படிகளிலே மீண்டும் ஏறிச் சென்றாள்.

"எந்த வீட்டுக்குப் போனாலும் நமக்கு என்று ஒரு மாடியும் படியும் கிடைத்து விடுகிறது!" என்று எண்ணினாள் சந்திரிகா, படிகளில் ஏறிக் கொண்டே. அந்த எண்ணத்தினால் ஏற்பட்ட உணர்ச்சியில் விவரிக்க முடியாத துன்பமும் சொல்லொணாத ஏக்கமுமே கலந்திருந்தன.

* * *

ராமநாதனை அனுப்பி விட்டு ரவீந்திரன் அந்த நாற்காலியில் வந்து உட்கார்ந்தபோது, கல்யாணி அம்மாளுடைய முகத்தில் ஒரு கடுகடுப்பு படர்ந்திருந்ததைக் கவனித்தான்.

"என்ன கல்யாணி! புது வீடு உனக்குத் திருப்திதானே?" என்று கேட்டான் ரவி.

"ஓ! திருப்திதான்" என்று சொன்ன கல்யாணி, பளீர் என்று இரண்டு வார்த்தைகளைச் சேர்த்தாள்.

"வீடெல்லாம் திருப்திதான்!" என்றாள் கல்யாணி.

"அப்படியென்றால்?" என்று கேட்டான் ரவி.

"வீடு புதியதுதான், மற்றப்படி எல்லாம் பழைய—"

"கல்யாணி! நீ பழையபடியும் உன்னுடைய சண்டையை ஆரம்பிக்கப் பார்க்கிறாய்!" என்றான் ரவி.

"இதிலென்ன சண்டை? புதிய வீட்டுக்கு வந்த பிறகாவது நமக்கு நல்ல காலம் பிறக்காதா என்று ஆசைப்படுவது தப்பா?" என்று கேட்டாள் கல்யாணி. அவளுக்குக் கண்ணீர் வந்தது.

"இப்பொழுது உனக்கு என்ன கெட்ட காலமாம், தெரியவில்லையே!" என்று உரத்த குரலில் கேட்டான் ரவி.

சந்திரிகா மாடிக்குப் போய் ஓரே மௌனமாக உட்கார்ந்து விட்டாள். கீழே குரல் வலுக்க வலுக்க, சந்திரிகாவுக்கு இதயம் படபடத்தது.

"சாமான்களைக்கூட அடகு கொடுக்கலாம். ஆனால் மனிதர்களை அடகு கொடுக்காமல் வாழக் கூடிய காலம் வராதா என்றுதான் பார்க்கிறேன். நீங்கள் இழந்த இழப்புக்கெல்லாம் தலையை ஆட்டிக் கொண்டிருக்க நான் என்ன பெருமாள் மாடா! நான் உங்களை மாலையிட்ட மனைவி என்ற நினைப்பு உங்களுக்கு இருந்தால் தானே. நானும் ஒரு பெண்தான் என்ற உணர்ச்சி உங்களுக்கு இருந்தால்தானே!" இப்படிச் சொல்லிக் கொண்டே இதற்கு மேல் வார்த்தை தடைப்பட்டு, கல்யாணி அழுதுகொண்டே கூறினாள்:—

"உங்களைச் சொல்லிக் குற்றம் இல்லை. பெண்ணாகப் பிறந்திருந்தால் அல்லவா என்னுடைய இந்த உணர்ச்சிகள் எல்லாம் உங்களுக்குப் புரியும்!"

"நானும் ஒரு புடவையைக் கட்டிக் கொள்ளட்டுமா, உன்னுடைய முட்டாள்தனத்தைப் புரிந்து கொள்ள!" என்று கேட்டான் ரவி.

"புடவையைக் கட்டிக் கொண்டிருக்கிறவர்களுக்கெல்லாம் என்னுடைய உணர்ச்சி புரிந்து விட்டதா?" என்று கேட்டாள் கல்யாணி. அந்தக் கேள்வி மாடிப் படிகளிலே ஏறிச் சென்று, சந்திரிகாவின் இதயத்திலே நாகாஸ்திரத்தைப் போன்று 'விண்' என்று தைத்தது.

"என்ன சொன்னாய் கல்யாணி?" என்று எழுந்தான் ரவீந்திரன்.

கல்யாணிக்கும் உணர்ச்சி அதிகமாயிற்று. மரப்பாச்சிக் கல்யாணம் அத்தனை தூரம்

கையை வெட்டிக் கொண்டு விட்டேன்!

உடனே– 'டெட்டாலை' எடு!



நம்மைச் சுற்றி எங்கும் பறவியிருக்கும் கொடிய வியாதிகளை உண்டாக்கக்கூடிய கோடிக்கணக்கான கிருமிகளில் சிலவற்றை நாம் பார்க்கக்கூடுமானால் மிகச் சிறிய வெட்டுகளையோ, சிராய்ப்புகளையோ அலட்சியம் செய்ய மாட்டோம். குண்டூசி முனையின் அளவு போன்ற காயங்களிலும் கண்ணுக்குத் தென்படாத இக்கிருமிகள் விஷ நோய்களை பரப்பக் கூடும். உங்களையும் உங்கள் குடும்பத்தினரையும் 'டெட்டால்' உபயோகித்து காப்பாற்றிக் கொள்ளுங்கள். 'டெட்டால்' மிகவும் பத்திரமானதாகையால் டாக்டர்கள் அதை பிரசவ சமயங்களில் சிபார்சு செய்கிறார்கள். ஏனெனில் இச் சமயத்தில் கர்பாசய மார்கத்தில் உண்டாகும் சிறிய வெட்டுக் காயமும் பிரசவ ஜுரத்தையும், இதர கொடிய துன்பங்களையும் நிரந்தரமான கர்பஹீனத்தையும் விளைவிக்கக்கூடும்.

நோய் வரும் முன்பே பாதுகாத்துக் கொள்ள

'DETTOL'

டாக்டர்கள் உபயோகிக்கும் கிருமிநாசினி

கையிருப்பாக வீட்டில் 'டெட்டால்' வைத்திருங்கள்:

சொந்த சுகாதாரத்திற்கும் வீட்டுத் துணிமணிகளை சுத்தம் செய்வதற்காகவும் 'டெட்டாலை' உபயோகியுங்கள் (நோயாளிகள் இருக்கும் அறையில் 'டெட்டாலை' தெளியுங்கள்) விஷ நோய்களை உண்டாக்கக்கூடிய துர்நாற்றம் தோன்றும் பொழுது தரைமேலும் சாக்கடையிலும் தெளியுங்கள்.







இலவசம்

'மாடர்ன் ஹைஜீன் பார் விமென்' என்ற இலவசப் புத்தகத்தைப் பெற அட்லாஸ்புள் (ஈஸ்ட்) லிட்., இலாகா EB-2 தபால் பெட்டி நெ. 664, கல்கத்தா-1 விலாசத்திற்கு எழுதுங்கள்.

DI-2 AEL 191

அவளுடைய உள்ளத்தைக் கிளறி விட்டிருந்தது. இப்பொழுது கணவன் தன்னிடம் கொஞ்சமும் அநுதாபமே இல்லாமல் பேசுவது, அவளுடைய உள்ளத்தின் வேகத்தைப் பன்மடங்காக்கிற்று.

"என்ன சொன்னேன்! நான் சொன்னதில் என்ன தவறு? புல்லாங்குழலை அடகு வைத்தாயிற்று நீங்கள். நானோ அந்தப் புல்லாங்குழலுக்கு உரிய மனிதரையே அடகு கொடுத்திருக்கிறேன். எத்தனை பேர் இந்த வீட்டுக்கு வந்து காப்பியும் டிபனும் சாப்பிட்டுக் கொண்டே கதை அளக்கிறார்கள். ஒருவருக்காவது கண் இருக்கிறதா? ஒருவருக்காவது இதயம் இருக்கிறதா? ஒருவருக்காவது......"

"நிறுத்து, கல்யாணி. ஏற்கனவே ஆஸ்பத்திரியில் இருந்து உன்னுடைய உடம்பு பலவீனமாக இருக்கிறது. இப்பொழுது என்னைக் கோபப்படுத்துகிறாய். விபரீதம் ஆகப் போகிறது. சொல்லி விட்டேன்!" என்றான் ரவி.

"விபரீதந்தானே! அது ஆகி எத்தனையோ நாள், எத்தனையோ வருஷம் ஆயிற்றே. அதைவிடப் பெரிய விபரீதம் என்ன ஆக வேண்டும் இனி......"

"கல்யாணி!" என்று ஒரு கதறல் கேட்டது! அப்படியே பதறி யடித்துக் கொண்டு கீழே ஓடி வந்தாள் சந்திரிகா! இதற்குள் நாற்காலியை வேகமாகத் தூக்கிக் கொண்டு நின்றான் ரவி.

"ஐயோ! இதென்ன இது! சத்தியமாகச் சொல்கிறேன். அதைக் கீழே வையுங்கள்!" என்று கூப்பாடு போட்டாள் சந்திரிகா.

"போடுங்கள். அந்த நாற்காலியை என் தலைமேலே போடுங்கள். நான் ஒழிந்து போகிறேன். நான் ஒருத்தி எதற்காகக் குறுக்கே நிற்க வேண்டும்!" என்று கதறினாள் கல்யாணி.

"அம்மா! நீங்களும் சத்தம் போடாதீர்கள். பங்களாவில் பெரிய மிராசுதார் இருக்கிறார். அவர் காதில் விழப்போகிறது!" என்றாள் சந்திரிகா.

மிராசுதார் இருக்கிறார் என்ற வார்த்தை வந்ததும்தான் ரவீந்திரன் சுய நினைவுக்கு வந்தான். புதிய வீடு என்பதும், இது ஆண்டார் தெரு என்பதும், தாயுமானவர் சந்நிதி என்பதும், ஒரு விநாடி அவனுடைய நினைவிலே சுழன்றன.

அடுத்த கணம் கல்யாணி அம்மாள் முந்தானையில் முகத்தைப் புதைத்துக் கொண்டே பூஜை அறைக்குள்ளே போய், குத்து விளக்குக்கு முன்னால் தரையிலே தடால் என்று விழுந்து விம்ம ஆரம்பித்து விட்டாள். ரவீந்திரன் நாற்காலியைத் 'தொப்' என்று கீழே வைத்து விட்டு, அருகிலே இருந்த சோபாவில் உட்கார்ந்தவாறு ஒரே மௌனத்தில் ஆழ்ந்தான்.

மாடிக்குச் சென்ற சந்திரிகா ஆற்றொணாத ஏக்கத்தில் மூழ்கினாள்.

"நான் ஒருத்தி இந்த வீட்டிலே நுழைந்து எத்தனை விபரீதங்களுக்குக் காரணம் ஆகிறேன். ஒரு நாள் இல்லாவிட்டால் ஒரு நாள், நிச்சயம் இந்த நாற்காலிதான் கல்யாணி அம்மாளுக்கு யமனாக நிற்கப் போகிறது. ஐயோ! அவருக்கு என்னிடம் உள்ள பாசம் கல்யாணி அம்மாளுக்கு யம பாசமாக அல்லவா போய்விடும் போலிருக்கிறது. சந்தேகம் இல்லை!" என்று நினைத்தாள் சந்திரிகா.

"தொட்டால் சுருங்கி என்று ஒரு செடி இருக்கிறதே, அப்படி யல்லவா இருக்கிறது இந்த வீட்டின் உறவு நிலை. லேசாகக் காற்று அடித்தால் போதும் போலிருக்கிறதே!" என்று எண்ணியதும் சந்திரிகாவுக்கு ஒன்றுமே ஓடவில்லை.

'நான் ஏன் இப்படி இந்தக் குடும்பத்துக்கு யமனாக வந்து வாய்க்க வேண்டும்? இந்த யமனுக்கு யமன் வந்து விட்டால், இந்தத் துன்பத்துக்கும் விடிவு உண்டாகி விடுமே! எனக்கு யமன் வருவதுதானா ஒரு பெரிய காரியம்! கஷ்டமான காரியம்? காவேரி பெருகி ஓடுகிறது. இந்தத் திருச்சியில் மரணம் ஒரு சிரமமான காரியமா! சிறு பிள்ளைகள் மண்டபத்திலே யிருந்து குதிக்கிறார்கள். நீந்தத் தெரியும், அதனால் கரைக்கு வருகிறார்கள். நாம் அந்த மாதிரிக் குதித்து விட்டால்...? என்னைப் போன்ற தாயற்ற அனாதைகளுக்குத் தாயும் தந்தையும் அந்தக் காவேரி அன்னைதானே!'

இப்படி எண்ணினாள் சந்திரிகா. அவளுடைய உள்ளத்தில் இந்தத் துன்பங்களுக்கெல்லாம் வேறு விதமான முடிவு இருப்பதாகத் தோன்றவில்லை. அவளுடைய மனக் கண்ணில் காவேரி நதியும், அதனுடைய வெள்ளப் பெருக்குமே தான் பொங்கி நின்றன. அப்படியே அறைக்குள்ளே எழுந்து போனாள். மேஜைமேல் இருந்த காகிதக் கொத்திலிருந்து ஒரு தாளைக் கிழித்தாள். அறைக் கதவைத் தாளிட்டுக் கொண்டு விறு விறு என்று வேகமாக எழுத ஆரம்பித்தாள் சந்திரிகா. அவளுடைய உள்ளத்தின் கொந்தளிப்பு அதிகமாக அதிகமாகக் கண்ணீர்த் துளிகள் அந்தக் கடிதத்திலே சொட்டுச் சொட்டாக உதிர்ந்தன.

சந்திரிகா இப்படித் துயரத்தோடு கடிதம் எழுதிக் கொண்டிருந்த போதுதான், மலைக் காட்டிலே ஆலமரத்தடியில் பிரிவு உபசார மகாநாடு கோலாகலமாக நடந்து கொண்டிருந்தது.

(தொடரும்)

Printed & Published by T. Sadasivam at the "Kalki" Press, No. 20, Dr. Guruswamy Mudaliar Road, Kilpauk, Madras - 10. Editor : Mi. Pa. Somasundaram

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon

